
தீபாவளி
சிறப்பிதழ்

கல்கி


KALKI
10.11.85
௹ 1.50



கங்கை சுத்திகரிப்பு-
ஒரு பாவ மன்னிப்பு!



உங்கள் விருப்பம்போல் தேர்ந்தெடுத்து அணிந்து மகிழுங்கள்



மஃபத்லால் ஷர்டிங்ஸ். வித விதமான ப்ளெயின் துணிகள். நவீன ப்ரிண்டுகளும் உண்டு. பருத்தித் துணிகள். பாலியஸ்டர் ப்ளெண்டு களும் உண்டு. மென்மையானது. அழகிய டிசைன்கள் கண்கவர் வண்ணங்களில் பெறுங்கள்.

நீங்கள் விரும்பியதைத் தேர்ந்தெடுத்து அணியுங்கள். பார்ப்பவர் வியப்பதைக் காணுங்கள்.

வாருங்கள்! உங்கள் அருகிலுள்ள மஃபத்லால் ஃபேப்ரிக்ஸ் அங்கீகாரம் பெற்ற ரீடெய்ல் மற்றும் இதர கடைகளில் எமது மிக நவீன டிசைன்களைக் காணுங்கள், தேர்ந்தெடுங்கள்.


மஃபத்லால்

— நம்பிக்கைக்குப் பெயர் பெற்

மஃபத்லால் ஃபேப்ரிக்ஸ்

மஃபத்லால் இண்டஸ்ட்ரீஸ் லிட் (நியூ ஷொர்ராக் மில்ஸ்) மற்றும் மஃபத்லால் ஃபைன் ஸ்பின்னிங் & மேன்யுஃபேக்சரிங் கம். லிமிடெடின் ரெஜிஸ்டெர்டு ட்ரேட் மார்க்.

CHAITRA-B-MF 441 TAM



சிரிப்பு ஸ்நானம்



''பஞ்சாயத்து தேர்தல் வெடின்னு புதுசா சொல்றீங்களே என்ன சார்?''

''வெடிக்கற மாதிரி இருக்கும்; கடைசி வரை வெடிக்காது!''

— கீழை அ. கதிர்வேல்.

ஒருவர்: ''காய்கறி கடைக்காரர் பட்டாசுக்கடை வைச்சது தப்பாப் போச்சு...''

மற்றவர்: ''ஏன் .....?''

முதலாமவர்: ''ஏதோ ஞாபகத்துல தண்ணி தெளிச்சு வைச்சுட்டார்....!''

— வி. சாரதி டேச்சு.





பியூன்: ''தீபாவளி இனமை அப்புறம் இப்புறம்னு கடன் சொல்லாம ரொக்கமா கொடுக்கிறவங்களுக்கு ,ஐந்து சதவிதம் ரிபேட் கொடுக்கிறேன்.

— கீழை அ. கதிர்வேல்.



''உனக்கு தீபாவளி பிடிக்குமா? பொங்கல் பிடிக்குமா?''

''பொங்கல்தான் பிடிக்கும்.''

''ஏன்?''

''பொங்கலைச் சாப்பிடலாம்! தீபாவளியை சாப்பிட முடியாதே!''


— கடலூர் கன்னியப்பன்.

''மாப்பிள்ளை ஏன் கொல்லைப்புறமா வர்றார்?''

''தலை தீபாவளிக்கு ஸ்கூட்டர் வாங்கித் தரலேன்னு வாசலை மிதிக்க மாட்டேன்னு சத்தியம் பண்ணியிருக்காரே!''

— கீழை அ. கதிர்வேல்.





• ஹரித்வாரத்தில்...

கங்கை சுத்திகரிப்பு



• ஹரித்வாரத்தில் மாலையில் ஹாரத்தி எடுப்பதற்கு முன் கூடும் கூட்டம். தண்ணீருக்கு நடுவில் உள்ளது கங்கா தேவி மந்திர்.

ஸ்வாமி சிவானந்தர் ஜீவியவந்தராக இருந்த பொழுது ரிஷிகேசத்தில் அவரை அவ்வப்பொழுது தரிசிக்கும் பாக்கியம் எனக்குக் கிடைக்கும். நான் ரிஷிகேசம் சென்று ஒரு நாளில் திரும்புவது என்பது கிடையாது. "நகர வாழ்க்கைதான் நரக வாழ்க்கை ஆகி வருகிறதே. ஏன் டில்லி, டில்லி என அலட்டிக் கொள்கிறாய்?" என்று அன்பாகச் சொல்வார்.

முதல் தடவை அவர் தங்கும் அறைக்குக் கிட்டேயே இருந்தேன். காலை சுமார் நான்கு மணி இருக்கும். "ஹரி நாராயண, ஹரி நாராயண, ஹரி நாராயண, ஹரி நாராயண" என்ற இனிமையான நாமம் காற்றில் பறந்து வந்தது. நல்ல குளிர். சால்வையைப் போர்த்திக் கொண்டு வெளியே சென்று பார்த்தேன். ரிஷி ச்வரர் கங்கையை நோக்கி உட்கார்ந்து தன்னை மறந்து ஹரிநாம பஜனை செய்து கொண்டிருந்தார். இறுதியில் "கங்கா மாதாவுக்குஜே" என்றுகூவினார். அடுத்தபடி. தியானத்தில் ஈடுபட்டார். நானும் அறைக்குத் திரும்பினேன்.

இதை ஏன் குறிப்பிடுகிறேன் என்றால் ஸ்வாமி சிவானந்தருக்குக் கங்கை என்றால் உயிர். பத்ரிநாத், கேதார் நாத் செல்லும் யாத்திரிகர்கள் அவர் ஆசிரமத்துக்குத்தான் மதிய உணவையோ அல்லது இரவு உணவையோ எதிர்பார்த்து வருவார்கள். பல பந்திகள் நடக்கும். அன்னம் இடப்பட்டவுடன் அவருடைய சீடர்களில் ஒருவரான ஸ்ரீ நிர்மலா நந்தா, "கங்கா மாதாவுக்கு ஜே" என்றுசொல்லயாத்திரிகர்களும் அதைத் திருப்பிச் சொல்வார்கள். "கங்கை வெறும் நதி அல்ல. அவள் அன்னை. அவள் இல்லையேல் வடக்கத்திய மாநிலங்கள் பாலைவனம் ஆகிவிடும். கங்கையைப் புனிதமாகவைத்துக் கொள்வது எல்லோருடைய தலையாய கடமையாகும்" என்று வற்புறுத்துவார்.


அந்நாட்களில் கங்கையை அசுத்தப்படுத்துவது என்பது ஹரித்வாரத்தில் விழும் சாக்கடைகள்தான். ஹரித்வார் சென்று பார்த்தவர்களுக்குப் பல சத்திரங்கள் கங்கையின் கரையில் அமைந்திருப்பது தெரியும். உண்மையில்கங்கைதீர் கட்டடங்களின்பின்பக்கம்

உள்ள படிகளின்மேல் தவழ்ந்து செல்லும். குடிப்பதற்கு அதை உபயோகப்படுத்துவது டன் சமையல் பாத்திரங்களைச் சுத்தப்படுத்து வதற்கும் அது தோதாக அமைந்தது. இதையே சிவானந்தா கண்டித்து வந்தார்.

பின்னர் வந்தது தொழில் மயமாக்கும் கட்டம். தொழிற்சாலைகள் என்றால் அவற் றிற்கு நிரந்தர தாகம். அதற்கு ஈடு கொடுத்தது கங்கை. இந்திய மருந்துப் பொருள் நன்றாக ரசாயனப் பொருள்களைக் கொண்டு பெரிய குளங்களில் நிரப்பிச் சுத்தம் செய்த பின்னரே-சில இடங்களில் சுத்திகரிக்கப் பட்ட நீரைத் தாங்களே உபயோகித்தார்கள். அதிகப்படி நீர் கங்கையில் விடப்பட்டது.

ஆனால் சிறு தொழில்கள், நடுத்தரத் தொழில்கள் என்று வந்ததும் அவர்கள் கங் கையின் புனிதம், அந்த நீரைச் சுத்தமாகப் பாதுகாப்பது என்பதையெல்லாம் காற்றில் பறக்க விட்டார்கள். எவ்வளவு செலவைக் குறைத்து லாபத்தை அதிகரிக்க முடியுமோ அதுதானே குறி? ஆனால் நதி நீரைக் கலக்கி அதைக் கிட்டத்தட்ட விஷமாக்குவது என்ப தில் டில்லியை விட்டால் அதற்கு நிகர் கிடை யாது. இங்கு தொழிலதிபர்கள் யமுனையை மாபெரும்சாக்கடையாக்கியமுனையில்காலை எடுத்து வைப்பது என்றால் தாங்க முடியாத ஒரு அசிங்கமாகச் செய்து விட்டார்கள். பல கழிவுகள் கொண்ட கும்பியை மாபெ ரும் அளவில் டில்லி தொழிற்சாலைகள் கக்கு கின்றன—இதுவரை. சூழ்நிலைச் சுத்தம் என்ற கட்டம் வந்ததும் ரூ. 5 லட்சம் கட்சி நிதிக்குக் கொடுப்பவர்கள் ரூ. 10 லட்சம் கொடுத்தார் களே தவிர, நதியை ஆண்டவன் உண் டாக்கி மக்களுக்கு அளித்துள்ளார், அதை நாம்நாசமாக்கலாமா என்று எண்ணியதுகூட இல்லை.

டில்லிக்கு அடுத்த நாசகாரக் கேந்திரம் கான்பூர். இந்த உத்திரப்பிரதேச நகரம் ஒன்று போதும், உலகில் ஜனத் தொகை யைக் குறைக்க. இங்கு நீரைப் பீப்பாய்களில் அடைத்து அமெரிக்க, ஐரோப்பிய நாடு களில் உள்ள நதிகளில் கொட்டினால் போதும்; நதி நீரை அப்படியே அருந்துபவர் கள் ஆண்டவனின் திருவடிகளை அடைவார்



-ஒரு பாவ மன்னிப்பு!

கள் நிறுவனம் ஹரித்வாரத்துக்கும் ரிஷிகேசத் துக்கும் நடுவில் சாலையை விட்டுத் தள்ளி அமைக்கப்பட்டது. அச்சமயம் ஸ்ரீ ஜவஹர் லால் நேரு சொன்னார். "நம் நதிகள் புண் ணிய நதிகள் என்பது மட்டுமல்ல. அவை கிழக்கே செல்லச் செல்லப் பல கோடி மக்க ளுக்கு ஜீவநாடி. ஆகையால் வெகு சுத்த மான நீரைக் கலக்கி அசுத்தப்படுத்தாதீர் கள்" என்று அடிக்கடி வற்புறுத்துவார்.

நேருவின் காலத்திலேயே பாரத கனரகத் தொழிற்சாலை ஹரித்வாரத்தில் நிறுவப் பட் டது. ஆனால் இது கணிசமாகத் தள்ளிக் கொஞ்ச தூரத்தில் ராணிபூர் என்ற இடத் தில் அமைந்தது. தொழிற்சாலை கழிவுநீரை

கள்! டில்லியில்போலீஸ்நடவடிக்கைஎன்றால் 'பண மூட்டைகள்' சிறு மூட்டைகளை அனுப் பிச் சமாளிப்பார்கள். கான்பூரில் "மாபியா" என்று சொல்லப்படும் குண்டர்கள் புகார் செய்பவர்களின் விலாசம் இல்லாமல்செய்து விடுவார்கள். இந்த நிலையில் கங்கை பிரும் மாண்டக் கூவமாகத் திகழ்வதில் ஆச்சர்யம் என்ன? நதி என்பதால் நீர் ஓட்டம் உள்ளது. ஆகையால் நாற்றம் அதிகமாக இருக்காது. நாற்றம் எல்லாம் காசியில்தான்.

வாரணசி என்று ஹிந்துக்களுக்கு மகா புனிதமான யாத்திரை கேந்திரத்தில், யம பயம் இல்லை என்று ஹிந்துக்கள் நம்பி வழி படும் புண்ணிய கேந்திரத்தில், கங்கையைச் செய்யும் அலங்கோலம் வருணித்து மாளாது.

கே. ஸ்ரீனிவாஸன்

தசாஸ்வமேத காட் என்ற கரையில் கங்கை கரை ஸ்நானம், தர்ப்பணம், சிரார்த்தம் செய்தால் விசேஷம். ஆனால், இங்கு படிக் கட்டிலிருந்து தண்ணீரைப் பார்த்தால் சென்னை கச்சேரி ரோடிலிருந்து பக்கிங் ஹாம் கால்வாயைப் பார்ப்பது போல் இருக் கும். நாற்றம் என்பது இப்பொழுது உள்ள ஒன்று.

நம் சாஸ்திரங்களில் இறந்தவர்களைச் சுடுகாட்டில் அடக்கம் செய்வதைத்தான் பெரிய தர்மமாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் காசியில்,கங்கைக் கரையில் சுடுகாட் டில்அக்கினியின் எரிச்சல்இருந்துகொண்டே இருக்கும். காசியில் சாவு மேலானதுதான். ஆனால்இறந்தவர்களின் சடலங்கள்பூராவாக வேகுமுன் அவற்றை நீண்ட உருக்குக் கம்பி களால் புரட்டி வெட்டியான்கள் கங்கையில் தள்ளி விடுவார்கள் என்று முன் கூட்டித் தெரிந்து கொண்டிருந்தால் வங்காளத்தி லிருந்து வந்து நாட்கள், மாதக் கணக்கில் தங்கி சிவனடி சேர விரும்பும் பக்தர்கள் அங்கு வரவே மாட்டார்கள்.


காசியில் கங்கை படும் பாட்டை எப்படிச் சொல்வது? தெருச் சாக்கடைகளுக்கெல் லாம் புகலிடம் கங்கை; கரையோரத்தில் உள்ள தொழில்களுக்கெல்லாம் சங்கமம் கங்கை; சிறு தொழில்களில் ஏற்படும் கழிவு நீருக்குப் புகலிடம் கங்கை. காசி விசுவ நாதர், விசாலாட்சி மட்டும் நகருக்குப் பெருமை தரவில்லை. மாமேரு போல் திகழ்ந்த செம்பொன் மதன் மோகன் மாளவியா தமது இறுதி ஆண்டுகளை சர்வ கலா சாலை நிறுவிக் கழித்த இடம். நகராட்சி என்று ஒரு தண்டம் உள்ளது. காசியைப் பராமரிக்கவென்று தனி உ. பி. அரசு இலாகாவும் உள்ளது. ஆனால் நிகர பலன் எதுவும் இல்லை.

நதிகள் அசுத்தப்படுத்தப்பட்டு அதனால், தண்ணீர், குடிக்க லாயக்கில்லாமல் போவது என்பது இன்றுதான் நம் நாட்டில் காண் கிறோம். பிரிட்டன், பிரான்ஸ், மேற்கு ஜெர் மனி போன்ற நாடுகளில் வெகு அமர்க்கள மாக நதிகளை உருக் குலைத்து விட்டார்கள். பிரிட்டனில் தேம்ஸ் நதியில் சுத்திகரிப்பு நடந்து கொண்டிருந்த பொழுது நான் லண்டன் சென்றிருந்தேன். நீரை மேல் பக்கம் தேக்கி ஆற்றை வரளச் செய்திருந்தார்கள். அட்டா! என்ன காட்சி! டன் கணக்கில் காலி பீர் தகரங்கள், விஸ்கி பாட்டில்கள், தகர அடைப்பான்கள், பழைய மக்கிய துணி மணிகள் இத்யாதி.

இவற்றையெல்லாம் அகற்றி ரோடுமட்டத் திலிருந்து பக்கவாட்டை அழகிய கலர் சிமெண்ட் போட்டு நன்றாகப் போர்த்தி இன்று கரைகளெங்கும் பூங்கா ஏற்படுத்தி யுள்ளார்கள். இதைத்தான் "சுற்றுப்புறச் சீரமைப்பு (Environmental improvement) என் கிறார்கள். அத்துடன் லண்டனில் உள்ள கட்ட டங்களின்மேல் படிந்துள்ள புகைப் படிவங் களைத் தண்ணீர் போட்டுச் சுத்தம் செய்த துடன், லண்டனிலிருந்து வெகு சிறிய புகை கக்கும் தொழில்களைக் கூட வெளியேற்றி விட்டார்கள். இதனால் லண்டனைக் கவ்வும் மூடுபனி வெகு சில நாட்கள்தான் குளிர் மாதங்களில் தன் கைவரிசையைக் காட்டு கிறது. குளிர் காலத்தில் கிட்டத்தட்ட தினமும் வெயிலை அனுபவிக்கிறார்கள்.

பிரிட்டனுக்கு எப்படி தேம்ஸ் நதியோ, பிரான்ஸுக்கு அதுபோன்றுதான் ஸீன் (Sein) இதன் கரைகளில் பல பிரபல நிறுவனங்கள் அமைந்துள்ளன. அவற்றில் ஒன்று (Sorbone) சர்வ கலாசாலை. இன்று ஸீன் நதி கம்பீர மாக அசுத்த பயமின்றி ஓடுகிறது. காரணம் சுற்றுப்புறத் துப்புரவு ஜரூர்.

மேற்கு ஜெர்மனியில் 'ரைன்' (Rhine) நதி கிட்டத்தட்ட நாடெங்கும் ஓடுகிறது. இந்த நதி நீரை உபயோகிக்காத சிறு, பெரும் தொழிற்சாலைகள் அபூர்வம். இந்த நதிக்கும் வெகு பங்கரையான நிலை வந்தது. உலகக் கூப்பாடும் சேர்ந்தது. ரைன் நதி மேம் பாட்டு வாரியம் அந்நதியை இன்று கண் ணைக் காப்பாற்றுகிறது. இருகரைகளிலும் தொடர்ந்து அழகிய பூங்காக்கள் ரைன் நதி நீள நெடுக அமைந்துள்ளன. போக்கு வரத்துக்கு உபயோகப்படுவதுடன்


காசியில்...

உல்லாசப் பயணிகளுக்குப் பொழுதுபோக் காக விசேஷ விசைப் படகுகள் எத்திசை களிலும் ஓடிய வண்ணம் உள்ளன.


இத்தாலியில் கூட டைபர் (Tiber) நதியின் கதியும் வெகு மோசமாக இருந்தது. மற்ற ஐரோப்பிய நாடுகளைப் போல் அல்லாமல் வேண்டாத பொருள்களையும் உபயோகப் படுத்தப்பட்ட கார்கள் உள்பட, எல்லாவற் றையும் நதியில் உருட்டி விடுவார்கள். தொழிற் சாலைகளின் காயலாங்கடைச் சரக்குகள் கூட நதியில் ஸ்நானம் செய்த வண்ணம் இருக்கும். ஐரோப்பிய பொருளாதாரச் சமூகம் அல்லது ஐரோப்பிய சந்தை நாடு களில், நதிகள் எல்லாம் சுத்தமாக வைக்க வேண்டும் என்ற சட்டத்துடன், அதற்குத் தேவையான நிதியும் உள்ளது. ஆதலால் இத்தாலியில் கூட நதிகளுக்கு மோட்ச காலம்.

நம் நாட்டைப் பிடித்த நல்ல காலம் கங் கையைப் பற்றி பலர் கவலை கொண்டார் கள். துப்புரவு, சூழ்நிலையைச் சீர்குலைக்

காமை, முதலியவற்றில் ஆழ்ந்த அக்கறை கொண்ட பிரதமர் நம்மிடையே உள்ளார். ஸ்ரீ ராஜீவ் காந்திக்குக் கங்கையை ரைன் நதி மாதிரி சுத்தமும் அழகும் ஒருங்கே அமைந்த நதியாக்க வேண்டும் என்ற ஆசை உண்டு. இதனால் உருவானது மத்திய கங்கை வாரியம். பிரதமர்தான் இதற்குத் தலைவர்.

கங்கை வாரியத்தைப் பற்றியும் அதைப் பாழ்படுத்துவதை நிறுத்துவதற்கு உண்டாக்கப்பட்ட திட்டத்தைப் பற்றியும் எழுது முன் கங்கையைப் பற்றியும் தெரிந்து கொள்வோம். கங்கையைப் பற்றிக் கேளாத ஹிந்துக்கள் இருக்க மாட்டார்கள். ஏனென்றால் தீபாவளியன்று காலை ஸ்நானம் செய்யும் பொழுது, "கங்கே, கங்கே" என்று பெரியவர்கள் சொல்வது வழக்கம். ஸ்நானத்திற்குப் பிறகு புதிய துணிமணிகள் உடுத்தி, ஸ்வாமியை வழிபட்டு, சிநேகிதர்களைச் சந்திக்கும் பொழுது 'ஹரிஹி, கங்கா ஸ்நானம் ஆச்சா?' என்று விசாரிப்பதும் வழக்கம். இதற்கு அடிப்படை ஸம்ஸ்கிருத ஸ்லோகம்.

* கோடைக்காலத்தில் ஹர் – கி – பௌரி.



"கங்கே கங்கேதி யோப்ருயாத்
யோ ஜனனும் சதைரபி
முக்யதே ஸர்வ பாபேப்யோ
விஷ்ணு லோகம் ப்ரகச்சதி"

அதாவது ஆயிரக்கணக்கான மைல்களிலிருந்து கூட, யார் "கங்கே, கங்கே" என்று அழைத்தாலும் சகல பாவங்களிலிருந்தும் விடுவித்து, அந்த பக்தர்களை விஷ்ணு லோகத்துக்கு அனுப்புவான் கங்கை என்பது பொருள். இதனால்தான் தீபாவளியன்றாவது தெற்கு மாநிலத்தில் ஹிந்துக்கள் கங்கையை நினைவு கூருகிறார்கள்.

கங்கையைப் போன்ற பெரிய நதி இந்தியாவில் கிடையாது. ஹிமாசலப் பிரதேசம், பஞ்சாப், ஹரியானா, உத்திரப்பிரதேசம், ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், பீஹார், மேற்கு வங்காளம், டில்லி ஆகிய நகரங்களுக்கு நீர் அருள்கிறது. (யமுனையை கங்கையின் பாகமாகக் கருதுகிறார்கள்.) 6 வருடங்களுக்கு ஒரு முறை நிகழும் பாதி கும்ப மேளா, 12 வருடங்களுக்கு ஒரு முறை பூர்ண கும்ப மேளா ஆகியவை ஹரித்வார், அலகாபாத் புனித ஸ்தலங்களுக்கு லட்சக்கணக்கான யாத்திரிகர்களை ஈர்க்கின்றன. உறைந்த பனிக்கட்டிப் பிரதேசமான ஹிமாலயத்தில் திறந்த உடம்புடன் தவம் செய்யும் பல வழி சாதுக்களை இன்றும் காணலாம்.


கங்கையின் நீளம் 2525 கிலோ மீட்டர். அது வெளிப்படும் இடத்திற்குப் பெயர் கங்கோத்ரி. சங்கமமாகும் இடம் வங்காள குடாவில் கங்கா சாகர். அது 29 முதல் தர நகரங்கள், 23 இரண்டாம்தர நகரங்கள், தவிர, 50,000 மக்களுக்குக் குறைவான 48 டவுன்கள் வழியே பாய்கிறது. (ஒரு லட்சம் ஜனத்தொகைக்கு மேல் உள்ளவற்றை நகரங்கள் என்றும் 50,000 முதல் லட்சம் உள்ளவற்றை டவுன்கள் என்றும் பிரிக்கிறார்கள்.) இதில் உள்ள நகரங்களில் பலவற்றில் குழாய் மூலம் தண்ணீர் சப்ளை உண்டு. பல இடங்களில் பூமிக்குக் கீழ் சாக்கடை இருந்தாலும் சில இடங்களில் திறந்த சாக்கடைதான். அவற்றுக்குப் புகலிடம் கங்கை. இந்தியாவில் உள்ள நடு பாசனப் பரப்பில் 43 சதம் கங்கைச் சமவெளியில் உள்ளது.

கங்கை ஓட்டத்தால் அசுத்தம் ஹரித்வாரம் முதல் அலிகார் வரை அடித்துச் செல்லப்பட்டாலும் கனௌஜ், கான்பூரில் கங்கையில் ஓட்டம் கோடையில் கிடையாது. முன் கூறியபடி கான்பூரில்தான் அதிகப்படி அசுத்தம். கங்கைக்கு 60 சத நீர் யமுனை, காக்ரா, கோஸி, கண்டக் நதிகளிலிருந்து கிட்டுகிறது. கங்கையை அசுத்தப்படுத்திக் கலக்குதல் என்பது ஹரித்வாரம் – அலகாபாத் வரை வெகு அதிகம்.

கங்கை அசுத்த நிவாரண செயல்பாட்டுத் திட்டத்தில் எதிர்பார்ப்பு என்னவென்றால் டவுன், நகர சாக்கடைகள் பாய்வதையும் தொழிற்சாலைகளின் பயங்கரக் கழிவுநீர்க் கலப்பையும் தடுத்து நிறுத்தினால் 75 சதம் அசுத்தம் நின்று விடும் என்பது.

கோடையில் கும்பிநீர், பெரும்பாலும் சாக்கடைகளின் கழிவு அல்லது சிறு தொழில்களின் கழிவு இவற்றைக் கொண்டு செல்லும் வாய்க்கால் போன்றவைகளைத் தகுந்த இடத்தில் தேக்கி, அவைகளின் தண்ணீரைச் சாகுபடிக்கு உயர் மட்டத்தில் உள்ள நிலங்களுக்குப் பாசனத்துக்கு உபயோகப்படும்படி நீர் இறைக்கும் சாதனங்கள் பல இடங்களில் உள்ளன. ஆனால் முக்கால்வாசி பம்ப் செட்கள் செயல்படுவதில்லை. சில இடங்களில் சிறு சாக்கடைகளைச் சுத்திகரிப்பு நிலையங்களுக்குக் கொண்டு செல்லும் பெரிய சாக்கடைகள் திடுதிப்பென்று தடைப்பட்டுள்ளன.

கங்கை நீர் வாரியம் கங்கையைச் சுத்தப்படுத்தி இந்நதி என்றென்றும் சுத்தமாக ஓடுவதற்கு என்ன வழிகள் என்று ஆய்வு நடத்தியுள்ளது; நடத்தி வருகிறது. சாக்கடைகளிலிருந்து உண்டாகும் வாயு, நல்ல எரிபொருள். ஜீரணிக்கப்பட்ட கச்சடா நல்ல எரு. இதில் நைட்ரஜன், கந்தகம், பொட்டாஷியம் கலந்துள்ளது. வாயுவைக் கொண்டு சுத்திகரிப்பு ஆலைகளை இயக்க வேண்டும் என்பது வாரியத்



• லக்ஷ்மண் ஜூலாவில்...

தின் திட்டம். எருவை எவ்விதக் கஷ்டமுமின்றி விவசாயிகளுக்கு விற்று விடலாம். இதனால் பராமரிப்புக்கு நிதி கிட்டும்.

ஏழாவது திட்டத்தின் கீழ் பல சுத்திகரிப்புத் திட்டங்கள் மேற்கொள்ளப்படும். இதற்கென்று ரூ. 200 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டங்கள் கங்கைக் கரையில் உள்ள முதல் தர டவுன்களுக்கென்று வகுக்கப்பட்டவை. பின்னர் மற்ற டவுன்கள் கவனிக்கப்படும்.

இப்பொழுது எந்த அம்சத்தை வற்புறுத்தப் போகிறார்கள் என்றால் உடனடியாகக் கங்கையைக் குழப்பும் அம்சங்களை அகற்றுவது. இதற்கு மேற்கொள்ளப்படும் திட்டங்கள் நிதி நோக்கில்தானே நிதி உருவாக்கும் தன்மை உடையனவாக இருக்க வேண்டும். அப்பொழுதுதான் நிதி தட்டுப்பாட்டில் இந்த பம்ப் இயங்கவில்லை, அந்தச் சாக்கடை ஓடவில்லை என்று சாக்குப் போக்குச் சொல்லாது பார்த்துக் கொள்ளலாம். முதல் தர நகரங்களை எடுத்துக் கொள்ளக் காரணம் மொத்த நகர ஜனத்தொகையில் 82.3 சதம் இங்கு உள்ளது தான். இந்தப் பகுதிகளில் அசுத்த கைங்கரியத்தை நிறுத்தினால் கிட்டத்தட்ட கங்கை புனிதமாகிவிடும். தவிர, மொத்த சாக்கடைக் கழிவில் 88.5 சதம் முதல்தர நகரங்களில் உண்டாகிறது. ஆதலால் எருவை உண்டாக்கி நிரந்தரப் பராமரிப்புக்கு வகை செய்ய இங்கு கவனம் செலுத்தப்படும்.

உத்தரப் பிரதேசம், பீஹார் இரண்டிலும் சுகாதாரம், துப்புரவு, பேட்டைகள் சுத்தம் என்பதெல்லாம் மக்களுக்கும் சரி, ஆள்பவர்களுக்கும் சரி அதிகம் தெரியாத விஷயம். ஆகவே பாட்னாவிலும் சரி, வாரணாசியிலும் சரி, நகரங்களின் கழிவு ஐந்து இடங்களில் கங்கையுடன் கலக்கிறது. இரண்டு நகரங்களிலும் சாக்கடை நீர் விழுவதற்கு முன் அதைத் தடுப்பது என்பதுதான் உத்தேசம். ஆனால் அங்கு அமைக்கப்பட்டுள்ள பம்புகள் கும்பியை நதிக்குள் தள்ளவே உதவுகின்றன. ஏனென்றால் இங்கு தடுப்புச் சாக்கடைகள் இல்லை. வாரணாசியில் தடுப்புச் சாக்கடைகள் கங்கைக்குச் சரி நேராக ஓடுகிறது. இங்கு திட்டமிட்டபடி பம்புகள் இயங்கினால் கும்பி இருக்காது. ஆனால் பம்புகள் சரியானபடி இல்லாததற்குச் சாக்கு போக்குகள் சொல்லிவிடுவார்கள்.

முன் கூறிய அம்சங்களையெல்லாம் மனத்தில் வைத்துக் கொண்டு நகராட்சிகள், மாவட்ட நிர்வாகங்கள், யூனியன்கள், சாக்கடைகளைப் பழுது பார்த்து உடைந்தவற்றை ரிப்பேர் செய்வது இணைப்புகள் இல்லாத இடங்களில் அவற்றை உண்டாக்குவது, ஆங்காங்கு எரிவாயு தேவைகள் என்ன, எப்படி சாக்கடைகளிலிருந்து எடுக்கப்பட்ட குப்பை எருவை எங்கெங்கு விற்றுப் பராமரிப்புக்கு நிதி சேர்க்கலாம் என்று ஆய்வு செய்து வாரியத்துக்குத் திட்டங்களை அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுவார்கள். இத்துடன் தொழில் நிறுவனங்கள் துப்புரவில் அக்கறை கொண்டவர்களை ஒவ்வொரு கேந்திரங்களிலும் ஒத்துழைக்கும்படி கேட்டுக் கொள்ளும் வாரியம்.

யாரோ என்னவோ செய்கிறார்கள் என்று பொது மக்கள் எண்ணிவிடாமல் இருக்க, பிரசாரம் செய்யவும் கங்கையை ஏன் இவ்வளவு சிரமப்பட்டுச் சீரமைக்கிறார்கள் என்று விளக்கவும் தகுந்த நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படும்.

பாரதப் பிரதமர் மத்திய கங்கை வாரியத்துக்குத் தலைமை தாங்குவார். மற்ற அங்கத்தி

னர்கள், மத்திய நிதி மந்திரி, உ. பி., பீஹார், மேற்கு வங்க முதல்வர்கள், திட்டக் கமிஷன் உப தலைவர், திட்டத்தின் ராஜாங்க மந்திரி, சுற்றுப்புற வியவகார—காடுகள் ராஜாங்க மந்திரி, விஞ்ஞான — தொழில் நுணுக்க ராஜாங்க மந்திரி, கமிஷனின் விஞ்ஞான அங்கத்தினர் மற்றும் இரண்டு மத்திய அமைச்சு காரியதரிசிகள் நிரந்தரமாகக் கூட்டங்களுக்கு அழைக்கப்படுவார்கள்.

மந்திரிகள் கமிட்டி, நிதி திட்டங்கள் பற்றி விவாதித்துத் திட்டங்களுக்கு அனுமதி கொடுக்கும். அனுமதி கொடுத்த திட்டங்களை அமல்செய்வது மற்றொரு அதிகாரிகள் மட்டக் கமிட்டியின் பொறுப்பு. இதில் சம்பந்தப்பட்ட மாநிலங்களின் முக்கிய காரியதரிசிகள், பொதுப் பணித்துறை இயக்கங்களின் காரியதரிசிகள் இடம் பெற்றுள்ளார்கள்.

நம் நாட்டில் பெரிய மனிதர்களின் பெயரைச் சொன்னால்தான் வேலை நடக்கிறது. என்பதற்கு இந்தக் கமிட்டிகள் சான்று. பெரிய மந்திரிகள், பிரதமர், காரியதரிசிகள் ஈடுபட்டிருக்கிறார்கள் என்றால் கொத்தர்கள், சித்தாள்கள் கூட கொஞ்சம் நிமிர்ந்து உட்கார்ந்து வேலை செய்வார்கள். மந்திரிகள் கமிட்டியும், அதிகாரிகள் கமிட்டியும் கொள்கைகள், திட்டங்கள் முதலியவற்றையும், அமல் செய்யப்பட்ட இடங்களில் தண்ணீரின் தரம் எப்படி இருக்கிறது என்பது பற்றியும், நதி ஓட்டம் பற்றியும் அவ்வப்பொழுது வரும் அறிக்கைகளைக் கவனித்து, தொடர்ந்து கங்கைத் தண்ணீரின் தரம் உயர்கிறதா, அதன் கரைகள் சீராக்கப்பட்டனவா, நாற்றம் மறைந்ததா, தொழிலதிபர்களுக்கு நன்றாகக் கடுக்காய் கொடுக்கப்பட்டிருக்கிறதா என்பதை ஆழ்ந்து கவனிக்கும்.

ஒவ்வொரு மாநில அரசிலும் தட்டிக் கழிப்பது என்பது கைவந்த கலை. இம்மாதிரி நடக்கக்கூடாது என்பதற்காக மாநில அரசில் ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட இலாகாவின் மேல், பொறுப்பு சுமத்தப்படும். என்ஜினியர் வீட்டுப் பூனைக் குட்டிக்கு ஜலதோஷம், ஓவர்ஸியர் வீட்டில் காது குத்து விழா என்று சாக்கு போக்குகள் சொல்லித் தட்டிக் கழிக்க முடியாது. ஒவ்வொரு மாநிலத்திலும் பொறுப்புக் கட்டப்பட்ட இலாகாக்களின் காரியதரிசிகளின் ஒருங்கிணைப்பு கமிட்டி, திட்டங்களை அமலாவதற்கு முன் ஆழ்ந்து பரிசீலிக்கும். வேலை எப்படி நடக்கிறது, நிதி செலவு தேவை என்ன, என்ன அம்சத்தில் வாரியத்துக்குத் தகவல்கள் தேவை என்பதைக் கவனிக்கும். ஆகவே பிரதமர் முதல் ஒருங்கிணைப்பு கமிட்டி வரை ஒரே கெடுபிடி. இது தேவையான கெடுபிடி.


மேலை நாடுகளில் எப்படி எல்லா நதிகளும் நன்றாக ஓட வேண்டும், தண்ணீரின் தரம் குறையக் கூடாது, நதிக்கரையோரங்கள் ரம்மியமாக இருக்க வேண்டும் என்று நினைத்துச் செயல்படுகிறார்களோ, அதே மாதிரி நம் நாட்டிலும் மற்ற நதிகளைப் பற்றி அக்கறை காட்டப்பட வேண்டும். காவேரி, கிருஷ்ணா, கோதாவரி, நர்மதை எல்லாம் குமட்டி கலக்கும் நபர்களின் கொடுமைகளுக்கு ஆளானவைதான். காவேரிக் கரைகளில்தான் பல கிராமங்களின் ''எக்ஸ்டென்ஷன்'' (விஸ்தரிப்பு). அதில் வசிப்பவர்களுக்குக் காவேரிதான், குளிக்க, குடிக்க, துணி தோய்க்க தோது. 'குழந்தை'களுக்கு (வயதுக் கணக்கு கிடையாது) காலை, மாலைக் கடன்களைக் கழித்துச் சுத்தம்செய்து கொள்வதற்கும் தோதாக உள்ளது. இன்று துவக்கப்பட்ட துப்புரவு உணர்ச்சிக்கு உயிர் கொடுக்கக் கூடியவர்கள் மாவட்ட கலெக்டர்கள். இவர்களை முடுக்கிவிட்டால் காவேரியை ஒட்டி ஒரு கிலோ மீட்டர் இரண்டு கிலோ மீட்டர் அளவு நீட்டத்திற்கு உள்ள 'கிராமங்களுக்கு' லகான் போடலாம். தொழிற்சாலைகளில் உண்டாகும் கழிவுப் பொருள்களைப் பங்கீடு செய்வது நிர்வாகத்தின் பொறுப்பு எனலாம். கால் நடைப் பண்ணைகளின் சாணி, மூத்திரத்தை நதிகளின் கீழ்ப் பக்கம் உள்ளவர்கள் விரும்புவதில்லை என்பதை உணர்த்தலாம். சலவைத் தொழிலாளிகள் நதிகளுக்குப் பக்கம் ஊற்றுக் குட்டைகளில் சலவை செய்ய வேண்டும் என்று தாக்கீது போடலாம்.

ஒரு காலத்தில் பிராதஸ்நானம் என்பது கிராமங்களில் இன்றியமையாத பழக்கமாக இருந்தது. அலகாபாத்தில் கங்கையில் காலை நீராடாமல் தேநீர் கூட அருந்த மாட்டார்கள். அவர்கள் கங்கையை இன்று மறந்து விட்டார்கள். இன்னும் ஓரிரு வருடங்களில் இந்தப் பழக்கம் மீண்டும் ஏற்படும். ''ஹரி நாராயண'' சங்கீர்த்தனம் ரிஷிகேசத்திலிருந்து காசி வரை முழங்கும் என்று நம்புவோம். நதிகள் முழங்கினால்தான் நாடு உயரும்.

அட்டைப்படத்தில்......

• ஹர் — இ — பைரி என்பது ஹரித்வாரில் பிரதான ஸ்நான கட்டம். வலது கோடியில் கங்காதேவி கோயில்கள் உள்ளன. இங்கு மாலை நேரத்தில் ஆயிரக் கணக்கான அகல்கள் ஏற்றி நதியில் மிதக்க விடுவார்கள். இடதுபுறத்தில் கம்பீரமாக உயர்ந்து நிற்கும் மணிக் கூண்டு. மறுபுறம் தளவரிசையிட்ட தீவு போன்ற அமைப்பில் பக்தர்கள் துணி காய வைத்துவிட்டுத் தியானம் செய்வார்கள். கும்பமேளாவின் போது இடதுபுறம் பாலம் வழியே வந்து ஸ்நானம் செய்து மறுபக்கம் உள்ள பாலங்கள் வழியே வெளியேறுவார்கள்.


இந்தா புடி..
மா மா.. மா.. மா
ராஜினாமா..
ராஜினாமா..
ராஜினாமா போதுமா?..
இன்னும் கொஞ்சம் வேணுமா?
ராஜினாமா
ராஜினாமா
ராஜினாமா
ராஜினாமா
ராஜினாமா போதுமா?..
இன்னும் கொஞ்சம் வேணுமா?


ஜெனிவா சந்திப்பு
ரஷ்யா
அமெரிக்கா
அணு ஆயுதம்



தேசிய நதிநீர் பங்கீடு மையம்
இந்த ஆளை குழாய் போட விடுங்க.. சண்டை போடாம தண்ணி எடுத்துக் கிட்டுப் போகலாம்!
நாங்க எதுக்கும் பண்ணிக்கிறோம்!.. நீ உன் வேலையைப் பாத்துக்கிட்டுப் போய்யா!





கல்கி

1985 நவம்பர் 10
மலர் 44 இதழ் 15
குரோதன ஐப்பசி 25



போட்டி: எம். ஜி. ஆரின் வாரிசு யார்?

பிள்ளைகள் ஒற்றுமையின்றி ஒருவரையொருவர் ஏசிக் கொள்வதைப் பார்த்து மனம் நொந்து, ''நான் காஷாயம் வாங்கிக் கொண்டு காசிக்குப் போய்த் தொலைகிறேன்'' என்று புறப்படும் குடும்பத் தலைவன் நிலையில் இருந்தார் எம். ஜி. ஆர். பிள்ளைகளும் பெண்களும் அப்பா காலில் விழுந்து, ராஜினமா சமர்ப்பிக்க, அவர்களை மன்னித்து, மறுபடி குடும்பத் தலைவனுகவே நீடிக்கச் சம்மதித்திருக்கிருர்.

இந்தச் செயற்கை ஒற்றுமை மேல் பூச்சுத்தானே தவிர, வெடிப்பு விழுந்தது விழுந்ததுதான். உள்ளுக்குள்ளே இன்னமும் பிளவு இருக்கத்தான் செய்கிறது. அ.இ.அ.தி.மு.க. என்ற கட்டிடச் சுவர் உறுதியாக இருக்க வேண்டுமானுல் உட்கட்சி ஜனநாயகம் என்ற அஸ்திவாரம் பலமாகப் போடப்பட வேண்டும். இந்த அடிக்கல் நாட்டப்பட்டதாக அ.இ.அ.தி.மு.க.வின் சரித்திரத்திலே காணப்படவே இல்லை.

மக்களிடமும் கட்சியிடமும் எம். ஜி. ஆருக்கு உள்ள மகத்தான செல்வாக்கை இந்த நிகழ்ச்சி நிரூபிக்கத்தான் செய்கிறது. எம். ஜி. ஆர். மனம் புண்படும்படி நாம் நடந்து கொண்டால், மக்கள் நம்மை மன்னிக்க மாட்டார்கள் என்ற அச்சம் அமைச்சர்களிடம் இருக்கிறது. கூடவே—இதை அவர்கள் வெளிப்படையாக ஒப்புக் கொள்ள மாட்டார்கள் என்ருலும்—'எம். ஜி. ஆருக்கு அடுத்தபடியாக யார்? என்ற கேள்வியும் அவர்கள் உள்ளத்தில் எழுந்து விட்டது. பதவி மோகம் அவர்களில் பலரை ஆட்டிப் படைக்கிறது. நேற்று வந்த ஜெயலலிதா கட்சியை அப்படியே சுவீகரித்துக் கொண்டு விடுவாரோ என்ற கவலை உருவாகி இருக்கிறது. எனவேதான் அருவருப்பான கோஷ்டிப் பூசல்களைக் காண்கிருேம்.

எம். ஜி. ஆர். தமது வாரிசு யார் என்பதை வெளிப்படையாகச் சொன்ஞலோ, அல்லது துணை முதல்வர் என்பதாக ஒருவரை நியமித்தாலோ கோஷ்டிப் பூசல் தீர்ந்து விடாது. மாருக உள்ளுக்குள்ளே கனன்று கொண்டிருந்து சமயம் நேரும்போது எரிமலையாக வெடிக்கும்.

எம். ஜி. ஆர். தமது பொறுப்புக்களைக் குறைத்துக் கொண்டு பாரங்களைப் பிறர் தோள்களில் சுமத்த எண்ணிஞலோ, தமது உடல் நிலையை உத்தேசித்து இன்னும் சற்று ஓய்வாக இருக்க நினைத்தாலோ அல்லது அவரே விருப்பம் தெரிவித்தபடி அமைச்சரவைக்கு வெளியே இருந்தவாறு ஆதரவு தந்து வழி நடத்திச் செல்லக் கருதிஞலோ, அவர் செய்ய வேண்டியது உட்கட்சி ஜனநாயகத்தை அடிமட்டத்திலிருந்து உயர் மட்டம்வரை வளர்ப்பதுதான். இதைச் செய்யாத வரை இன்றில்லாவிட்டாலும் நாளை கட்சி பிளவு படுவது உறுதி: இத்தகைய நிச்சயமற்ற நிலையில் சுறுசுறுப்பாகச் செயல்படுவதாகத் தமிழக அரசு இராது என்பதிலும் ஐயமில்லை.

இன்னெருமுக்கியமானவிஷயம்: ஒற்றுமைஎன்றபோர்வையில்குற்றவாளிகளெனக் கருதப்படுகிறவர்கள் ஒளிந்து கொள்ள இடம் தந்து விடக் கூடாது. என்னதான் தாம் குற்றமற்றவர் என்று காளிமுத்து திரும்பத் திரும்பப் புலம்பிய போதிலும் ஸி. பி. ஐ. அவர் மீது சந்தேகப்பட்டு ராபின் மெய்னுக்கும் அவருக்கும் தொடர்பிருந்ததாகவும் அதற்குச் சாட்சியம் இருப்பதாகவும் பகிரங்கமாக நீதி மன்றத்திலேயே அறிவித்தும் விட்டிருக்கிறது. அவர் பொறுப்பிலிருந்த இலாக்காவின் பணத்தைப் பெருமளவில் வைப்பு நிதியாகப் பெற முடியும் என்ற ஆசையில்தான் ராபின் மெய்னுக்குக் கடன் தந்து பாங்குகள் ஏமாந்திருப்பதாக பாங்கு அதிகாரியின் வாக்கு மூலமும் உள்ளது. இந்நிலையில்—சட்டம் என்னவாயிருந்தாலும், நாளைய கோர்ட்டுத் தீர்ப்பு எப்படி இருக்குமாஞலும்— ஜனநாயக தர்மப்படி காளிமுத்து அமைச்சரவையில் நீடிப்பது தவறு: அவரை அமைச்சராக நீடிக்க எம். ஜி. ஆர். அனுமதிப்பது அதைவிடப் பெரிய தவறு!

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா—பாரதியார்.

சொர்க்கத்தின் கதவுகள்

லக்ஷ்மி

1

மாருதி நர்ஸிங் ஹோமிலிருந்து அவர்கள் வசித்த வீடு தொலைதூரத்தில் இருக்கவில்லை.

ஆனாலும் சுவாமிநாதன் மூன்று நாட்களாக வீட்டுக்கும் மருத்துவமனைக்கும் நடையாக நடந்து தொடர்ந்து மூன்று இரவுகள் கண் விழித்திருந்து ஓய்ந்து போய் விட்டிருந்தார்.

சின்ன வயதா என்ன?

வேலையினின்று அவர் ஓய்வடைந்து இரண்டு ஆண்டுக் காலமாகி விட்டதே?

அவருடன் வாழ்க்கையின் இன்பதுன்பங்களை முப்பத்திரண்டு வருஷங்களாகப் பகிர்ந்து கொண்ட விமலா மரணத்துடன் போராடிக் கொண்டிருந்ததைக் கண்டு அதிர்ந்து போய்விட்டார் மனிதன். ஒரே நாளில் அவருக்குப் பத்து வயதைத் தாண்டி விட்ட தளர்ச்சி ஏற்பட்டது.

யார். செய்த புண்ணியமோ? விமலா அபாய கட்டத்திலிருந்து திரும்பிவிட்டிருந்தாள். இரண்டு நாட்களாகத் தன் நினைவே இன்றிக் கிடந்தவள், அன்று நடு இரவு கண்களை விழித்துப் பார்த்தாள்.

"என்னம்மா விமலா? என்ன வேணும்?" என்று பரபரப்போடு வினவினார் அவர்.

"எத்தனை நாட்களாக நான் ஆஸ்பத்திரியில் கிடக்கிறேன்" என்று மெல்லிய குரலில் கேட்டாள் விமலா.

நினைவுவந்துவிட்டது.பேசுகிறாளே?என்ற மகிழ்ச்சியில் அவர் கண் கலங்கிப் போனார்.

"நீ ஆஸ்பத்திரிக்குவந்து இரண்டு நாட்கள்தான் ஆச்சு, ஏம்மா கேட்கிறே?"

"அப்படின்னா விடிஞ்சதும் தீபாவளியா?"

"உனக்கு உடம்பு கொஞ்சம் குணமாயிருக்கே — அதுவே நமக்குப் பெரிய தீபாவளி..." என்று மகிழ்ச்சியுடன் சொன்னார் அவர்.

"நீங்க வீட்டுக்குப் போய் ஸ்நானம் பண்ணிட்டு அலமாரி தட்டிலே வச்சிருக்கிற பூஜைவிளக்கைஏற்றி கொஞ்சம் கல்கண்டை எடுத்து வச்சு... நைவேத்தியம் பண்ணுங்கோ!"

"நீ அலட்டிக்காதே விமலா... கண்களை மூடிண்டு ஓய்வு எடுத்துக்கோ. நீ சொன்னபடி எல்லாம் நான் செய்து விடுகிறேன்..." அவள் நெற்றி மீது புரண்ட முடியைக் கையினால் ஒதுக்கி விட்டார்.

ஒரு காலத்தில் அவர் சொன்னபடிதான் அவள் நடக்க வேண்டும் என்று அதிகாரம் செய்து வாழ்ந்தவர் சுவாமிநாதன். 'தம் உறவினர்கள்தான் உலகம்' என்று நினைத்துக் கூத்தடித்தவர். அவளுக்கும் உறவினர்கள் உண்டு என்று அவர் நினைத்துப் பார்த்ததே இல்லை. ஒரு முழு நாள் கூட அவளைப் பிறந்த வீட்டில் தங்கவிட்டதில்லை. அவருக்கும் அவர் குடும்பத்தாருக்கும் உழைத்துப் போடுவதற்கு 'ஒரு உயர் மட்டத்து வேலைக்காரி' கிட்டிவிட்டாள் என்ற எண்ணம்... அவளை விரட்டி விரட்டி வேலை வாங்கி...


"நீங்க வீட்டுக்குப் போய்ட்டு வாங்க. ஸார்... அம்மாவுக்கு இப்போ உடம்பு கொஞ்சம் தேவலாம்... நாங்க ஸ்பான்ஜ் பாத் கொடுத்து உடை மாத்தறதுக்குள்ளே நீங்க தீபாவளியைக் கொண்டாடிவிட்டு வந்துவிட



லாமே'' என்று சிரித்தபடி சொன்னாள்; காலைப் பணிக்கு வந்திருந்த நர்ஸ்.

அவளை அவருக்கு ரொம்பவும் பிடித்திருந்தது. இரவுப் பணிக்கு வரும் நர்ஸைப் போல அவள் முகத்தில் கடுகை வெடிக்கவிட்டுக் கொண்டிருக்கவில்லை; அதட்டலாகவும் பேசவில்லை. அவர் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் இந்த நர்ஸ் அலுக்காமல் புன்னகையோடு பொறுமையாகப் பதில் சொன்னாள். அவளது சிரித்த முகத்தைப் பார்த்ததுமே அவரது கவலை பாதியாகிவிட்டிருந்தது போன்ற பிரமை. ''பிழைப்பாளா அம்மா... ஒரே பயமா இருக்கு?'' என்று கேட்டார் அவர்.

''நிச்சயம் பிழைச்சுடுவாங்க. இன்னும்



இரண்டு நாட்களிலே அம்மாவை வீட்டுக்கு அழைச்சுக்கிட்டுப் போகப் போறீங்க. நல்லா ஆயிடுவாங்கன்னு பாசிட்டிவா நினை யுங்கோ...'' என்று கவலையைப் போக்கினாள்.

''இல்லே... பக்கத்து அறை நோயாளி...''

''அவங்க கேஸே வேறே... இவங்களுக்கு வந்திருக்கிற தொந்தரவு வேறே... ஒரு ஆஸ்பத்திரின்னா பலவும் இருக்கும். அதையெல்லாம் நீங்க ஏன் ஸார் கண்டுக்கணும்?'' என்று படபடவென்று பேசியபடி பட்டாம் பூச்சியாக வளைய வந்த அந்த நர்ஸை அவருக்குப் பிடித்திருக்க வேறு ஒரு காரணமும் இருந்தது.

அந்த அகன்ற கண்களோ — சிரித்த போது அவள் கன்னத்திலே விழுந்த குழியோ... கூர் மூக்கோ... ஏதோ ஒன்று அவளை அவருக்குத் தம்பி மகள் ஐஸ்வர்யாவை நினைவூட்டிக் கொண்டே இருந்தது.

''ஐஸ்வரி! கண்ணு... சாப்பிடும்மா!'' என்று கொஞ்சிக் கூத்தாடி இடுப்பில் வைத்துக் கொண்டு... சாதத்தை ஊட்டி வளர்த்தவள் விமலா...

அந்த ஐஸ்வர்யாவோ இப்போது அமெரிக்காவில் தன் கணவனோடு சுகமாக வாழ்ந்து கொண்டிருக்கிறாள்!

ஆமாம். அவள் டிரங்கால் போட்டுத் தீபாவளிக்காக அம்மா அப்பாவோடு பேசும் போது விமலாவின் உடல்நிலையைப் பற்றி அவளுக்கு ஒரு வார்த்தை சொல்லச் சொன்னேனே? அருணா அவளுக்குச் சொல்லியிருப்பாளா?

குழந்தை ஐஸ்வர்யாவுக்குப் பெரியம்மா விமலாவின் மேலே உயிராச்சே!

ஐஸ்வர்யாவுக்குத் தீபாவளி வாழ்த்துக் கார்டு ஒன்று கடையிலிருந்து வாங்கி வந்து அலமாரியின் மேல் தட்டில் வைத்திருந்தாள் விமலா. அதில் கையெழுத்திட்டு முகவரி எழுதித் தபால் தலை ஒட்டி அனுப்ப அவளுக்குப் பொழுது இருக்கவில்லை...!

எல்லாவற்றையும் முன்கூட்டிச் செய்யும் பழக்கம்விமலாவுக்குஉண்டு.எதையும்ஒத்திப் போடமாட்டாள். 'மின்சாரப் பில்லைக் கட்டி விட்டு வந்துடறேளா? தேதியாச்சே... வீட்டுக்கார அம்மாவுடைய பில்லையும் மறக்காம வாங்கிக் கொண்டு போங்கோ...'

'வருகிறவழியிலே கன்யா ஸூப்பர் மார்க்கெட்டிலிருந்து ஒரு கத்தை ஊதுவத்தி வாங்கிண்டு வந்துடறேளா? சில்லறை எடுத்துத் தயாராக மேஜையின் மேலே வைச்சிருக்கேன்...!

ஒவ்வொன்றையும் அவருக்கு ஞாபகப் படுத்தி, அவர்கள் வாழ்ந்த அந்த அவுட் ஹவுஸை பெரிய பங்களாவைப் போல அலங்கரித்து வைத்தாள். அதோடு வாய்க்கு ருசியாக அவருக்குச் சமைத்துப் போட்டாள். தம் வாழ்க்கைக்கு அவள் வலது கையாகவும் இருந்தாள். அவள் படுத்துக் கிடக்கும் போது இரண்டே நாட்களில் அவர் வீடு எப்படி அலங்கோலமாகப் போய் விட்டிருக்கிறது! போட்டது போட்ட இடத்தில் கிடந்தது!

''அண்ணே பீரோவிலே உங்களுக்கு வாங்கின வேஷ்டி — பனியன் — துண்டு எல்லாம் தயாராக இருக்கு — புதுசு உடுத்திக் கோங்கோ...!'' தன் கண்களை மூடிக் கொண்டே மெலிந்த குரலில் பேசினாள் விமலா.

தீபாவளிக்குஒருமாதம்முன்னதாகவே விமலா கடைத் தெருவுக்குப் போய் எல்லாம் தயாராக வாங்கி வைத்திருந்தாள்.

வீட்டுக்கார அம்மாள் தனது பெரிய குடும்பத்திற்கு ஜவுளி எடுப்பதற்குக் கடை கடையாக அலைய நேரிட்டது. அவள் வெளியே புறப்படும்போதெல்லாம்விமலாவைத்துணையாகக் கூட்டிக் கொண்டு போவது வழக்கம்!

காரில்தான் போய் வந்தார்கள் என்றாலும்... கடைகளைச் சுற்றிப் பார்த்துக் கால் கடுக்கத்தான் அவர்கள் திரும்பி வருவார்கள்.

வீட்டுக்கார அம்மாவோடு விமலா புறப்பட்டுப் போன போது தான் தள்ளுபடி விலையில் அவருக்கு தீபாவளிக்கு வேஷ்டி — துண்டு அனைத்தும் வாங்கி விட்டிருந்தாள்.

''எனக்கென்னத்துக்கு? நான் பச்சைக் குழந்தையா? தீபாவளிக்கு உடுத்த புதுசு இல்லேன்னு நான் அடம்பிடிக்கப் போறேனா?''

''எனக்கு நீங்க ஒரு குழந்தை...'' என்று மெள்ளச் சிரித்தாள் விமலா.

''எனக்கு நீ குழந்தை. உனக்கு நான் குழந்தை. அப்படித்தான் இனிமேல் நாம் வாழ வேண்டும்'' அவர் சொல்லி முடிப்பதற்குள் அவள் குறுக்கிட்டாள்.

''நம்ப ரகு இப்ப இருந்தால்... இருபத்தஞ்சு வயசு இளைஞனா இருப்பான்.. ரொம்ப நாட்கள் கழிச்சுப் பிறந்த பிள்ளை... தவம் கிடந்து கிடைச்ச சொத்து. நமக்குக் கொடுத்து வைக்கலியே...!'' விமலா கண்கலங்கிப் போனாள்.

''தம்பி குழந்தைகளை வளர்த்து அந்தத் துக்கத்தையெல்லாம் மறந்து போய் வாழ்ந்து கொண்டிருக்கோம்...எம்மா இப்போ உனக்கு இந்த நினைப்பு?'' என்று செல்லமாகக் கடிந்து கொண்டார் சுவாமிநாதன். அவள் மனத்தில் திடீரென்று இறந்து போன தன் இரண்டு வயது மகனைப் பற்றி ஏன்தான் நினைவு எழுந்ததோ, அவருக்குத் தெரியவில்லை. அதற்குப் பின் ஒரு வாரகாலத்திலே விமலா ஆஸ்பத்திரியில் சேரும் அளவுக்கு வியாதி முற்றிவிட்டது.


''நர்ஸம்மா, கொஞ்சம் சூடா பிளாஸ்க்கிலே காப்பி எடுத்துண்டு வரட்டுமா?'' என்று சுவாமிநாதன் அக்கறையோடு நர்ஸிடம் விசாரித்தார்.

''டாக்டர் சொல்கிறவரை நீங்க எதுவும் வாயால் உணவு கொடுக்கக் கூடாது. இன்னும் டிரிப்பிலேயே இருக்காங்களே, உங்களுக்குத் தெரியலையா?'' என்று எச்சரித்தாள்...

அவருக்கு நன்றாகத்தான் தெரிந்தது.

மூன்று தினங்களுக்கு முன் காலை எழுந்திருந்ததுமே விமலா, ''தலையைச் சுற்றுகிறது — வயிற்றைப் புரட்டுகிறது'' என்று முனு

உங்கள் குழந்தையின் சீரான வளர்ச்சி, முதல் ஆண்டில் அவன் பெறும் ஊட்டத்தைப் பொறுத்துள்ளது.



பால் அடங்கிய ஃபாரெக்ஸ் திட உணவு

அவனது வளர்ச்சிக்குத் தேவையான ஊட்டச்சத்துக்கள் அனைத்தும் நிரம்பியதாகும்

பால் அடங்கிய ஃபாரெக்ஸ் திட உணவு, உங்கள் குழந்தையின் ஊட்டச்சத்துத் தேவைகளை மனதில் கொண்டு விசேஷமாகத் தயாரிக்கப்பட்டுள்ளது.

ஃபாரெக்ஸ் புரதம் செறிந்தது, கூடுதல் இரும்புச்சத்து உள்ளது, சரியான விகிதத்தில் கால்ஷியமும் ஃபாஸ்ஃபரஸ்ூம் அடங்கியது. குழந்தையின் வளர்ச்சிக்கு இவை அத்தியாவசியமாகும்.

ஏறக்குறைய நான்காவது மாதம் முதல், குழந்தைக்குப் பால் அடங்கிய ஃபாரெக்ஸ் திட உணவு கொடுங்கள். அவன் ஆனந்தமாக வளருவதைக் காணுங்கள்.

பாசத்துடன் வழங்குவோர் க்ளாக்ஸோ!



ஏற்கெனவே பால் அடங்கியது

CLARION/B/GX/8/203 - R

* "சேர்ந்து வருவதென்பது ஆரம்பம்;
சேர்ந்து, வாழ்வதென்பது முன்னேற்றம்;
சேர்ந்து உழைப்பதென்பது வெற்றி!" —ஆபிரகாம் லிங்கன். தகவல்: வி. பிருந்தா.

முனுத்தாள். சில நிமிஷங்களில் தாங்க முடியாத வயிற்று வலியும் — வாந்தியுமாக அவள் தரையில் புரண்ட போது சுவாமிநாதன் மிகவும் நடுநடுங்கிப் போனார்.

வீடு கூட்ட வந்த வேலைக்காரி ஓடோடிப் போய், வீட்டுக்கார அம்மாளை அழைத்து வந்தாள்.

"என்ன யோசிக்கறேள்? டாக்டரை டெலிபோனில் கூப்பிடறேன். அவர் சொன்னபடி செய்யணும் — இது 'வீட்டிலே வச்சு பார்க்கிற கேஸ் போல் எனக்குத் தோன்றவில்லை!" என்று உரிமையோடு அதட்டினாள். அவளே டாக்டரை டெலிபோனில் வீட்டுக்கு வரும்படி அழைத்தாள். அவர் யோசனைப்படியே விமலாவைத் தங்கள் காரில் போட்டுக் கொண்டு போய் மாருதி நர்ஸிங் ஹோமில் சேர்த்து விட்டு வந்தாள்.

அந்த நர்ஸிங் ஹோமின் கவனிப்பு அவரைப் போன்ற அடிமட்டத்து மனிதர்களுக்குக் கட்டுப்படியாகாத சங்கதியாயிற்றே... மனிதர் முதலில் கலங்கித்தான் தவித்தார். ஆனால் விமலாவின் உயிர்? அதுக்கு விலை ஏதும் உண்டா? 'பணத்தை வாரி இறைத்தோம். நன்றாகக் கவனித்தோம் — பெரிய நர்ஸிங் ஹோமில் கூட வச்சுப் பார்த்தோம்' என்கிற ஒரு மன நிம்மதியாவது அவருக்கு மிஞ்ச வேண்டாமா? மருத்துவமனையில் அனுமதித்த கொஞ்ச நேரத்தில் விமலா தன் நினைவை இழந்து போனாள்.

மூக்கிலும் — கைமடக்கிலும் ரப்பர்க் குழாய்களுடன்... படுக்கை மீது துவண்டு கிடந்த தம் மனைவியைப் பார்த்த போது, அவர் நம்பிக்கையெல்லாம் இழந்துவிட்டார். அவர் உள்ளூர நொறுங்கிப் போய்விட்டிருந்தார்.

தீபாவளியன்று காலை. நல்ல பொழுதாகத்தான் விடிந்திருக்கிறது.' தமக்குள் பேசியபடி சோர்வில் தள்ளாடிக் கையில் பிடித்த துணிப் பையில் பிளாஸ்க்குடன் வீடு திரும்பிக் கொண்டிருந்தார்.

பட்டாஸ் சத்தத்திலும் — குழந்தைகள் போட்ட கூச்சலிலும் வீட்டுக்கார அம்மாள் அவர் வந்ததைக் கவனிக்கவில்லை.

சற்று நேரத்தில் சுவாமிநாதன் தம் ஸ்நானத்தை முடித்துக் கொண்டு பூஜையறையில் விளக்கை ஏற்றி வைத்தார்.

"விளக்கேத்த வேண்டியவள் நீ — ஆனால் உனக்காக நான் விளக்கை ஏற்ற வேண்டியிருக்கு. இது நமக்குப் பெரிய சோதனை — விமலா!" தமக்குள் பேசியபடி கண்கலங்கிப் போனார் அவர்.

வாயிற்படியருகே ஏதோ உருவம் நிழலாடுவதை உணர்ந்து திரும்பினார்.

"எப்படியிருக்கா விமலா...?" என்று வீட்டுக்கார அம்மாள் கேட்டபடியே நின்று கொண்டிருந்தாள்.

"தேவலை... இன்னிக்கு அவள் கண் திறந்து பேசினாள்..."

"நன்றாயிடும்னு நான்தான் உங்களுக்குத் தைரியம் சொன்னேனே... வாங்கோ வந்து எங்களோட காப்பி டிபன் சாப்பிடுங்கோ.." என்று உபசரித்தாள் அவள்.

"கொஞ்சம் தித்திப்பு ஏதாவது எடுத்துக்கோங்க... நல்ல நாளும் அதுவுமா நீங்க ரொம்ப வருத்தப்பட்டுக் கொண்டிருக்கக் கூடாது" என்று கூறி, வீட்டுக்கார அம்மா... அவரை அழைத்துப் போய்த் தீபாவளி பக்ஷணங்களுடன் — காலை காப்பி டிபனை அவருக்குத் தன் கையாலேயே பரிமாறினாள்.

"மாமாவுக்குப் போன் வந்திருக்கு..." குழந்தைகளில் ஒன்று கூக்குரலிட எழுந்து சென்று டெலிபோனை எடுத்தார் சுவாமிநாதன்.

"விமலாவுக்கு என்ன ஆச்சு...? நர்ஸ் என்னைக் கூப்பிடுகிறாளா...?" பதறிப் போய் விட்டார் சுவாமிநாதன்.

"மன்னிக்கு எப்படி இருக்கு? ஹாப்பி தீபாவளி... இங்கே நான் ரொம்ப பிஸியா இருக்கேன். அதனால் நேரே ஆஸ்பத்திரிக்கு வர முடியலே..." என்று கேட்டுத் தம்பி மனைவி அருணா பேசினாள்... அருணாவின் குரல் ஒலி கேட்டதும் அவருக்குக் கொஞ்சம் நிம்மதியாக இருந்தது.

"உங்களுக்குப் பட்சணம் கொண்டு வந்து கொடுக்கலாம்னு நினைச்சேன்!"

'நினைப்பிலேயே இரு...' என்று மனத்திற்குள் வெகுண்டாலும், —"எதுக்கம்மா, இங்கே யாரு சாப்பிடறதுக்கு இருக்கா... தாங்க்ஸ்.. உங்களுக்கெல்லாம் எங்க தீபாவளி வாழ்த்துக்கள்... விமலாவுக்குக் கொஞ்சம் உடம்பு தேவலைன்னு அவன்கிட்டே சொல்லு..." என்று மழுப்பிப் போனைச் சட்டென்று வைத்தார். அவர் உடம்பு ஆத்திரத்தில் ஆடியது.

"மைசூர் பாகு என் கையால் பண்ணினது — ஒரு வில்லை சாப்பிடுங்கோ" என்று பார்வதி உபசரித்தாள்.

"உங்களுக்கெல்லாம் ரொம்ப சிரமம் கொடுக்கிறேன்!"

"என்ன சிரமம். ஆபத்து சம்பத்துன்னா அக்கம்பக்கம் உள்ளவர்கள் உதவ வேண்டாமா?"

"அக்கம்பக்கம்தான் உதவும். ஆனால் உறவினர் அண்ணன் தம்பிகள் உதவாது..!" என்று எண்ணியவராக மைசூர் பாகு வில்லையை ஒடித்துத் துளி வாயில் போட்டுக் கொண்டவர்... பச்சைக் குழந்தையைப் போல...' விசித்து விசித்து அழ ஆரம்பித்தார்.

"அழாதீங்க... விமலாதான் உடம்பு தேறிட்டாளே..." என்று பார்வதி சமாதானம் சொல்லச் சொல்ல... மேற்துண்டால் வாயைப் பொத்திக் கொண்டு விசும்பலானார் சுவாமிநாதன்.

(தொடரும்)

மொட்டை அடிப்பதுதானா



• சாந்தி.

போலீஸாரின் வேலையா?

இதைப் படிப்பதற்கு முன் ஒரு வார்த்தை:
மஸாஜ் கிளப் ஒன்றில் பணிபுரிந்து கொண்டிருந்த ஒரு பெண்ணுக்குப் போலீஸாரால் இழைக்கப்பட்ட அநீதியை எடுத்துக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கம். 'சில மஸாஜ் கிளப்புகளில் நடக்கும் தவறுகளுக்குக் கல்கி துணை போகிறதா?' என்று யாரும் கேட்க வேண்டாம் — ப்ளீஸ்!

குற்றம் செய்ததாகக் கருதப்படுபவர் மீது வழக்குப் போட்டுத் தண்டனை வாங்கிக் கொடுக்க வேண்டியதுதான் போலீஸாரின் வேலை. ஆனால் அந்தப் போலீஸாரே 'சட்டமாவது, வெண்டைக்காயாவது, எல்லாம் நாங்களே!' என்று பல சமயங்களில் செயல்படுகிறார்கள்.

சென்னையிலுள்ள ஒரு மசாஜ் கிளப்பில் வேலை செய்து வந்த சாந்தி என்ற பெண்ணைப் போலீஸார் அழைத்துச் சென்று, காட்டுமிராண்டித்தனமாக மொட்டை அடித்து அனுப்பியது மேலே சொன்ன விஷயத்திற்குச் சமீபத்திய உதாரணம். பாதிக்கப்பட்ட பெண்ணான சாந்தியைக் கண்ட போது கண்ணீரோடு அவர் கூறினார்:

''நான் மிகவும் ஏழை. எனக்குப் பத்து வயதில் ஒரு மகன் இருக்கிறான். என் கணவரின் சொற்பச் சம்பளத்தில் குடும்பம் நடத்த முடியாமல் மசாஜ் கிளப்பிற்கு வேலைக்கு வந்தேன். கடந்த மாதம் 13.10.85 அன்று

நான் வேலை செய்யும் இடத்திற்கு அபிராமபுரம் போலீஸ் இன்ஸ்பெக்டரும், உதவி இன்ஸ்பெக்டரும் வந்தார்கள். என்னையும் என்னுடன் இருந்த லட்சுமி என்ற பெண்ணையும், தர தரவென்று இழுத்துக் கொண்டு போய் ஜீப்பில் ஏற்றி ஸ்டேஷனுக்கு அழைத்துக் கொண்டு போனார்கள். பின்னர் அந்த இன்ஸ்பெக்டர் ஒரு கத்தியைக் கொண்டு என் தலை முடியை வெட்டினார். நான் அவர் காலில் விழுந்து கெஞ்சினேன். 'ஐயா! நான் எந்தத் தவறும் செய்யவில்லையே. ஏழ்மையின் காரணமாகத்தான் ஹெல்த் சென்டரில் (மசாஜ் கிளப்) வேலை செய்கிறேன்' என்றேன். உடனே அவர், 'இவளைச் சும்மா விடக் கூடாது' என்று கூறி முடி திருத்துபவர் ஒருவரைக் கூட்டி வரச் செய்து, நான் கதறக் கதற என் தலைமுடியை மழித்தார்கள். சத்தம் அதிகமாகிவிடக் கூடாதே என்று என் வாயில் துணியை வைத்து அடைத்து விட்டார்கள்.''

போலீஸாரின் இந்தக் கொடூரமான செய்கையை எதிர்த்து வழக்குத் தொடரப் போகிறார் சாந்தி. ஏற்கெனவே தமிழக முதல்வருக்கும், மற்ற பெரிய போலீஸ் அதிகாரிகளுக்கும் மனு கொடுத்திருக்கிறார். சாந்திக்காக ஆஜராகப் போகும் வழக்கறிஞர் ராமசாமி அவர்களைச் சந்தித்த போது சொன்னார்:

''மஸாஜ் நிலையங்களின் உள்ளே ஏதாவது தப்பு நடந்தால் போலீஸ் கையும் மெய்யுமாகப் பிடித்து வழக்குப் போடலாம். ஆனால் இப்போதெல்லாம் சும்மாவே வழக்குப் போடுகிறார்கள். உதாரணமாக, அபிராமபுரத்திலுள்ள மசாஜ் நிலையத்தில் வேலை செய்யும் பெண் மைலாப்பூரிலுள்ள ஒரு தெருவில் நின்று கொண்டு ஆண்களை 'பலான' விஷயத்துக்கு அழைத்ததாக வழக்குப் போடுவார்கள். இதற்கெல்லாம் மூல காரணம் மாமூல் கொடுப்பது குறைவதுதான். ஒரு உதவி கமிஷனர் மாதம் 50,000 ரூபாய் வரை மசாஜ் நிலையங்களிலிருந்து மாமூல் பெறுகிறார் என்று சொல்லப்படுகிறது.''

இந்த விஷயங்களைப் பற்றிப் போலீஸ் வட்டாரத்தில் விசாரித்த போது 'கப்சிப்.' ஆனால் துருவியதில், அபிராமபுரம் இன்ஸ்பெக்டர் போல் சிலர் நடந்து கொள்ளக் காரணம் மேலதிகாரிகளின் தூண்டுதலே என்று சொல்லப்படுகிறது. ''ஏன்யா, நீயே வாங்கி வெச்சுக்கறயா? அந்த மசாஜ் கிளப் லேர்ந்து எனக்கு வர வேண்டியது இன்னும் வந்து சேரலியே?'' என்று குதிக்கும் அதிகாரிகளும் இருக்கிறார்களாம். இது போன்ற அதிகாரிகள்தான் கீழ்மட்டத்தில் போலீஸார் கொடூரமாக நடந்து கொள்வதற்குக் காரணமாம்.

தாய்க்குலத்திற்காகப் பாடுபடும் புரட்சித் தலைவரின் ஆட்சி என்று பேசப்படும் இந்தக் கால கட்டத்தில், சட்டத்தைக் கைகளில் எடுத்துக் கொண்டு, கொடூரமாகச் செயல்பட்ட போலீஸார் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா?

—நமது நிருபர்.

புகைப்படம்: மனோ

(போலீஸாரின் அத்துமீறிய காரியங்களுக்கு இன்னொரு உதாரணமாகத் திகழ்கிறது இவ்விதழில் பரிசு பெறும் வட்ட மேஜைக் கடிதம். —ஆசிரியர்.)

அடுத்த இதழில்...



தொழிலுக்குத் துரோகம் செய்யும் டாக்டர்கள்!

—நோயாளிகளுக்கு ஓர் எச்சரிக்கை


காட்பரீஸ்
போர்ன்விடா
சுறு சுறுப்புப் பானம்!
"ஒரு டம்ளர் பாலிலே இரண்டு ஸ்பூன் போர்ன்விடா அதுவே நல்மான சுவையான பானம்—அதை, என் குழந்தைகளுக்கு அன்றாடம் இருவேளை தருகிறேன்.
என் குழந்தைகளுக்கு, கோகோ, மால்ட், பால், சர்க்கரை ஆகியவற்றின் போஷாக்கினைத் தருகிறது போர்ன்விடா. அவர்கள் வளரும் காலம் முழுவதும் அவர்களுக்குத் தேவைப்படும் ஊட்டச் சத்தையும் சக்தியையும் அளிக்கிறது. அவர்கள் நல்ல வளர்ச்சி பெறுகிறார்கள். ஆகவே நல்ல வளர்ச்சி. போர்ன்விடா பயிற்சி."
MILK
Cadbury's
Bournvita
SUGAR
MALT
COCOA
OBM/468

அகல்யா காத்திருக்கிறாள்

ஜெயவண்ணன்

கையிலிருந்த பேப்பரை மடித்து பக்கத்தில் இருந்த மேஜைமேல் போட்ட விசுவம் கட்டிலில் சாய்ந்தான்.

வேலைகளை முடித்துவிட்டு, கதவைத் தாழ் போட்டுவிட்டு அவனருகே வந்து அமர்ந்தாள் அகல்யா.

என்றைக்கும் இல்லாமல் அவள் முகத்தில் இன்று அசாதாரண மகிழ்ச்சி.

இவன் கேட்டான்: "என்ன விசேஷம்?"

"ஒன்றுமில்லே..."

"நோ, நீ பொய் சொல்றே. எதையோ சொல்லணும்னு நினைக்கிறே. தயங்காம சொல்...

அவள் மெல்ல நிமிர்ந்து இவனைப் பார்த்தாள். பின், தயங்கிக் கொண்டே பேசினாள்.

"எனக்கு பதினைந்துதான் தேதி. இன்னைக்கு தேதி இருபத்தைந்து. பத்து நாளாகியும்...

இதைச் சொல்லும் போதே அவள் வெட்கத்தின் மென்மையான ஆளுமைக்கு உட்பட்டுத் தலையைக் குனிந்து கொள்ள—

அவள் சொன்னதைக் கேட்டு இவனுக்கு மனத்தில் புதுவெள்ளமாய் மகிழ்ச்சி, பிரவாகம் எடுத்துப் பாயத் தொடங்கியது.

பத்து நாட்கள் ஒரு மாதமாய் நீண்டு பின் பத்து மாதங்களாய் வளர்ந்து...

என் அகல்யா ஒரு குழந்தையைப் பெற்றெடுக்கப் போகிறாளா?

நினைக்கும் நினைவுகள் வார்த்தைக்கு வார்த்தை இவனுக்கு இனிக்கத் தொடங்கின.

"நாளைக்கு டாக்டர்கிட்டே போகலாமா?"

"வேண்டாங்க. இன்னும் ஒரு வாரம் போகட்டும்..."

சொல்லிவிட்டுக் களைப்புடன் இவன் மார்பில் அவள் இதமாகச் சாய, இவன் அவளை ஆதரவுடன் அணைத்துக் கொண்டான்.

அப்பா அம்மா இல்லாத இந்த அகல்யா தன்னுடன் ஒரே அலுவலகத்தில் வேலை பார்த்ததும், இருவரும் ஒருவரை ஒருவர் விரும்பித் திருமணம் செய்து கொண்டதும் ஐந்து வருடங்களுக்கு முன் நடந்த கதை.

மணமான பின் மானேஜரின் கீழ்க் கண் பார்வையையும், காஷியரின் 'ஏ' பேச்சுக்களையும் ஜீரணிக்க முடியாத அகல்யா வேலைக்குப் போவதையே வெறுத்தாள்.

இவனும் அவளைக் கட்டாயப்படுத்தவில்லை. அவள் விருப்பத்தைமீறி அதே மானேஜரின் கீழ் போய் வேலையைப் பார் என்று சொல்ல இவனது மனசாட்சி இடம் தரவும் இல்லை.

ராஜிநாமா செய்துவிட்டான்.

பொருளாதார ரீதியில் இது இவனுக்கு மிகப் பெரிய இழப்புதான்.

என்ன செய்வது?

இவனுக்கு மனைவியாக வந்த நாளிலிருந்து அகல்யா என்ன சுகத்தைக் கண்டுவிட்டாள்?

இவனை நம்பி இரண்டு தங்கைகள். மூத்தவள் கலா. இளையவள் கௌரி. இருவரும் திருமணத்திற்குக் காத்து நிற்கும் நேரத்தில் இளம் மனைவியுடன் தாராளமாகப் பேசக் கூட இவன் பயப்பட்டதுண்டு.

அவர்கள் இருவருக்கும் திருமணம் செய்து



வைக்க இவன் பட்ட கஷ்டங்கள் ஒரு தொடர் கதை.

பி. எஃப்பில் எழுபத்தைந்து சதம் எடுத்தான். ஆபீஸில் பர்சனல் லோன் வாங்கினான். தெரிந்த நண்பர்களிடம் வட்டிக்குக் கொஞ்சமும், வட்டியில்லாத கடனாகக் கணிசமாகவும் கடன் வாங்கினான். அகல்யா திருமணத்திற்கு முன் தன் சேமிப்பில் செய்து போட்டிருந்த ஆறு பவுன் செயினையும் விற்றான்.

கலாவையும் கௌரியையும் ஒரு வழியாக நல்ல இடமாகப் பார்த்து மூன்று மாதங்களுக்கு முன்தான் திருமணம் செய்து வைத்தான்.

தங்கைகளை நல்ல முறையில் கரையேற்றிய திருப்தி மட்டுந்தான் இவனுக்குச் சொந்தம்.

மற்றபடி, மனநிம்மதி?

முதல் தேதியன்று சம்பளக் கவரை வாங்கியவுடன் அலுவலகத்திலேயே பட்டுவாடா செய்தபின் மீதியாகக் கொண்டு வரும் பணத்தை வைத்துக் குடும்பம் நடத்தும் சர்க்கஸ் வித்தை அகல்யா மட்டுமே அறிந்த ஒன்று.

குழந்தைகள் மேல் அகல்யாவுக்குப் பிரியம் அதிகம். பக்கத்து வீட்டில் இருக்கும் குழந்தையைத் தன் வீட்டிற்குத் தினசரி தூக்கிக் கொண்டு வந்து கொஞ்சுவாள்.

ஆனால், குழந்தைகள் மேல் பாசம் காட்டும் அவளுக்கு அந்தப் பாக்கியம் மட்டும் இன்று வரை கிடைக்கவில்லை.

ஒரு வேளை, இவனுடைய தங்கைகள் திருமணத்தின் போதோ அல்லது அதற்கு முன்போ அகல்யாவுக்கு அந்தப் பாக்கியம் கிடைத்திருந்தால் இவனால் அதைச் சமாளித்திருக்க முடியுமா என்பது சந்தேகமே!

குழந்தை இல்லையே என்ற ஏக்கத்தைப் பல முறை அவள் இவனிடம் கோடிட்டுக் காட்டியதுண்டு. தங்கைகளின் பிரச்னைகள் தீர்ந்தபின் இருவரும் ஒரு முறை டாக்டரிடம் சென்று வரலாம் என்று இவன் அவளிடம் ஒரு முறை சொல்லியும் இருக்கிறான்.

இன்று—

அதற்கு அவசியமில்லாமல் போய்விட்டது. அவள் நினைத்தது கிடைத்து விட்டது.

தாய் தந்தையற்ற பெண். கட்டிய கணவன் வீட்டிலும் இதுவரை நிம்மதி கிடைக்கவில்லை. இனியாவது அழகாக ஒரு குழந்தையைப் பெற்றுக் கொண்டு நிம்மதியாக



வாழ இவனுக்கு வாய்ப்புக் கிடைத்திருக்கிறதே!

அவளுக்காக இவன் நிம்மதியடைந்தான். பாவம் அகல்யா!"

குனிந்து அவளைப் பார்த்தான்.

இதுவரை குடும்பத்தைச் சுமந்த இந்தக் குழந்தை, ஒரு குழந்தையைத் தாங்கிக் கொண்டு பவனி வரப் போகும் காட்சியைக் கற்பனையில் ரசித்தான்.

மறுவாரம்.

லேடி டாக்டரின் அறையினுள் இருவரும் நுழைந்தனர்.

லேடி டாக்டர் அகல்யாவைச் சோதனை செய்த பின் —

''கன்கிராட்ஸ்'' என்றார்.

திரும்பும் போது வஸந்தபவனில் அவளுக்கு ஸ்வீட் வாங்கித் தர வேண்டும் என்று இவனுக்கு ஆசை.

மாதக் கடைசி.

காப்பியை மட்டும் குடித்துவிட்டு, வீட்டுக்கு வந்ததும் அவள் கேட்ட முதல் கேள்வி இதுதான்:

''ஏங்க, நம்ப குழந்தைக்கு என்ன பேர் வைக்கலாம்?''

இவன் சிரித்தான்.

''குழந்தை ஆணு பொண்ணுன்னு தெரியாமல் எப்படி பேர் வைக்கிறது?''

''ரெண்டு பேரையும் சொல்லுங்க. தேவையான பேரை அப்ப எடுத்துக்குவோம்.''

சிறிது நேரம் யோசித்தான்.

''ஆணு பிறந்தா திலக். பெண்ணுகப் பிறந்தா சௌம்யா...''

''அப்படியே வச்சிடுவோம்....'' என்றவள் சுவரிலிருந்த மாதக் காலண்டரில் ஏழு தாள்களைத் தூக்கிவிட்டு, காலியாக விடப்பட்டிருந்த இரண்டு கட்டங்களில் ஒன்றில் 'திலக்' என்றும், இன்னொன்றில் 'சௌம்யா' என்றும் அழகாக எழுதினாள்.

''அகல்யா, எனக்கு ஒரு சந்தேகம்?''

புரியாது இவனைப் பார்த்தாள்.

''ஒரு வேளை ரெட்டையாப் பொறந்துட்டா?''

பட்டென்று அவள் பதில் சொன்னாள்.

''ரெண்டு பேரையும் வச்சடுவோம்...''

''இருந்தாலும் உனக்குப் பேராசை தான்.''

சொல்லிவிட்டு இவன் சிரித்தான்.,

அவளும் 'கலகல'வெனச் சிரித்தாள்.

அப்புறம் கடந்த பத்து நாட்களில் —

அகல்யா வேறு எதைப் பற்றியும் பேசவில்லை.

எந்த நேரமும் தனக்குப் பிறக்கப் போகும் குழந்தையைப் பற்றியே பேசினாள். அதை எப்படி வளர்ப்பது என்று திட்டம் தீட்டினாள். எந்தப் பள்ளியில் சேர்ப்பது என்று முடிவு செய்தாள். என்ன படிப்புப் படிக்க வைப்பது என்று ஆலோசனை செய்தாள்.

இந்தப் பத்து நாட்களில் அவள் மகிழ்வில் ஒரு சுற்று அதிகமானதை இவன் கவனித்தான்.

பண்டிகை தினத்தில்...

போட்டி: 28

நடந்து முடிந்தது நவராத்திரி; வரப் போகிறது தீபாவளி. அடுத்துப் பொங்கல்..... சரி, ஏதேனும் ஒரு பண்டிகை தினத்தில் உங்களைப் பரவசத்தில் ஆழ்த்திய, வியப்படையச் செய்த, கோபம் கொள்ள வைத்த அல்லது வேறு ஏதேனும் ஓர் உணர்ச்சியைத் தூண்டிய நிகழ்ச்சி (கருத்து: ஸ்ரீ. நீலா, மன்னார்குடி) பற்றி ரத்தினச் சுருக்கமாகக் கீழே உள்ள வெற்றிடத்தில் எழுதி, இந்த அரைப் பக்கத்தையும் முழுமையாகக் கத்தரித்து அனுப்புங்கள். பிரசுரமானால் பரிசு. தவிர, ஒருவருக்குக் குலுக்கல் முறையில் விலையுயர்ந்த வி. ஐ. பி. ஸூட்கேஸ். உறையின் மேல் ''பண்டிகை தினத்தில்....'' என்று கட்டாயம் குறிப்பிட வேண்டும்.

முடிவு தேதி: 25.11.85

இன்னும் 25 வி. ஐ. பி. ஸூட்கேஸ்கள் உங்களுக்காகவே காத்திருக்கும்போது, வாரம் தவறாமல் போட்டிகளில் பங்கு பெற்றால் ஒன்றாவது உங்கள் வசப்படாதா என்ன! நிச்சயம் வசப்படும்!

வி.ஐ.பி. ஸூட்கேஸ் பரிசுத் திட்டம்

என் பெயர்: ....

விலாசம்: ....

....

பாரத் ஓவர்சீஸ் பைனான்ஸ் & இண்டஸ்ட்ரியல் இன்வெஸ்ட்மெண்ட் கார்ப்பொரேஷன்

703 மவுண்ட்ரோடு, சென்னை - 600 006

கூடுதல் 3% வட்டியை

1985 நவம்பர் 15ந் தேதி வரை

பிக்சட் டிபாசிட்டுகள்

30 நாள் தவணை	25+3=28% (p.a.)
(குறைந்த காலம் 3 மாதங்கள்)	
1 ஆண்டு	27+3=30% (p.a.)
2 ஆண்டுகள்	29+3=32% (p..a)
3 ஆண்டுகள்	31+3=34% (p.a.)
5 ஆண்டுகள்	33+3=36% (p.a.)

அரசு அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளுடைய பண சர்டிபிகேட் திட்டம்

5 ஆண்டுகள் — 20%
7 ஆண்டுகள் — 24%
10 ஆண்டுகள் — 27%

மற்ற திட்ட முறைகள்

மும்மடங்கு திட்டத்தில் ரூ. 1,000 5ஆண்டுகளில் ரூ. 3,000 ஆக மாறுகிறது.

ரிகர்ரிங் டிபாசிட் 17% • சேமிப்பு திட்டம் 10%

அதிக வட்டி • நேரந்தவறுமை • பாதுகாப்பு • நம்பிக்கை • திட்டமிட்ட முதலீடு

சென்னை அலுவலகம்:
ஓரியண்டல் சேம்பர்ஸ் 703, மவுண்ட்ரோடு, சென்னை - 600 006
(ஆனந்த் தியேட்டர் அருகில்)

ஹைதராபாத் அலுவலகம்:
1-7-145-C 10, சுபாஷ் தியேட்டர் எதிரில், (ராமகிருஷ்ண ஸ்டுடியோ அருகில்)
முஷிராபாத் ஹைதராபாத் - 500 048

மதுரை அலுவலகம்:
46, நேதாஜி ரோடு, மதுரை - 625 001

பதிவு அலுவலகம்
17, ஜெனரல் பேட்டர்ஸ் ரோடு, சென்னை - 600 002. போன்: 849838

எங்களது விசாகப்பட்டிணம் கிளை விரைவில் திறக்கப்படவிருக்கிறது.

Chhaya/BOF/631

ஒரு நாள் —

"பெண்ணுக்குத்தாய்வீட்லதான் குழந்தை பிறக்கணும்னு சொல்வாங்க. அதுதான் பொதுவான வழக்கம். ஆனா, எனக்கு...?" என்று சொல்லும் போதே அகல்யாவின் கண்கள் கலங்கிவிட்டன.

கேவிக் கேவி அழத் தொடங்கிவிட்டாள்.

இவன் பதறிவிட்டான்: "என்ன அகல்யா இது? அப்பா அம்மா இல்லாத பொண்ணுன்னு உனக்கு நினைப்பு வரலாமா? அந்த நினைப்பு வரது போல நான் இதுவரை நடந்திருக்கேனா? தாய் வீடு, புகுந்த வீடு எல்லாம் உன்னைப் பொறுத்த வரை இந்த வீடுதான்..." என்ற இவன் அவள் கண்களைத் துடைத்து விட்டு ஆறுதல் கூறினான்.

இருந்தும்—

அவள் தேம்பல் குறைய வெகு நேரமாகியது.

அன்று சம்பள நாள்.

வரும்போது பூவுடன் கால் கிலோ அல்வாவையும் வாங்கிக் கொண்டு உள்ளே நுழைந்தான் விசுவம்.

அகல்யா அடுக்களையில் இருந்தாள். இவன் உள்ளே வந்ததும் வெளியே வந்தவள் இவனிடமிருந்த பையைக் கையில் வாங்கிக் கொண்டு, "கலாவும், கௌரியும் கடிதம் போட்டிருக்காங்க" என்றாள் முகம் மலர.

"ரெண்டு பேருமா?"

"ஆமாம். ரெண்டு லெட்டரும் ஒண்ணாத்தான் வந்தது..."

"வழக்கமான லெட்டர்தானே! சந்தோஷமா இருக்கோம்னுதானே எழுதியிருக்காங்க?"

"ஆமாம். அப்புறம்...?"

"அப்புறம் என்ன? வேற விசேஷமாக ஏதாவது எழுதி இருக்காங்களா?"

"ம்..." என்றவள், "ரொம்ப சந்தோஷமான செய்தி. ரெண்டு பேருமே முழுகாம இருக்காங்களாம்; இது மூணாவது மாசமாம்..." என்று கூறிக் கொண்டே அல்வா பொட்டலத்தைப் பிரித்தாள்.

"நீங்க மாமா ஆகப் போறீங்க. இந்த சந்தோஷத்தைக் கொண்டாட வேண்டாமா? இந்தாங்க..." என்றவள் கொஞ்சம் அல்வாவை எடுத்து அவன் வாயில் கொடுத்து விட்டு அவளும் கொஞ்சம் வாயில் போட்டுக் கொண்டாள்.

"அல்வா ரொம்ப இனிப்பா இருக்குங்க..." என்றாள் அகல்யா சிரித்துக் கொண்டே.

இரவு.

"ஏங்க..."

"ம்..."

"கலா, கௌரி ரெண்டு பேருக்கும் இது மூணாவது மாசம்னா ஏழாவது மாசம் அவுங்க ரெண்டு பேரையும் இங்கே அழைச்சுக்கிட்டு வரணும் இல்லே..."

"ஆமாம்..."

"ரெண்டு பேருக்கும் நாமதான் பிரசவம் பார்க்கணும்..."

சுஜாதாவின் அறிவிப்பு

'என் முதல் கதை திருச்சியில் இருந்து வெளிவந்த 'சிவாஜி' என்ற இதழில் வெளியான போது நான் அடைந்த சந்தோஷத்திற்கு அளவே இல்லை. அந்த 'சிவாஜி' பிரதியை எனக்கு இப்போது யாராவது தேடிக் கண்டுபிடித்துத் தந்தால், அவருக்கு என் ராஜ்ஜியத்தில் பாதியைத் தந்து என் மகளையும் கட்டிக் கொடுப்பேன்.

—'என் முதல் கதை' என்ற கட்டுரையில் 'சுஜாதா.

—ஜெயவசந்தன்.

"ம்..."

"ரெண்டு பேருமே என்னைப்போல் தாயில்லாத பொண்ணுங்க. குழந்தை பிறந்து புருஷன் வீட்டுக்கு அனுப்பற வரைக்கும் நல்லா கவனிச்சு அனுப்பணும்..."

"ம்..."

"எனக்குக் கூட அதுதாங்க மாசம்..."

"ம்..."

"உங்களை நினைச்சுத்தான் எனக்கு ரொம்பக் கவலையா இருக்கு. கல்யாணத்துக்கு வாங்கின கடனை அடைக்கவே திணறிக்கிட்டு இருக்கோம். இப்போ மறுபடியும் செலவுக்கு மேல் செலவு செய்ய வேண்டிய சூழ்நிலை..."

"......"

"நம்ப நிலைமையிலே ரெண்டு பிரசவத்தைச் சமாளிப்பதே கஷ்டம்.."

"ம்..."

"நாளைக்கு டாக்டரைப் பார்க்கப் போகணும்."

இவன் நிமிர்ந்து அவளைப் பார்த்தான்: "போன வாரம்தானே போனோம். உடம்பு நல்லா இருக்கு. ஒரு மாசம் கழிச்சி வந்தால் போதும்னு லேடி டாக்டர் சொன்னாங்க..."

ஒரு கணம் நிதானித்த அகல்யா, பின் சொன்னாள்: "அப்போ போனது குழந்தை நல்லா இருக்கணுமே என்கிறதுக்கு. இப்போ போகப் போறது அந்தக் குழந்தையே வேண்டாங்கறதுக்காக..."

"அகல்யா!" என்று இவன் உரக்கக் கூவ—

"நான் முடிவு செஞ்சுட்டேன். இப்போ நாம இருக்கிற நிலையிலே நீங்களும் மறுக்க மாட்டீங்கன்னு எனக்குத் தெரியும். இப்போ இதைத் தவிர நமக்கு வேறு வழியே இல்லே. நமக்கு இன்னும் கொஞ்ச நாளைக்குக் குழந்தை வேண்டாம். அஞ்சு வருஷம் காத்திருந்தோம். இன்னும் இரண்டு மூணு வருஷம் காத்திருக்கக் கூடாதா? குழந்தைக்குப் பேர் கூட வச்சுட்டோம்னு கவலைப்படுறீங்களா? நம்ப கலாவுக்கு ஆண் குழந்தைதான் பிறக்கப் போவுது. கௌரிக்குப் பொண்ணுதான். ரெண்டுக்கும் 'திலக்' 'சௌம்யா'ன்னு பேர் வச்சுடலாம்..."

வைராக்கியத்துடன் பேச ஆரம்பித்தவள் விம்மலுடன் நிறுத்தினாள். நெகிழ்ந்த இவன், "மாட்டேன். இதற்கு இடந்தரவே மாட்டேன்" என்று கூறிக் கொண்டே அவளுடன் சேர்ந்து தானும் அழுதான்.

சித்தரஞ்சனி

முன்கதை சுருக்கம்

பிரதிஷ்டானாவைத் தலைநகராகக் கொண்டு சாதவாகன அரசை ஆண்டு வந்தான் கௌதமிபுத்ர சதகர்ணி. மூதாதையர் காலத்துப் பேரரசைப் போல் இன்றைய தன் சிற்றரசை விஸ்தீரணம் செய்ய ஆவல் கொண்டு படையெடுப்புக்கு முன்னால் தாபிலேசுவர் மலையில் உள்ள தாபிலேசுவரரையும் அதே இடத்தில் பாதாளக் கோவிலில் விளங்கும் சண்டிகா தேவியையும் வணங்கி அருள் பெற்று வரச் செல்கிறான்.

அங்கு சித்தரஞ்சனி என்ற பாடும் பெண் பேய் உலவி வருவதாக எச்சரித்து அனுப்புகிறாள் அவன் தாய். மயக்கும் இசையுடன் மெல்ல மிதப்பது போல் தோன்றும் சித்தரஞ்சனி பேய் உண்மையில் அழகியதொரு பெண்ணே என்றும் அப்பகுதி மக்கள் தங்கள் வீடு வாசல்களைத் துறந்து செல்லவே பேய் நாடகம் ஆடப்படுகிறது என்றும் அங்கு படைமுகாம் அமைப்பதே நோக்கம் என்றும் புரிந்து கொள்ள சதகர்ணிக்கு அதிக காலம் ஆகவில்லை. சித்தரஞ்சனி சில வீரர்களின் கட்டுப்பாட்டில் இருப்பதையும் உணர்கிறான். அவர்களுள் மகா க்ஷத்ரபனும், வடகொங்கணத்து க்ஷஹராட மன்னனுமான நாகபாணனை சதகர்ணி அடையாளம் கண்டு கொள்கிறான். நாகபாணனும் சதகர்ணியும் ஒருவரையொருவர் வெற்றி காணப் பலவிதங்களில் சாதுர்யமாகப் போட்டி போடுகிறார்கள். நாகபாணனின் சூழ்ச்சிகளுக்கெல்லாம் எதிர் சூழ்ச்சி செய்து சதகர்ணி தப்பி வருகிறான். இதில் சித்தரஞ்சனியும், சதகர்ணிக்கு அவன் மேல் காதல் கொண்டு உதவுகிறாள். இருவரும் சண்டிகா தேவி சந்நிதியில் காந்தர்வ மணம் புரிந்து கொள்கின்றனர்.

அஞ்சன்வேல் கோட்டையின் பலத்தையும், ரகசியங்களையும் அறிந்து கொள்ள வாய்ப்பாக நாகபாணனிடம் சிறைப்படுகிறான் சதகர்ணி. ஓர் இரவு அங்கு கைதியாக வைக்கப்பட்ட பின், அவனை ஒரு துணியால் கட்டி கப்பலுக்குப் படகில் ஏற்றி அழைத்துப் போகிறார்கள் வீரர்கள். சதகர்ணி பற்றிய கவலைக்கிடையே அவன் திறமையையும் உணர்ந்திருந்ததால், அவன் உயிருக்கு ஏதும் ஆபத்து நேராது என்றும் நம்பிய சித்தரஞ்சனி, நதியில் நீராடி ஈர ஆடையை உலர்த்த எண்ணுகையில், அந்தப் புடைவையை யாரோ உரிமையுடன் பற்றி இழுப்பதையும் துணியை ஒரு மரக்கிளையில் கட்டுவதையும் உணர்ந்து, அத்துணிகரச் செயலைச் செய்தவன் யார் என்று கோபத்துடன் திரும்ப, சதகர்ணியே என்று கண்டு மகிழ்கிறாள்!

15. மூட்டையில் இருந்த மணவாளன்!

செடி மறைவுக்குச் சென்று சேலையின் ஒரு பக்கத்தை உடலில் சுற்றி, இன்னொரு பகுதியை உலர்த்த அந்தப் பகுதியின் தலைப்பைப் பக்கத்திலிருந்த மரக்கிளை மீது கட்ட முயன்ற சமயத்தில், தனது கையிலிருந்த தலைப்பைப் பின்னாலிருந்த கரமொன்று வாங்கிமரக்கிளையில்கட்டிவிட்டதும், அதைத் தொடர்ந்து இரு கைகள் பின்னாலிருந்த வண்ணம் தனது பூவுடலை அணைத்து விட்டதையும் உணர்ந்த சித்தரஞ்சனி, அப்படித் துணிகரமாகத்தன்னை அணைக்கக்கூடியவன் கௌதமிபுத்ரனைத் தவிர வேறு யாரும் இருக்கமுடியாதென்ற தீர்மானத்தினாலும், ஏற்கெனவே அவன் கைகளின் தன்மையையும் திடத்தையும், வாகையும் உணர்ந்திருந்ததாலும், எந்த எதிர்ப்பையும்காட்டாமலும்இருந்தஇடத்தை விட்டு அகலாமலும் அப்படியே நின்றுவிட்டாள்.

சேலையின் ஒரு பகுதியை மார்பையும் அவள் சுற்றிக் கட்டியிருந்ததால் அவள் நாணத்தையும் கண்ணியத்தையும் உணர்ந்த கௌதமிபுத்ரன், தான் அணைத்த அந்த புஷ்ப உடலின் மிருதுத் தன்மையும், தன் கைகள் பட்டதால் ஏற்பட்ட கடினத்தன்மையும் கலந்தே இருந்ததைப் புரிந்து கொண்டு, "எந்தப் பெண்ணையும் ஆசை மெதுவாக்குகிறது, ஸ்பரிசம்கெட்டிப்படுத்துகிறது" என்ற இயற்கையை வியந்த வண்ணம், பின்புறத்தில் வெளேரென்று தெரிந்த முதுகின் மேல்புறத்தில் தனது உதடுகளை ஊன்றினான். சித்தினிகளின் அழகையும்மிஞ்சும்சித்தரஞ்சனியைப் பின்புறம் இறுக அணைத்ததால் அவள் உடல் ஒரு விநாடி அச்சத்தால் ஸ்தம்பித்து அடுத்த விநாடி ஆசையால் சிறிது நெகிழ்ந்து விட்டதால் தன்னை அவள் புரிந்து கொண்டுவிட்டாள் என்பதால் அவன் தனது உடலைக் கொண்டு கடினமாகவே அவள் உடலை நெருக்கினான்.

அவள் முன் கழுத்தை நோக்கித் தனது உதடுகளைப் புரட்டிய கௌதமிபுத்ரன் மெதுவாக அழைத்தான், "பெண்ணே!" என்று.

அவள் மெதுவாக மதுரமாக நகைத்து, "நான் பெண்ணென்பதை இப்பொழுதுதான் புரிந்து கொண்டீர்களா?" என்று கேட்டாள்.

"பெண்ணென்று புரியாமலா இப்படி...?" என்று சொற்களை முடிக்காமல் விட்டான் சதகர்ணி.

முடிக்காமல் விட்ட சொற்களில் மறைந்து கிடந்த முழுமையைப் புரிந்து கொண்ட சித்தரஞ்சனி, "பேச்சை ஏன் அரைகுறையாக விட்டீர்கள்?" என்று முணுமுணுத்தாள்.

சாண்டில்யன்



கௌதமிபுத்ரன் அவன் மீது நன்ருக இழைந்து அவள் காதுக்கருகில் உதடுகளைக் கொண்டு போய், "சொல்லட்டுமா?" என்று கேட்டான்.

"உம், சொல்லுங்கள்" என்ருள், அவள், அவன்மீது நன்ருகச் சாய்ந்தும் கொண்டாள்.

"சித்தரஞ்சனி!..." அவன் துவங்கினன்.

"உம்."

"அரைகுறையிலிருக்கும் இன்பம் முழுமையில் கிடையாது."

"அப்படியா!"

"ஆம். ஒரு பொருளை நாம் எதிர்பார்ப்பதில் இருக்கும் வேகம் அது கைக்கெட்டிய பின் இருப்பதில்லை."

"ஓகோ!"

"பூர்த்தியை விடப் பூர்த்திக்குச் செல்லும் பாதை கடினமாயிருந்தாலும் இன்பமானது."

"கவியைப்போல்பேசுகிறீர்கள்" என்ருள் சித்தரஞ்சனி.

"கௌதமிபுத்ரன் சொன்னன்: "உணர்ச்சியிலிருந்து விளைவது கவிதை. உணர்ச்சி ஊட்டுவதற்குத் தக்க பொருள் வேண்டும். தக்க நிகழ்ச்சி வேண்டும். இரண்டும் என் கண்முன் இருக்கின்றன. நிகழ்ச்சியிலிருந்து நெகிழ்ச்சி உண்டாகிறது. நெகிழ்ச்சியிலிருந்து கவிதை உரு எடுக்கிறது" என்றுகூறிய கௌதமிபுத்ரன் சித்தரஞ்சனியைத் தனது இரு கைகளாலும் திடீரெனத் தனக்கு எதிர்ப்புறத்தில் திருப்பிக் கொண்டு சற்று எட்டப் பிடித்து அவளை நோக்கினன்.

மார்புவரை இறுக அவள் சுற்றியிருந்த ஈரச்சேலையையும் அவள் மார்பகம் மீற முயன்று கொண்டிருந்தது. அதன் விளைவாகச் சேலையால் இறுக்கப்பட்ட இடத்தின் விளிம்புகள் சற்றே புடைத்திருந்தன. பிறைச் சந்திர வடிவத்தில். முழங்கால்களுக்குக் கீழே சேலையில்லாததால் இரண்டு பவளத் தூண்கள் இருப்பது போன்ற பிரமையை அவை அளித்தன. பவளத் தூண்களுக்குப் பிரிந்த தாமரை இதழ்கள் போன்ற விரல்கள் பேரழகை ஊட்டின. இந்த அழகுகளிலிருந்து சற்றே அவள் முகத்தை ஏறெடுத்து நோக்கிய சதகர்ணி, அவள் முகம் சற்று அண்ணந்து இருந்ததையும் அம்புஜக் கண்கள் மூடியிருந்ததையும், செம்பருத்தி இதழ்கள் போன்ற அதரங்கள் மட்டும் லேசாக விரிந்திருந்ததையும் கண்டான். அந்த இதழ்களின் ஏக்கம் அவனுக்குப் புரிந்திருந்ததால் அவளை முன்புறத்திலும் நன்ருகத் தழுவித் தனது இதழ்களை அவள் இதழ்களோடு இணையவிட்டான்.

இணைந்த இதழ்கள் இழைந்தன. உடல்கள் ஒன்றின. அவன் கைகளைப் போலவே அவள் கைகளும்எழுந்து அவன் கழுத்தைவளைத்தன. அவன் முரட்டுக் கன்னத்தோடு தனது வழுவழுத்த கன்னத்தையும் அவள் இழைத்தாள். பிறகு மெல்லச் சரிந்தாள் நிலம் நோக்கி. அப்படிச் சரிந்ததால் மேலே இளையில் கட்டிய சேலை கிழிந்தது சர்ரென்று. அதையும் பொருட்படுத்தாமல். தரையில் கிடந்தாள் அவள். நிலமோகினியெனக் கிடந்து சித்தத்தை அள்ளும் சித்தரஞ்சனியின் முன்பு மண்டியிட்டு உட்கார்ந்த கௌதமிபுத்ரன் அவளை நன்ருகவே கண்களால் பருகினன். பிறகு மெள்ள அவன்மீது குனிந்து, "சித்தரஞ்சனி! பொழுது புலர்ந்து விட்டது..." என்ருன் ரகசியமாக.

சித்தரஞ்சனி தனது கண்களை முழுக்க விரிக்காமல் அரைப் பார்வையாக அவனைப் பார்த்தாள். "அதனலென்ன?" என்றும்கேட்டாள்: "சண்டிகையும் வரம் கொடுத்து விட்டாள்" என்றும் சொன்ன அவள், "ஆமாம், அசரீரியை நீங்கள் கேட்கவில்லையே" என்

றும் வினவினாள்.

"இல்லை."

"ஏன்?"

"சரீரியும் அசரீரியாக முடியும்," என்று புதிர் போட்டான் அவன்.

"எனக்கு விளங்கவில்லை" என்றாள் அவள்.

"அஹம் பிரும்மாஸ்மி என்று கேட்டிருக்கிறாயா?" என்றான் சதகர்ணி.

"இப்பொழுதென்ன வேதாந்தம்?" என்றாள் அவள்.

"சற்று முன்பு அசரீரியாயிருந்தேன். சரீரியாக மாறினேன். எல்லாம் உனக்காக" என்றான் சதகர்ணி.

"விளங்கவில்லை எனக்கு" என்றாள் சித்தரஞ்சனி.

"நீ எதிர்க்கரையிலிருந்து படகில் இங்கு வந்ததைக் கவனித்தேன். நீ போகுமிடம் தெரியுமாதலால் முன்னமே சென்று சண்டிகையின் திவ்ய மங்கள விக்ரகத்துக்குப் பின்னால் மறைந்தேன். உனக்கு வரமும் அளித்தேன். நீ அங்கிருந்து புறப்பட்டதும் நானும் புறப்பட்டு உன்னைத் தொடர்ந்தேன். நீ திரும்பியும் பார்க்கவில்லை என்னை. ஆகவே உன்னைத் தொடர்ந்தேன். செடி மறைவில் உனக்கு உதவினேன். இப்பொழுது செடி மறைவில்..." என்று நடந்ததை விளக்கினான்.

"செடி மறைவில்?" என்றும் அவள் கேட்டாள்.

"மேலும் உதவுவேன்" என்றான் சதகர்ணி.

எந்த உதவியைப் பற்றி அவன் பிரஸ்தாபிக்கிறானென்பதைப் புரிந்து கொண்ட சித்தரஞ்சனி பேச்சை வேறு திசையில் திருப்பி, "அசரீரியின் குரல் உங்கள் குரல் மாதிரி இல்லையே?" என்று கேட்டாள்.

"மனிதன் தெய்வமாகும்போது கேவலம் குரலை மாற்றுவதுதானா கஷ்டம்?" என்றான் சதகர்ணி.

அவள் மெதுவாக நகைத்து, "குரலை வேறு எப்படியெல்லாம் மாற்றுவீர்கள்?" என்று கேட்டாள்.

"குயில் மாதிரி கூவுவேன். காக்கை மாதிரி கத்துவேன். குழல் ஊதுவேன்..." என்று மேலும் ஏதோ சொல்லப் போன சதகர்ணியை இடைமறித்து, "ஆமாம், நதியின் எதிர்க்கரையில் குழல் ஊதினீர்களே எதற்காக?" என்று சித்தரஞ்சனி கேட்டாள்.

"என் புரவியை அழைக்க. என் குழலைக் கேட்டதும் எதிர்க்கரையில் தலையைக் காட்டியது. அங்கேயே தங்கும்படி சைகை செய்தேன். அங்கேயே இருந்தது. அதனால்தான் இப்புறம் வர முடிந்தது" என்றான் சதகர்ணி.

கௌதமிபுத்ரன் ஜகஜ்ஜாலப் புரட்டன் என்பதைச் சித்தரஞ்சனி சந்தேகமற உணர்ந்து கொண்டாள். "ஆமாம்! உங்களைத்தான் மூட்டையாகக் கட்டிக் கொண்டு போனார்களே! எப்படித் தப்பினீர்கள்?" என்று வினவினாள்.

"அதைப் பற்றி இப்பொழுதென்ன?" என்ற கௌதமிபுத்ரன் அவள் பக்கத்தில் தரையில் படுத்து அவளைத் திருப்பித் தன்னுடன் அணைத்துக் கொண்டான்.



"அவர் சுத்தக் கஞ்சன்!"
"எப்படிச் சொல்றே?"
"தீபாவளிக்குப் பட்டாசு வெடிச்சாக் கூட பக்கத்து வீட்டுக்குச் சத்தம் கேட்டுடக் கூடாதுன்னு கதவை சாத்திக்கிட்டுத்தான் வெடிப்பார்!"

—கடலூர் கன்னியப்பன்.

அவள் பேச்சிழந்து கிடந்தாள். அதே சமயத்தில் கா லில் நின்ற மரக்கலத்தில் பேச்சு பலமாக நடந்து கொண்டிருந்தது. "நீங்கள் அனைவரும் முட்டாள்கள்" என்று நாகபாணன் சீறிக் கூவினான். அன்று க்ஷத்ரபன் மிகுந்த புத்திசாலித்தனத்துடன் நடந்து கொண்டிருந்தான். மகாக்ஷத்ரபர் வரும்வரையில் மூட்டையைப் பிரிக்க வேண்டாமென்று உத்தரவிட்டுத் தளத்தில் கிடந்த மூட்டையைக் காலால் ஒரு முறை உதைத்தான். மூட்டைக்குள்ளிருந்து முனகல் பலமாகக் கேட்டது. "மாப்பிள்ளையாகக் கனவு காண்பவன் கதியெல்லாம் இப்படித்தான். க்ஷத்ரபன் மாப்பிள்ளையாவது அத்தனை சுலபமா?" என்று க்ஷத்ரபன் இரைந்தான். "ஹூம், ஹூம்" என்று மூட்டைக்குள்ளிருந்து முனகல் மீண்டும் மீண்டும் கேட்டது.

"இன்னொரு முறை முனகினாயோ என் கத்தியை மூட்டைக்குள் பாய்ச்சிவிடுவேன்" என்று கூவினான் க்ஷத்ரபன்.

பொழுது விடியும் நேரத்தில் நாகபாணனும் மரக்கலத்துக்கு வந்து சேர்ந்தான். மூட்டை கட்டியபடியே இருந்ததைப் பார்த்து "இன்னும் ஏன் மூட்டையை அவிழ்க்கவில்லை?" என்று கோபத்துடன் வினவினான் நாகபாணன்.

"மூட்டையை அவிழ்க்க உத்தரவில்லையே?" என்றான் க்ஷத்ரபன்.

"சரி சரி அவிழ்த்துவிடு" என்று நாகபாணன் உத்தரவிட்டதும் மரக்கல மாலுமிகள் மூட்டையை அவிழ்த்தனர். மூட்டைக்குள்ளிருந்து எழுந்தவனைப் பார்த்ததும் நாகபாணன் மிகுந்த சீற்றத்தை அடைந்தான். அடுத்த விநாடி மூட்டைக்குள் இருந்து எழுந்த காஷ்டானன் கைகால்களை உதறிச் சரிப்படுத்திக் கொண்டு வேகமாக க்ஷத்ரபன் மீது பாய்ந்து அவன் குரல்வளையைப் பிடித்துக் கொண்டான்.

(தொடரும்)

கொடுக்க முடியாத விலை

போட்டிக் கதை—11.

கோவிந்தன் கடகடவென்று சிரித்தார். அப்படிச் சிரிக்கும்படி தான் என்ன சொன்னேம் என்பது விளங்காமல் திகைத்தார் வரது.

கோவிந்தன் முகத்தில் கொஞ்சம் கொஞ்சமாகச் சிரிப்பு தேய்ந்து கடுமை பரவியது.

"வரது! இந்தக் கேள்வியை என்னிடம் கேட்பதற்கு முன் உன் நிலைமை, தகுதி பற்றிக் கொஞ்சமாவது யோசித்தாயா?"

பல முறை தீர்க்கமாக யோசித்துப் பார்த்த பின்னர்தான் அன்று வரது அந்த வீட்டு வாயிற்படியை மிதித்திருந்தார். அவரது ஒரே மகள் பாமா சம்பந்தப்பட்ட விஷயம். ஒத்திப் போடவோ ஒதுக்கி விடவோ இயலாத அளவு சிக்கலாகிவிட்ட பிரச்னை.

வரதுவும் கோவிந்தனும் ஒரே ஊர்க்காரர்கள். சேர்ந்து படித்தவர்கள். இன்னும் நண்பர்கள். ஞாயிற்றுக்கிழமை தவறாமல் வரது கோவிந்தனைப் பார்க்க வருவார். நண்பர்கள் இருவரும் 'செஸ்' ஆடுவார்கள். பகல் சிற்றுண்டி ஒன்றாகச் சாப்பிடுவார்கள். பழைய சமாசாரங்களை அசை போட்டு மகிழ்வார்கள். மறைந்து போன நண்பர்களுக்காகக் கண்ணீர் சிந்துவார்கள்.

ஆனால் கோவிந்தன் வர்த்தக உலகில் ஒரு பிரபலமான புள்ளி. பல வர்த்தக நிறுவனங்களில் தொடர்பும் பங்கும் உண்டு. அவருக்கு வர வேண்டிய வருமானத்தைச் சரி பார்க்கவே ஒரு தனி அலுவலகம் இயங்கி வந்தது.

வரது அந்த ஊர் பள்ளிக்கூடத்தில் ஆசிரியராகச் சேர்ந்து, படிப்படியாக உயர்ந்து இப்போது தான் தலைமை ஆசிரியர் பதவியை எட்டிப் பிடித்திருந்தார். இன்னும் இரண்டு ஆண்டுகளில் ஓய்வு பெற வேண்டும்.

ரவி கோவிந்தனின் ஒரே பிள்ளை; 'பிஸினெஸ்'ஸில் கோவிந்தனின் வலது கை. பி. எஸ் ஸி-படித்து முடித்திருந்த வரதுவின் மகள் பாமாவிற்குத் தன் நிறுவனத்திலேயே ஒரு வேலை போட்டுக் கொடுத்தார். அவள் திறமையைக் கண்ட ரவி அவளைத் தன் அந்தரங்கக் காரியதரிசியாகப் போட்டுக் கொண்டான். கோவிந்தன் அதைப் பொருட்படுத்தவில்லை.

அலுவல்கள் பொருட்டு நெருங்கிப் பழக வேண்டிய அவர்கள் ஒருவரிடம் ஒருவர் தங்கள் இதயங்களை மட்டும் அல்ல—உடலையும் ஒப்படைத்து விட்டனர். எல்லை மீறப்பட்டு விட்டது- இயற்கை விதித்த கோடுகள் தாண்டப்பட்டு விட்டன.

ரவி நல்லவன்; ஆனால் அப்பாவிற்குப் பயந்தவன். பாமாவைக் கைகழுவும் எண்ணம் அவனுக்கு இல்லை. கோவிந்தனும் வரதுவும் பழகும் முறை அவனுக்குத் தெரியும். "உன் அப்பாவை விட்டு நீ பேச்சை ஆரம்பிக்கச் சொல். அப்புறம் நான் மேலே பார்த்துக் கொள்கிறேன்!" என்று அவன் பாமாவிற்குக் கொடுத்த தைரியத்தின் பேரில் வரது—

'செஸ்' ஆட்டத்தினிடையே தன் 'ராணி'யைக் கோவிந்தனின் 'ராஜா' பக்கத்தில் நகர்த்தியபடியே, "ஏன் கோவிந்து! என் பெண்ணை உன் பிள்ளைக்குக் கல்யாணம் செய்து கொள்கிறாயா?" எனக் கேட்டு விட்டார்.

சற்று அதிர்ச்சியைத் தாங்கிய கோவிந்தன் கடகட'வென்று சிரித்துவிட்டு, வரது தன் நிலையைப் பற்றி யோசித்தாரா என்று எகத்தாளமாக வினவ.—



வரதுவின் முகம் சிவந்தது. ''என் நிலைமை எனக்குத் தெரியும், அப்பா! உன்னுடன் சமமாக உட்கார்ந்து பேசக் கூட எனக்கு அருகதை கிடையாது. எனக்குப் புரிகிறது. நான் இப்போது உட்கார்ந்திருக்கும் இந்த நாற்காலியின் விலை என் மூன்று மாதச் சம்பளம். ஆனால் நீ என்னிடம் இத்தனை நாட்கள் அப்படிப் பழகவில்லையே! தராதரம் பார்க்கவில்லையே...! எத்தனை பெருந்தன்மையுடன் என்னை நீ நடத்துகிறாய்! அந்த உரிமையில்...''

''அங்கேதான் நான் தப்பு செய்ததே! அவரவர்களை இருக்க வேண்டிய இடத்தில் வைத்திருந்தால் இப்படிக் கேட்கத் துணிவு வருமா? என் ரவி எங்கே? உன் பெண் எங்கே? அவன் நிழலில் ஒதுங்கக் கூடத் தகுதி உண்டா...? எத்தனை பெரிய இடத்துச் சம்பந்தங்களை எனக்குத் தகுதி இல்லை என்று ஒதுக்கி இருக்கிறேன்...! எனக்கு நீ...நீ...! சம்பந்தி!! சொப்பனத்தில் கூட உனக்கு அந்த எண்ணம் வந்திருக்கக் கூடாது!''

''உன் பிள்ளை அப்படி நினைக்கவில்லையே... பாமாவுடன் அவன் அந்த எண்ணத்தில்தான் பழகுகிறான்.''

''அவன் சின்னப் பையன்... வயசுக்கோளாறு. உன் பெண் இப்படித் தகாத ஆசையை வளர்த்துக் கொள்ளாமல் நீ ஆரம்பத்திலேயே வெட்டி எறிந்திருக்க வேண்டும்!''

''கோவிந்தா!... நீ என்னை விட வயதில் சின்னவன். உன் காலில் விழக் கூட நான் தயார்... அவர்கள் தப்புப் பண்ணி விட்டார்கள். உன் பிள்ளையைச் சின்னப் பையன் என்று சொன்னாயே... அந்தக் கன்று பயிரை மேய்ந்து விட்டது!''

இதைச் சொல்வதற்குள் வரது கூனிக் குறுகிப் போனார்.

கோவிந்தன் விழிகளில் ஒரு லேசான குலுக்கல்.. அவ்வளவே! அதை வெளியே காட்டிக் கொள்ளவில்லை. ''சபாஷ் வரது...! சபாஷ்!... உன் பெண்ணைச் சரியாகத் தயார் செய்துதான் வேலைக்கு அனுப்பியிருக்கிறாய்...? உம்! இது எத்தனையாவது மாதம்?'' என அதட்டிக் கேட்டார் கோவிந்தன்.

வரது தலையைக் குனிந்தபடி ''நாலாவது மாதம்!'' என முனகினார்.

''இவ்வளவுதானே...! எனக்குத் தெரிந்த நர்ஸிங் ஹோம் இருக்கிறது.. எந்தக் கேள்வியும் கேட்க மாட்டார்கள்... நீ பைசா செலவழிக்க வேண்டாம்...''

''கோவிந்தா! இது அவன் வாழ்க்கை.





அருள்வாக்கு

ஜனநாயகத்தின் அம்சமாக நாம் ஆதி காலத்திலிருந்தே பார்க்கிற ஒன்று, ஸகல ஸமூஹத்தினரும் சேர்ந்து பெரிய அளவில் ராஜ்யம் முழுதற்குமான காரியங்களைக் கவனித்ததோடு மட்டுமில்லாமல், அந்தந்த ஜாதியினரும் ஸ்வதந்த்ரமாகத் தங்களுடைய கூட்டு வாழ்க்கையை நாட்டாண்மைகள் மூலம் நிர்வஹித்துக் கொண்டதாகும். 'குலம்' என்பது ஒரு குடும்பத்தைக் குறித்த ஏற்பாடு; ராஷ்ட்ரம், ஜன பதம் என்கிறவை ஒரு ராஜ்யம் (ஜனபதம் என்றால் டவுனாக இல்லாத 'கன்ட்ரி' — க்ராமப்புறம் — என்றும் சொல்கிறார்கள்.); இந்த இரண்டுக்கும் நடுவே 'ச்ரேணி' என்று ஒன்று. அது ஒவ்வொரு தொழில்காரர்கள் ஒன்றாகச் சேர்ந்த அமைப்பு. 'சேணியர்' என்று இப்போது நெசவுத் தொழிலில் உள்ளவர்களைச் சொல்வது 'ச்ரேணியர்' என்பதிலிருந்து வந்தது தான். அவரவர் தொழிலை வைத்து Guild கள் என்பது போல் ஏற்பட்ட ச்ரேணிகளில் நெசவுத் தொழிற்காரர்கள் நன்றாகக் கட்டுக் கோப்புடன் தங்களையும் ஒரு ஸமூஹமாக செய்து கொண்டு அதனால் ச்ரேணியர், சேணியர் என்றே சிறப்பாகப் பெயர் பெற்றிருக்கிறார்கள் போலிருக்கிறது.

ரொம்பவும் பூர்வ காலத்தில், அதாவது இன்றைக்கு நாகரிக உச்சியிலுள்ள மேல் நாட்டுக் காரர்களுக்கு நாகரிகம் என்றால் என்ன என்று தெரியாத காலத்திலேயே, நம்முடைய தேசத்தில் மக்கள் பலவிதங்களில் குடியரசு, ஜனநாயகம், Self-Government ஸ்வய ஆட்சி) முதலானவற்றின் அம்சங்களைப் பெற்றிருந்திருக்கிறார்களென்று காட்டுவதற்காக ஏதோ கொஞ்சம் சொன்னேன். அந்த நாளிலிருந்தே நம் நாட்டில் ப்ரஜை என்பவன் ஆளப்படுபவனாக மட்டுமில்லாமல் ஆட்சியிலும் தானே ஒரு பங்கு பெற்றிருந்தானென்று தெரிவிக்க நினைத்தேன்.

—ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

எதிர்காலம் சம்பந்தப்பட்டது.''

''ஏன்! என் வாழ்க்கைப் பிரச்னை கூட.... கல்யாணம் நடந்து ஐந்தாம் மாதம் குழந்தை பிறந்தால் என் கௌரவம் என்ன ஆகிறது! என் பிள்ளையைப் பற்றி என்ன பேசுவார்கள்? காறித் துப்புவார்கள்!''

''ரவியைக் கூப்பிட்டு நீயே கேள்... நான் சொல்வது உண்மை!'' — வரது மன்றாடினார்.

''எதற்கு! நான் நம்பாமல் போனால் தானே!... உன்னை நான் பரிபூரணமாக நம்புகிறேன்... ரவி தப்பு செய்து விட்டான்... எல்லாப் பெரிய வீட்டுப் பிள்ளைகளைப் போல் கொஞ்சம் விளையாடி விட்டான்... அதற்காக உன் மகள் இந்த வீட்டு மருமகளாக வர முடியாது... புரிகிறதா...? எவ்வளவு வேண்டும்? ஐம்பதாயிரம்? லட்சம்...? இரண்டு லட்சம்?''

வரது எழுந்து விட்டார். ''சீ! நீயும் ஒரு மனுஷனா?... உன்னைப் போய் என் நண்பன் என்று நினைத்து...''

கோவிந்தனும் கோபாவேசத்துடன் உறுமினார். ''போ வெளியே!'' என வாசற்புறம் கையைக் காட்டினார். ''இங்கு கூச்சல் போட்டுக் கலாட்டா செய்யலாம் என்று நினைக்காதே... உனக்கு மிச்சம் மீதி இருக்கிற கொஞ்சம் மானத்தையும் சந்தி சிரிக்க வைத்து விடுவேன்...! ஜாக்கிரதை...!'' என மிரட்டினார்.

வரது வெளியே நடந்தார். பலமுறை இந்தக் கோவிந்தனை செஸ் ஆட்டத்தில் ஸ்தம்பிக்க வைத்திருக்கிறார். வட்டியும் அசலுமாய்ச் சேர்த்து இப்படிக் 'கட்டி'ப் போட்டு விட்டானே!

பாமாவிற்கு விஷயம் தெரிய வந்தது... அவளைக் கோபித்துக் கொள்ளும் நேரம் கடந்து விட்டது.

ஆரம்பத்தில் அவருக்கு இந்த நட்பு தெரிய வந்த போது வெட்டி எறிந்திருக்க வேண்டும். இப்போது கோடரிக்குப் பயப்படாத பெரிய மரமாக வளர்ந்த பின்னர்?

பாமா தைரியம் சொன்னாள். ''நீங்கள் கவலைப்படாதீர்கள். ரவி அப்படியில்லை. நாளைக்கு அவரைப் பார்த்து நான் கேட்கிறேன்!'' என்றாள்.

மறுநாள் ரவி அலுவலகம் வரவில்லை. இரவோடு இரவாக பம்பாய் புறப்பட்டு விட்டானாம்... அங்கிருந்து அமெரிக்காவிற்குப் பயணம்... அங்கே மூன்று வருஷப் பயிற்சியாம்...

இரண்டாவது — பாமாவின் வேலை பறிக்கப்பட்டது. முன் அறிவிப்புத் தராத காரணத்திற்காக ஒரு வருஷச் சம்பளம் தரப்பட்டது. அது மட்டுமல்ல. கோவிந்தன் கையெழுத்திட்ட ஒரு நன்னடத்தைக்கான 'சர்டிபிகேட்!'

பாமா இடிந்து போய் வெளியே வந்தாள். இனி வீட்டிற்கு எந்த முகத்துடன் போவது? வரதுவை எப்படி ஏறிட்டுப் பார்ப்பது?

அவள் வீடு திரும்பவே இல்லை.

வரது தேடினார். காரணத்தைச் சொல்லி வெளியே கேட்க முடியவில்லை. எங்கே போனாளோ? என்ன செய்து கொண்டாளோ...? வரது நடைப்பிணமாகவே மாறி விட்டார். வேலையிலிருந்து முன் கூட்டியே ஓய்வு பெற்றுக் கொண்டு தன் கிராமத்திற்குப்

போய் விட்டார்.

வருஷங்கள் நான்கு மறைந்தன.

அமெரிக்கா போன ரவி உண்மையாகவே பல வர்த்தக நிறுவனங்களில் பயிற்சி பெற்ருன். கோவிந்தன் பணபலம்பெருகப்பெரும் உதவியாக இருந்தான்.

கோவிந்தனுக்கு உள்ளூர ஒருபயம்உண்டு. அந்தச் சபலபுத்திக்காரன் — இங்கு பாமாவிடம் பழகியது போல் — ஒரு அமெரிக்கப் பெண்ணுடன் உறவுவைத்துக்கொண்டால்— முன்பு செய்தது போல் வெறும் அதட்டலில் வெட்டி எறிய முடியாதே!

நண்பர் ஒருவரை ரவியைக் கண்காணிக்க ஏற்பாடு செய்திருந்தார். ஆனல் அவர் பயந்தபடி ரவி ஏதும் செய்யவில்லை. தன் வேலையில் கண்ணும் கருத்துமாக இருந்தான். கோவிந்தனுக்குப் பரம திருப்தி.

அவருக்குச் சமமான அந்தஸ்தில்—அவரை விடப் பல மடங்கு பணபலம் உள்ள இடத்தில் சம்பந்தம் வைத்துக் கொள்ள விரும்பினர்கள். பெண்ணை அமெரிக்காவிற்குக் கூட்டிப் போய் ரவியைக் காட்டினர்கள். இருவருக்கும் மனம் ஒப்பித் திருமணத் தேதி நிச்சயிக்கப்பட்டது.

சென்னையில் கோடீசுவரர்கள் மட்டுமே நினைத்துப்பார்க்கக்கூடியதிருமணமண்டபம் ஏற்பாடு செய்யப்பட்டது. அழைப்புக்கள் பத்து வகையில் தயாராயின. கோவிந்தன் பெயர் தெரியாத வட்டாரங்களே இடையாது. ஆகவே அரசியல் தலைவர்கள், வர்த்தக வட்டாரங்கள், அயல் நாட்டுத் தூதரகங்கள், திரைப்பட பெரும் புள்ளிகள் என அழைப்புகள் அனுப்பப்பட்டன. அவர்கள் வருவார்கள் என எதிர்பார்க்கப்பட்டனர்.

கோவிந்தன் மறவாமல், இல்லை, வேண்டும் என்றே, வரதுவின் கிராமத்து விலாசத்திற்கு ஒரு அழைப்பு அனுப்பச் செய்தார்.

மறுநாள் காலை அமெரிக்காவிலிருந்து ரவி வருகிருன்.

வீட்டில் சுமங்கலிப் பிரார்த்தனை, நதியாராதனைக்கான ஏற்பாடுகள் பெருத்த அளவில் நடந்து கொண்டிருக்கின்றன.

பேரிடியாகச் செய்தி வந்தது. ரவி வந்த விமானம் இறங்கும்போது பம்பாயில் — தரையில் மோதி — ரவி அங்கேயே...

ரவியின் உடலை ஒரு பொட்டலமாகத் தூக்கிக் கொண்டு வந்தார்கள்.

கோவிந்தன் கதறினர். தன் அந்தஸ்து, கௌரவம், பணபலம், செல்வாக்கு எல்லாவற்றிற்கும் மேலாக ஆண்டவன்... வேறு மாதிரியாக நினைத்து விட்டான்.

திருமணத்திற்காக வந்தவர்கள் மணமகனின் இறுதி யாத்திரைக்காகத் தங்க வேண்டி வந்தது.

அன்று மட்டும் பாமாவை மருமகளாக்கிக் கொண்டிருந்தால்— விளக்கேற்ற அந்தப் பெண்ணை வீட்டிற்கு அழைத்திருந்தால்—

இப்படி அவர் வீடு, உலகம் ஒசேயடியாக இருண்டிருக்காது.

''யார் கொள்ளியிடப் பேர்ளெர்கள்?''— புரோகிதரின் கேள்வி.

தகப்பனுக்குக் கொள்ளியிட வேண்டியவனுக்குத் தகப்பன் எரியூட்டுவதா? கோவிந்தனுக்குத் தாளவில்லை.

அவரைச் சமாதானப்படுத்திக் குளிக்கச் செய்து, ஈர உடையுடன் வெளியே வந்த போது—

''மாமா!''

பரிச்சயமான குரல். பழகிய முகம் — எதிரே பாமா!

திலகம் இழந்த நெற்றி. அழுது வீங்கிய முகம்.

''இப்படி நடக்கும் என நான் எதிர்பார்க்கவேயில்லை, மாமா...! என் கழுத்தில் தாலி கட்டாவிட்டாலும் உங்கள் பிள்ளையாக நூறு ஆண்டுக் காலம் வாழ வேண்டும் என்று பிரார்த்தித்தேனே!'' — என விம்மினுள்.

''எனக்கு வேண்டும்... இன்னமும் வேண்டும்...! நான் கொடுமைக்காரன். உன் அப்பாவை அப்படிப் பேசியதற்கு — உன்னை உதாசீனப்படுத்தியதற்குப் பலன் — என் குடும்பமே விளங்காமல் போய் விட்டது..'' என்று அழுதார் கோவிந்தன்.

பாமா ஆதரவுடன் அவரைத் தாங்கிப் பிடித்தாள்.

''இல்லை மாமா! உங்கள் குடும்பப் பெயர் காப்பாற்றப்பட — அவர் பிள்ளை இருக்கிருனே...! அதோ பாருங்கள்...!''

வரது கூட்டத்தை விலக்கிக் கொண்டு ஒரு மூன்று வயதுக் குழந்தையுடன் உள்ளே நுழைந்தார்.

கோவிந்தன் தன்னை மறந்தார். பல வருஷங்கள் இளமையாகிப் போனுர்... ரவி சாகவில்லை. இதோ இருக்கிருன்... அவன் இன்னும் சின்னப் பிள்ளை... இப்படித்தான் அவனும் குழந்தையாக இருந்த போது—

ரவியின் மறுபதிப்பான அந்தக் குழந்தை வியப்புடன் அந்தப் புதுத் தாத்தாவைப் பார்த்துக் கொண்டிருந்தது.

ரவியின் பதிமூன்று நாட்கள் காரியங்கள் முடிந்தன.

வரது புறப்படத் தயாரானுர். கூடப் பாமாவும் குழந்தையும்.

''நீ எங்கே அம்மா புறப்பட்டாய்...? இது உன் வீடு...!''

''இல்லை மாமா! உங்கள் வீடு... எனக்கு நாளை மறுபடி வேலைக்குப் போக வேண்டும்... எடுத்த லீவு முடிந்து விட்டது...''

''நீ எதற்கு வேலைக்குப் போக வேண்டும்...? நீ இந்த வீட்டு மருமகள்...''

''இல்லை மாமா...! அந்தப் பாக்கியம் நான் செய்யவில்லை... நான் உங்கள் வீட்டு மருமகள் இல்லை... இந்தப் பிள்ளைதான் உங்கள் பேரன்... இப்போது என்னை விட்டுப் பிரிந்திருக்க மாட்டான்... விவரம் தெரிந்த பிறகு— அவன் விரும்பினுல் இங்கே கட்டாயம் அனுப்பி வைக்கிறேன்.. நிச்சயமாக இவன் தன் அப்பாவிற்கு வருஷம் தவருமல் எல்லாம் செய்வான், மாமா!'' — என்று கூறியபடி குழந்தையோடு புறப்பட்டாள் பாமா.

அவர்கள் போவதைத் தடுக்க முடியாமல் பார்த்துக் கொண்டு இருந்தார் கோவிந்தன்.



குறு நாவல்

ஷ்.... அந்தரங்கம்!

பட்டுக்கோட்டை பிரபாகர்

தூரைராஜின் நெற்றியில் துவங்கின ரத்த வரி கோணலாகப் பாதை அமைத்துக் கொண்டு சரிந்து, மூக்கின் நுனியிலிருந்து சொட், சொட் என்று சட்டை முழுக்க நனைத்துக் கொண்டிருந்தது.

நல்ல நாளும் அதுவுமாய், முதல் வாக்கியத்திலேயே ரத்தமா என்று மனசு களிக்கிறவர்களின் செண்டிமெண்ட்டுக்கு மதிப்புக் கொடுத்து நதி மூலத்தில் இருந்து ஆரம்பிக்கலாமா?

இந்தக் கதையை நான்கால் வகுத்தால் பாக்கி நிற்பது—'முற்றும்' என்கிற வார்த்தை. ஆகவே, வகுக்கலாம்.

1

சென்னையின் ஒரு விரலான அஷோக் நகர்.

ஆண்ட்டெனா என்னும் ஹேர்ப்பின் குத்திக் கொண்ட பங்களாக்களில் கொஞ்சம் ரிசர்வ்ட் டைப்பாக ஒதுங்கி நிற்கிற அந்தப் பங்களாவில்.....

வெய்ட். கொஞ்சம் இயற்கையைக் கண்டுக்கலாம்... ஃபோகஸ் நாடக விளக்கின் மேல் ஆரஞ்சு வண்ண சலஃபன் காகிதம் சுற்றினதைப் போல் மாலை வெளிச்சம் ஊரை நனைத்துக் கொண்டிருக்க.... மேற்கே சூரியனுக்குப் பிரிவு உபசாரம் நடந்து கொண்டிருந்தது. கம்யூனிசத் தென்றல் பாரபட்சமின்றி எல்லோரையும் தடவிக் கொண்டிருந்தது.

பங்களா வாசலில் பஸ் நீளத்திற்கு நின்ற காரைத் தேய்த்துத் தேய்த்து பாலிஷ் செய்து கொண்டிருந்தான்—வெள்ளை யூனிஃபார்ம், தொப்பி போடாத, கைலி அணிந்த டிரைவர்.

உள்ளே .....

வைர நெக்லஸைக் கண்ணாடி முன் லெஃப்ட் அண்ட் ரைட் திரும்பித் திரும்பி ஒளிச் சிதறலை ரசித்துக் கொண்டிருந்தாள் வசந்தா. கடைசி நிமிட டச்சப் வேலைகள் பாக்கியிருந்தன.

அருகே கட்டில் மேல் சூட்கேஸ் புறப்படத் தயாராய் இருந்தது.

பாத்ரூமிலிருந்து நீரின் ஒலி தப்பித்து வந்து கொண்டிருக்க....

கழுத்தே இல்லாத வசந்தா, பட்டு சர சரக்க நடந்து, இணைப்புக் குளியலறைக் கதவைத் தட்டி, ''சீக்கிரங்க. நான் ரெடி. சரளாவும் இந் நேரம் ரெடியாகியிருப்பாள். நீங்கதான் லேட்'' என்றாள்.

''வசந்தா, நாமு என்ன பஸ்ஸிலா போறோம்? ஏன் பறக்கறே?''

கதவு கரகர ஆண் குரலில் பேசியது.

''எட்டு மணிக்கு நிச்சயதார்த்தம்.''

''இப்ப என்ன மணி?''

''ஆறே கால்.''

''இங்கேர்ந்து ஒரு மணி நேரத்தில் செங்கல்பட்டு.''

''அதுக்காக, கடைசி நிமிஷத்தில போய் நிக்கணுமா?''

''இதோ வந்துட்டேன்!''

முதலில் செண்ட் வாசனை உள்ளே வர... அப்புறம் சூரிதாரில் நுழைந்த சரளா, ''மம்மி, நான் ரெடி'' என்றாள். என்றவள் கதையில் முக்கியமில்லை. எனினும் வர்ணிக்கலாம், தப்பில்லை.

புருவம் எடுத்துவிட்டு வரைந்திருந்தாள். உதட்டில் 'பளிச்' என்று மின்னினாள். முன் பல்லில் லேசாய் லிப்ஸ்டிக் கரை பட்டிருந்தது. இமைகள் ஸ்டிஃபாய்ப் படபடத்தன. கன்னங்களில் பருக்களைச் சாமர்த்தியமாய்ப் போர்த்தியிருந்தாள். ஒரு நீள செயின் கழுத்தருகே முடிச்சிடப்பட்டிருந்தது. அலட்சியத் துப்பட்டா. அதனால் பளிச் — பளிச்.

''டாடி இன்னும் குளிக்கலையா? போ மம்மி. நான் இன்னும் அரை மணி கழிச்சு மேக்கப் ஆரம்பிச்சிருப்பேன்.''

சிணுங்கிவிட்டு, ''ஹால்ல இருக்கேன்'' என்று தன் செண்ட் வாசனையைக் கையில் பிடித்து அழைத்துக் கொண்டு வெளியே சென்றாள்.

பாத்ரூம் கதவு திறந்து, இடுப்பில் துண்டோடு வெளியே வந்தார் சபாபதி. கப்போர்டைத் திறந்து டிரெஸ் அணிந்து கொண்டு டிரெஸ்ஸிங் மேஜைக்கு வந்து சீப்பெடுத்தார். பத்து நிமிடங்களில் புறப்படத் தயாரானார்.

சபாபதி உயரம். தலையில் பரவலாய் நரை. மூக்கில் ஒரு சின்ன வளைவு. இரண்டு பக்கத் தோற்றப் புகைப்படங்களையும் சேரப் பார்த்தால் வேறு, வேறு நபர் என்போம். திடகாத்திரமான மீசை. உருவப் படம் வரைபவர்களுக்குச் சுலபமாகத் தாடையில் ஒரு செண்டர் வளைவு. கழுத்தில் தங்கச் சங்கிலி.

''போவமா வசந்தா?''

அறையை விட்டு ஹாலுக்கு வந்தபோது...

''போங்க டாட், நீங்க மோசம். நாங்க லேடீசே ரெடியாகிட்டோம். நீங்க இன்னிக்கு 'லேட்' பண்ணிட்டீங்க'' என்று நாவலை மூடி டிரேயில் வீசி எழுந்தாள் சரளா.

''வசந்தா, எல்லாக் கதவையும் மூடிட்டியா?'' என்றார்.

''ஆச்சு. பணம் எடுத்துக்கிட்டீங்கள்ல?''

''ம். நீங்க போய்க் கார்ல ஏறுங்க.''

''நீங்க?''

''நான் ஒரே ஒரு போன் பண்ணிட்டு...''

''நோ டாட்! எப்பப் பாரு! பிஸினஸ்! எந்த ஃபங்ஷனா இருந்தாலும் வர்றதில்லை. வந்தாலும் கடைசி நிமிஷத்தில வர்றது. இது முக்கியமான கல்யாணம்னுதானே நிச்சயதார்த்தத்துக்கே உங்களைப் பிடிவாதமா இழுத்துக்கிட்டுப் போறோம். போன் பேசினா....



ஏதாச்சும் வேலை வந்துடும். அப்புறம் நீங்க வரமாட்டிங்க.''

''ஓகே. வா, போகலாம்.''

டிரைவர் வந்து சூட்கேஸையும், 'வலைக் கூடையையும் எடுத்துக் கொண்டான்.

சபாபதி செருப்பணிந்த போது....

ஹாலின் டெலிபோன் ஒலிக்கத் துவங்கியது.

மகளைப் பார்த்துச் சிரித்தார்.

''நானுத்தான் பண்ணக் கூடாது. வர்ற போனையாவது பேசலாமில்லையா?''

''இருங்க. நான் போய்ப் பேசறேன்.''

சரளா போனெடுத்து, ''ஹலோ''.

''ஹலோ, சரளாவாம்மா? நான் வெல்கம் இண்டஸ்ட்ரிமானேஜர் ராமசுப்புபேசறேன். அப்பாவைப் பேசச் சொல்லும்மா.''

''அப்பா.... அப்பா.... வெளியூர் புறப்பட்டுட்டு இருக்காங்க. நீங்க நாளைக்கு போன் பண்ணுங்க.''

''இல்லைம்மா. ரொம்ப முக்கியமான விஷயம். உங்கப்பா ஒரு தகவல் விசாரிக்கச் சொல்லியிருந்தார். அது விவரம் கிடைச்சிடுச்சி. உடனடியா அவருக்குத் தெரியப் படுத்தி ஆகணும்.''

சரளா வெறுப்பாக ரிசீவரைப் பொத்திக் கொண்டு, ''இந்தியா முழுக்கத் தீ பிடிச்சி எரியுதாம். வாங்க, என்னன்னு கேட்டு நெருப்பை அணைங்க. நாங்க கார்ல இருக்கோம். மானேஜர் ராமசுப்பு பேசறார்'' என்றாள்.

சபாபதி சிரித்துக் கொண்டே வந்து ரிசீவரை வாங்கிக் கொண்டு, ''ஹலோ, சொல்லுங்க, ராமசுப்பு'' என்றார்.

''வணக்கம் சார். உங்க சந்தேகம் உறுதியாய்டுச்சி சார். பல வகைகளிலே நான் உறுதி பண்ணிட்டேன். ஆதாரமா சிலபேப்பர்சும் நம்ம ஆஃபீஸிலேர்ந்தே கிடைச்சிருக்கு.''

''என்ன சொல்றீங்க அப்போ?''

''எம். டி. மிஸ்டர் துரைராஜ் செஞ்சிருக்கிறதில்லுமுல்லு இதுஒண்ணுமட்டும்தான்னு நம்ப முடியலே.''

''மத்தடைரக்டர்ஸ் யாருக்காவது விஷயம் தெரியுமா?''





''தெரியாது சார். நீங்கதான் தெரிவிக்க வேணும்னு....''

''ஆமாம். உறுதியா தெரியாம எதுவும் பேசக் கூடாது.''

''இப்போ உறுதியாத் தெரியுது சார்.''

''முறைப்படி டைரக்டர்ஸ் மீட்டிங்க வச்சி முடிவெடுக்கலாம். ஆனா, அதுக்கு முன்னாடி துரைராஜ்கூட நான் தனியா பேச விரும்பறேன். எனக்கு நல்ல நண்பன் அவன். நிர்வாக இயக்குனரா அவனை நியமிக்கிறதிலே ரொம்ப முயற்சி எடுத்தேன் நான். இப்போ.... வெக்கமா இருக்கு. இது, ஏதோ ஒரு ஸ்லிப். நீங்க, அந்தப் பேப்பர்சை எடுத்துக்கிட்டு நேரா என் வீட்டுக்கு வாங்க.''

''சார், நீங்க வெளியூர் எங்கேயோ போறதா....''

''இப்போ எரியற பிரச்னை இதுதான். இதுதான் முக்கியம். ஒரு கல்யாண நிச்சய தார்த்தம். நான் நாளைக்கு முகூர்த்தத்திலே கலந்துக்கிட்டா போதும். நீங்க உடனே வாங்க.''

வைத்துவிட்டு வாசலுக்கு நடக்க.... சரளா அதற்குள் கார் ஹாரனை விடாமல் அழுத்தினாள்.

அருகே வந்து..... ''ஸாரி டியர், நீ விளையாட்டா சொன்ன மாதிரி ஒரு பர்னிங் ப்ராப்ளம் வந்திருக்கு. என் ஃப்ரெண்ட் துரைராஜ் இல்லே, அவன் பிச்சைக்காரத்தனமா கம்பெனில சில ஊழல்கள் செஞ்சிட்டான். இந்தப் பிரச்னையை நான் தீர்த்தாகணும். நீங்க போங்க. காலையிலே டாண்ணு முகூர்த்தத்துக்கு வந்துடுவேன்.''

''என்ன டாடி?'' என்று சிணுங்கினாள் சரளா.

''அப்பா பத்தி இன்னைக்குத்தான் தெரியுமா? இது சகஜம்தானே? என்னைக்குச் சேர்ந்து வந்திருக்கார் நம்மோட? சரி, உங்க தலைவலியைக்கட்டிக்கிட்டு நீங்களே அழுங்க. நாங்க புறப்படறோம். வண்டியை அனுப்பி வைக்கிறோம்.''

''வேணும். நான் டாக்ஸி பிடிச்சி வர்றேன். அனுப்ப வேணும். டிரைவர், நிதானமாப் போப்பா. பெட்ரோல் இருக்கா?''

''இருக்குங்கய்யா.''

''சரி போ. வழில நிப்பாட்டக் கூடாது. என்ன?''

கர்ர் புறப்பட்டுச் சென்றதும், உள்ளே வந்து ஹாலில் இருந்த சோபாவில் அமர்ந்தார் சபாபதி.

சிந்தனையாய்ச் சிகரெட் குடித்தார்.

கால் மணி நேரத்தில் ஸ்கூட்டர் ஒன்று வந்து நிற்க, விலாவுக்கும், கைக்கும் நடுவில், ஃபைல்கள் வைத்திருந்த, கண்ணாடி அணிந்த ராமசுப்பு மன்னிக்கச் சொல்லி உள்ளே வந்து அமரச் சொல்லி அமர்ந்தார்.

''ஜெர்மனிக்கே கால் போட்டுப் பேசினீங்க தானே?'' என்றார் சபாபதி.

''ஆமாம் சார். இந்த ஓவர்சீஸ் காலை டேப் பண்ணியும் வச்சிருக்கேன்.''

''ரெண்டு மிஷினா, மூணு மிஷினா?''

''ரெண்டுதான்.''

''மொத்தம் எவ்வளவு?''

''முப்பத்தி ரெண்டு லட்சம் வருது.''

''கமிஷன் எவ்வளவு காட்டப்பட்டிருக்கு?''

''வெறும் ஏழு பர்சண்ட்.''

''ஏழு பர்சண்ட்னு கொட்டேஷன் செட்டப் ஆகியிருக்கு. அப்படித்தானே?''

''ஆமாம்.''

''ஒரிஜினல் கொட்டேஷன் கிடைச்சுதா?''

''இதோ.''

வாங்கிப் பார்த்தார் சபாபதி.

''மைகாட்! பதினெட்டு பர்சண்ட் போட்டிருக்கு. நடுவிலே காணாமல் போனது பதினொரு பர்ஸெண்ட். கணக்கு என்ன ஆச்சு ராமசுப்பு?''

''நெருக்கி மூணரை லட்ச ரூபாய்.''

''எங்கே போச்சு?''

''மிஸ்டர் துரைராஜைத்தான் கேக்கணும். இல்லேன்னா அவரோட ஸ்விஸ் பாங்க் அக்கவுண்ட்டைத்தான் கேக்கணும்.''

''டாமிட்! என்ன தைரியத்தில செஞ்சான்? ஆடிட்ல தெரியாமப் போய்டுமா?''

''ஆடிட்டர்ங்கிறவன் மனுஷன்தானே சார். ஒரு மாருதி கார் வாங்கிக் கொடுத்துட்டாப் போச்சு.''

''எட்டு டைரக்டர்சையும் முட்டாள் ஆக்கறதுன்னா....''

''அப்படி இல்லே சார் இது. எந்த டைரக்டரும் உக்காந்து வரி வரியா கணக்கு பார்க்கிறதில்லே. செல்ஃப் அக்கவுண்ட்ல தொகை ஏறுதா, சரி, விடு. எல்லாரும் பல கம்பெனிகளிலே ஷேர் வச்சிருக்கீங்க. இதிலே முழுக்க முழுக்க மிஸ்டர் துரைராஜை நம்பி விட்டுட்டீங்க.''

''என் தப்பு அது. சிபாரிசு பண்ணவன் நான். இப்போ ராமசுப்பு, இது உங்களுக்கும், எனக்கும்தான் தெரியும், இல்லையா?''

''ஆமாம்.''

''மீட்டிங்னு கொண்டு போனா, எல்லாரும் வேகப்படுவாங்க. போலீஸ் உள்ளே வரணும்


"என் சமையல் திறன் வளர உதவியது கோபி"
GOPI
Kitchen Machine
வாழ்நாள் முழுவதும் இலவச சேவை.
"சமையலறையில் எனக்கு வேண்டிய எல்லா உதவிகளையும் செய்கிறது கோபி. ஏன் தெரியுமா?
கோபி மெஷினுடன் நவீன தொழில் நுட்பத்தையும், எந்தவிதக் கூடுதல் செலவின்றி, ஒன்றல்ல மூன்று ஜாடிகளும் கிடைக்கிறது.
ஆகவே பிளெண்டிங், ட்ரை க்ரைண்டிங், வெட் க்ரைண்டிங், அல்லது எது வேண்டுமானாலும் கோபியில் மட்டுமே நொடிகளில் செய்ய முடியும். கூர்மையான பிளேடுகளைக் கையாளுதல் போன்ற தொல்லை எதுவும் இல்லை.
ஒவ்வொரு ஜாடியையும் தனித் தனியாக உபயோகிக்கலாம். அவற்றை தனித் தனியாக வாங்க வேண்டிய அவசியமில்லை. அதனால் எவ்வளவு பணம் மிச்சப்படுகிறது தெரியுமா!
கோபி மெஷின் மிகவும் சிறந்தது. அதனால் தான் உங்களுக்கு 5 ஆண்டு உத்தரவாதமும் (மோட்டார் உள்பட) ஆயுள் முழுவதும் இலவசச் சேவையும் கிடைக்கின்றன.
ஒரு பெண்ணுக்கு இதைவிட வேறென்ன வேண்டும்! கோபி இருக்கும்போது நான் சமையல் கலை வல்லுனராகவே உணர்கிறேன்"
கோபியை இப்பொழுது உங்களுக்கு 'தெர்மாகோல்' பேக்கிங்குடன் அளிக்கின்றோம். தெர்மாக்கோல் பேக்கிங்கை 1) ஹாட்கேஸ் 2) ஐஸ் பாக்ஸ் 3) பிக்னிக் கேஸ் ஆக உபயோகிக்கலாம்.
வேண்டுமானால் வாங்க கூடிய சேகரிப்பு பாத்திரம்.
இலவசம்
ஒவ்வொரு கோபி மிக்ஸியுடன் ஒரு பெரிய
நிர்லெப்
டெஃப்லான் பூசிய தோசைக்கல்
முந்துங்கள்! இச்சலுகை ஸ்டாக் கையிருப்பு உள்ளவரை மட்டுமே!
கர்நாடகா, ஆந்திரா மற்றும் தமிழ்நாட்டிற்கு விநியோகஸ்தர்கள்:
திரிப்தா மார்கெட்டிங் பி. லிட்.,
139, பாரதி சாலை (பைக்ராப்ட்ஸ் ரோடு).
சென்னை 600 014. போன்: 88599
பெங்களூர் போன்: 563322 ஹைதராபாத் போன்: 221224.

தாவண்கெரே

ஃபாஷன் துணிரகங்கள்



டெரின் பருத்தித்
துணிகள் அணிந்து
ஸ்டைலாயும் சுகமாயும்
இருந்துடுவீர்!

தி தாவண்கெரே காட்டன் மில்ஸ் லிட்.
ஹனுமந்தப்பா கட்டிடம்,
சித்ரதுர்கா ரோடு,
தாவண்கெரே-577 002.

ஷோ ரூம்கள்:
காவேரி பவன், பெங்களூர்-560 009.
தாஜிபன்பேட், ஹூப்ளி-580 020.
சித்ரதுர்கா ரோடு, தாவண்கெரே-577 002.

THOMAS/8402-B/TAM



முதல் சிறுவன் : "நம்ப வாத்தியார் சொந்தமா கோழிப் பண்ணை வைத்திருக் கார்டா!"

இரண்டாவது சிறுவன் : "ஓ, அதனால் தான் என்னோட தேர்வுப் பேப்பர் எல் லாத்திலும் முட்டை முட்டையா போட் டிருக்கிறாரோ!"

—பூவை கே. சந்திரன்

பாங்க. அவனுக்கும் அசிங்கம். கம்பெனி பேருக்கும் அசிங்கம்."

"அதனாலெ?"

"ஒரு டைரக்டர்ங்கிற முறையிலே இல் லாம.... ஒரு ஃபிரண்டுங்கிற முறையிலே நான் துரைராஜோட பேசறேன். எடுத்துச் சொல்றேன். கிளெரிக்கல் எர்ரர் மாதிரி அமைச்சு....அந்தப்பணத்தைக்கட்டவச்சி.... விஷயத்தை முடிச்சுடலாம்."

"நாளைக்கு மறுபடி அவர்...."

"தப்பு செய்யாம பார்த்துக்கறதோட, நிர் வாகத்தை ஆள் மாத்தித் தர வேண்டியது என் பொறுப்பு. நீங்க எனக்குச் செய்ய வேண்டிய உதவி — நான் சொல்றவரைக்கும் விஷயத்தை வெளில விடாம மௌனமா இருக்கிறதுதான்."

"இந்த வேலை நீங்க வாங்கிக் கொடுத்தது சார். உங்க வார்த்தைக்கு நான் கட்டுப்பட றேன். சுமுகமா முடிக்கப் பாருங்க. முடி யாமல் போனா..... டைரக்டர்ஸ் மீட்டிங்ல கொண்டு வர வேண்டியது என் கடமை."

"நான் பார்த்துக்கறேன். அந்த ஃபைல் எல்லாம் இங்கேயே இருக்கட்டும். நீங்க போய்ட்டு வாங்க."

ராமசுப்பு எழுந்து போனதும்.....

மறுபடி அந்த ஃபைல்களைப் பார்த்தார்.

நெற்றி அருகே நரம்பு துடித்தது.

எழுந்து டெலிபோனை அடைந்து, டயல் சுழற்றி, "ஹலோ, துரைராஜ் இருக்கானா? பேசச் சொல்லுப்பா" என்றார்.

2

வெள்ளை நிற ஃபியட் கார் போர்ட்டி கோவில் வந்து நின்றதும், இசையையும், என்ஜினையும் அணைத்துவிட்டு இறங்கினான் துரைராஜ்.

அழைப்பு மணி பித்தானை அழுத்திவிட்டு, நாக்குக்கடியில் வைத்திருந்த சூயிங்கத்தை மறுபடியும் மெல்ல ஆரம்பித்தான்.

கதவு திறந்தது. "வா துரை" என்றார் சபாபதி.

உள்ளே வந்ததும், கதவு சாத்தினார்.

ஹாலுக்கு வந்து சோபாவில் சாய்ந்து கொண்டு, "என்ன, வீடு அமைதியா இருக்கு? சரளா இல்லையா?" என்றான்.

"ரெண்டுபேரும்செங்கல்பட்டுபோயிருக் காங்க. நான் மட்டும்தான். தனியா உன்கூட முக்கியமா பேச வேண்டியிருந்திச்சி. சந் தர்ப்பம் இப்போ சரியா இருக்கிறதாலே தான் இப்படி ராத்திரில உன்னைக் கூப்பிட் டேன் போன்ல."

"நெவர் மைண்ட். ஒன்பது மணி ஒரு ராத்திரியே இல்லை. எனக்குப் பத்து மணிக்கு மேலதான் ராத்திரியே ஆரம்பம். என்ன இருக்கு ஃபிரிஜ்ஜிலே?"

"லெமன் ஜூஸ் வேணுமா?"

"அது உனக்கு. வேற?"

"கொண்டார்றேன்."

சபாபதி ஹாலின் ஓரத்தில் இருந்த ஃபிரிஜ் ஜைத் திறந்து கரும்பச்சை உயர பாட்டிலை யும், அருகே கப் போர்டில் இருந்து கிளாஸ் களையும் எடுத்தார்.

"ஹெல்ப் மி துரை, வந்து ஐஸ் எடுத் துக்கோ."

டிரேயில் பொருள்கள் வைத்து, எதிரெ திரே அமர்ந்தார்கள்.

துரைராஜ் பாட்டில் எடுத்து ஊற்றினான். ஐஸ் போட்டான். தான் ஒன்றை எடுத்துக் கொண்டு, சபாபதிக்கு ஒன்று நீட்டிவிட்டு, செல்லமாகத் தட்டி....

"ச்சியர்ஸ்" என்றான்.

"எனக்கில்லை" என்றார் சபாபதி.

"என்ன உனக்கில்லே?"

"நீ சொன்ன சந்தோஷம்."

"ஏன்?"

"நீ செஞ்சிருக்கிற காரியத்தால."

"வாட் காரியம்?"

முதல் பெக் முடித்துவிட்டுக் கிளாஸை வைத்து, மறுபடி நிரப்பிக் கொண்டு கேட்டான்.

"சொல்றேன். போதும். ரெண்டாவது பெக்குக்கு மேல குடிக்காதே. உன்னோட நிதானத்திலே பேசணும் நான்."

"நாலுக்கப்புறம் நான் நிதானம். சும்மா சொல்லு மேன்."

சபாபதி தயங்கினார்.

எப்படி ஆரம்பிப்பது?

ராஸ்கல்! லட்சக் கணக்கில் கம்பெனிப் பணத்தை ஜீரணம் செய்துவிட்டு எத்தனை சவடாலாய்ப் பேசுகிறான்.

நான் இவனுக்கு நண்பன்.

அதே சமயம் ஒரு பங்குதாரர்.

என் பணமும் அதில் இருக்கிறது.

நம்பிக்கைத் துரோகம்!

''துரை, வெஸ்ட் ஜெர்மனிலேர்ந்து ரெண்டு புது மிஷின்ஸ் வாங்கினமே, ஞாபக மிருக்கா?''

''கம்பெனி விஷயத்தை இப்ப ஏன் பேசறே? வீட்ல யாரும் இல்லே. நீ பர்மிஷன் கொடுத்தா நான் ஒரு போன் அடிக்கிறேன். ஒரு போன் அடிச்சா போதும். நாலு வேனும் ஜீப்பும் வரவழைக்கலாம் — தலைக்கொண்ணு, காலுக் கொண்ணுன்னு தலையணை மாதிரி.''

''ஸ்டுப்பிட்! நான் கேக்கறதுக்குப் பதில் சொல்லு.''

''என்ன கேட்டே?''

''ரெண்டு புது மிஷின்ஸ் பத்தி....''

''அதுக்கென்ன, சௌக்கியமா இருக்கு. இன்ஸ்டால் பண்ணி ஓடிக்கிட்டிருக்கு. அதுக்கப்புறம் நீ ஃபாக்டரிக்கே வரலே, இல்லே?''

''வராததுதான் தப்பாப் போச்சு.''

''கோபமா இருக்கிற மாதிரி தெரியுது.''

''நீ செஞ்சிருக்கிற காரியத்துக்குப் பன்னீர் தெளிப்பாங்க, வா.''

''என்ன சொல்றே? நேரா வா.''

''புது மிஷின்ஸ் டீலிங் எல்லாம் முடிஞ்சதா?''

''போன மாசமே முடிஞ்சதே.''

''பேமெண்ட்?''

''எல்லாம்தான்.''

''கமிஷன் விஷயம்?''

''அதுக்கென்ன ஏழு பர்ஸண்ட்டுக்கு நாம ஒத்துக்கிட்டு.....''

''ஸ்டாப்! என்கிட்டே பொய் சொல் லாதே.''

சபாபதிக்குக் கைகள் பரபரத்தன.

''என்ன பொய், இதிலே? கம் டு த ஆஃபிஸ். ஃபைல் காமிக்கிறேன், பாரு.''

''என்கிட்டேயும் ஃபைல் இருக்கு துரை. ஒரிஜினல் ஃபைல். நீ அலட்சியமா எரிக்கத் தவறின ஃபைல்.''

''வாட் நான்சென்ஸ்?''

''நீ போலியா கொட்டேஷன் தயார் பண்ணி வச்சிருக்கேங்கறேன்.''

''உளறுதே.''

''ஆதாரத்தோடதான் உளர்றேன்.''

துரைராஜ் இப்போது குடிக்க எடுத்துச் சென்ற கிளாஸை உதட்டோடு நிறுத்தி விட்டு.... சிவப்பேறின விழிகளோடு சபா பதியை உற்றுப் பார்த்தான்.

''பதினொரு பர்சண்ட் நீ பித்தலாட்டம் பண்ணியிருக்கே.''

''நோ!''

''யெஸ்!''

''நம்பாதே சபா.''

''இடியட். வெறும் வார்த்தைகளை நம்பற வன் இல்லே நான். ஜெர்மனிக்கே கால் போட்டுப் பேசியாச்சு. உன் ஆஃபீஸ் முழுக்க அலசி, ஒரிஜினல் ஃபைலைக் கண்டு பிடிச் சாச்சு, பார்க்கறியா?''

சபாபதி எழுந்து சென்று மேஜை ஒன்றின் இழுவறையைத் திறந்து, ஃபைல் எடுத்து வந்து அவன் மார்பில் விசிறினர்.



அது அவன் மேல் மோதிக் கீழே விழுந்து திறந்து கொண்டு, ஃபான் காற்றில் காகிதங் கள் புரண்டன.

நேராய்ச் சபாபதியை முறைத்தான் துரை ராஜ்.

''என்னை ஏன் முறைக்கிறே? நாளைக்கு டைரக்டர்ஸ் மீட்டிங் நடக்கும். நான் மட்டும் தான் உனக்கு ஃபிரெண்டு. இவ்வளவு தூரம் பேசிக்கிட்டிருக்கேன். மத்த எல்லோரும் உட னடியா உன்னை அரெஸ்ட் பண்றதுக்கு ஏற் பாடு செய்வாங்க. முதல் காரியமா, அப்போ முறை அவங்களை.''

''சபா, உனக்கு இது எப்படித் தெரியும்?''

''இப்போ உனக்கு அதுதான் பிரச்னையா?''

''சொல்லு, எப்படித் தெரியும்?''

''எப்படித் தெரிஞ்சா என்ன? இங்கே பாரு. இந்த விஷயம் கம்பெனில இப்போ மூணு பேருக்குத்தான் தெரியும். உனக்கு, எனக்கு, ராமகப்புவுக்கு.''

''ஓ. அவன்தானா எல்லாத்துக்கும் காரண கர்த்தா?''

''இல்லே. நீ இப்போ விஷயம் வெளில தெரிஞ்சதுக்காக ஆத்திரப்படறதிலே அர்த் தமே இல்லே துரை. இப்போ நீ சுலபமா இந்தப் பிரச்னைகளிலேர்ந்து வெளில வர முடியும்.''

''எப்படி?''

''எடுத்தபணத்தைத்திரும்பகம்பெனிக்கே சேர்த்துட்டா போதும்.''

அமைதியாய் இருந்தான் துரைராஜ்.

''அது முடியாது.



''ஏன்?''

''வீடு வாங்கிட்டேன்.''

''வெக்கமா இல்லை உனக்கு?''

''இல்லை. இதெல்லாம் பிழைக்கிற தந்திரம்.''

''துரை, நீ என் நண்பன்ங்கற ஒரே காரணத்தாலதான் இவ்வளவு தூரம் பொறுமையா உன்கிட்டே பேசிக்கிட்டிருக்கேன். பணத்தைத் திருப்பிடறதுதான் நல்லது.''

''அதான் வாய்ப்பில்லைன்னேனே.''

''வீட்டை வாங்க முடியும்னா... விக்கவும் முடியும்.''

''சபா, உலகம் புரியாம பேசாதே. நீயே சொல்லிட்டே. நம்ம மூணு பேருக்குத்தான் விவரம் தெரியும்னு. ஆடிட்டரை நான் ஏற்கனவே கவனிச்சிட்டேன். ராமசுப்புவை நான் டீல் பண்ணிக்கிறேன். அவனுக்கு வேண்டியது நியாயம் இல்லை; பங்கு! நான் பேரம் முடிச்சுக்கறேன். உன்னைப் பொறுத்த வரைக்கும் ஒரு ஐம்பதாயிரம் உனக்குத் தர்றேன். பேசாம இரு. என்ன சொல்றே?''

சபாபதி வேகமாய் நெருங்கி அவன் சட்டையைப் பிடித்தார்.

''ராஸ்கல்! செய்ற தப்பையும் செஞ்சிட்டு, என்னைக் கூட்டு சேர்க்கறியா? என் பணமும் சேர்த்துத்தான்டா அடிச்சிருக்கே. மரியாதை கெட்டுடும், ஆமா.''

''இப்ப என்ன பண்ணணுங்கறே?''

''விஷயம் டைரக்டர்ஸ் மீட்டிங் வரைக்கும் போகாம இருக்கணும்னா.... பணத்தை நீ கம்பெனிக்குக் கொடுத்தாகணும்.''



''இல்லைன்னா.... மீட்டிங்ல எல்லா டைரக்டர்சையும் வச்சிக்கிட்டு இந்த ஊழலை வெளிப்படுத்துவே. அவ்வளவுதானே?''

''ஆமாம்.''

''செய். தாராளமா செய். எனக்கு மாஸ்டர் மைண்ட். நீதான்னு சொல்வேன். ஐடியா கொடுத்ததே _நான் — பாதிப் பணம் உன்

கிட்டேதான் கொடுத்து வச்சிருக்கேன்னு கூசாமல் சொல்வேன். நம்புறுங்களோ, இல்லியோ, நம்ம நட்பை வைச்சி.... கொஞ்சமாச்சும் சந்தேகப்பட மாட்டாங்களா?''

சபாபதியின் ஆத்திரமும், தன்மானமும் உள்ளங்காலில் துவங்கி நூறு மீட்டர் ரேஸாய் எட்டு செகண்ட்டுக்குள் மூளையை அடைய....

துரைராஜின் நெஞ்சில் கை வைத்து...

''என்னடா சொன்னே, பாஸ்டர்ட்!'' என்று வேகமாய்த் தள்ள.....

அவன் போதையில் நிலை தடுமாறி.... வேகமாய்ச் சரிய.....

மேஜையின் கூரான முனையில் நெற்றி மோத.... 'ஆ' என்று அலறிக் கொண்டே சரிந்தான்.

துரைராஜின் நெற்றியில் துவங்கின ரத்த வரி கோணலாகப் பாதை அமைத்துக் கொண்டு சரிந்து, மூக்கின் நுனியிலிருந்து சொட், சொட் என்று சட்டை முழுக்க நனைத்துக் கொண்டிருந்தது.

பதற்றமாய் அவனை நெருங்கி, திறந்திருந்த அவன் விழிகளைப் பார்த்துப் பதறி, கையைப் பிடித்துப் பார்த்த சபாபதி, ''மை காட்!'' என்றார்.

3

சபாபதியின் ரத்த ஓட்டம் திடுக் என்று பிரேக் அடித்து, பயணம் தொடர... சம்பவத்தின் தீவிரம் உடனடியாய் அவரைத் தாக்கியது.

என்ன இது... இப்படி.... போகக் என்று உயிரையே விட்டு விட்டான்... இப்போது என்ன செய்வது?

இது விபத்தா?

இல்லை கொலையா?

சேச்சே... கொலையா? என்ன வார்த்தை இது? கோபமாய்ப் பிடித்துத் தள்ளினேன். போதையில் தடுமாறி விழுந்து... சரியாய்ப் பொட்டில் அடிபட்டு மரணம் சந்தித்துவிட்டான்.

கோவை மருத்துவக் கல்லூரி ஆஸ்பத்திரிக்கு முன் உள்ள ஒரு பெட்டிக் கடையில் ''நோயாளிகளுக்கு விசேஷமாக வீட்டு முறையில் தயாரிக்கப்பட்ட கஞ்சி விற்பனைக்கு உள்ளது'' என்று போர்டு எழுதி வைத்திருக்கிறார்கள்!

— இந்திரா.



முழுக்க, முழுக்க விபத்து.

இப்போது என்ன?

100?

டயல் சுழற்றி?

''என் பார்ட்னர் துரைராஜ், கம்பெனியில் அவன் செய்த ஊழல் சம்பந்தமாகப் பேசிக்கொண்டிருந்தபோது... ஆத்திரம்தாங்காமல் பிடித்துத் தள்ளினேன்... போதையில் தடுமாறிவிழுந்து அடிபட்டுவிட்டது..போகக் என்று போய் விட்டான்.''

இந்தக் கூற்றைக் காக்கிச் சட்டை நம்புமா?

நிரூபிக்க முடியுமா என்பார்கள்.

இவன் என் பார்ட்னர் என்பதை நிரூபிக்கலாம். ஊழலை நிரூபிக்கலாம். அதற்கப்புறம் நான் தள்ளினதை எப்படி நிரூபிப்பது?

கொலைவெறியோடு செயல்பட்டிருப்பதாகக் குற்றம் சாட்டினால்?

அய்யய்யோ! இதென்ன வம்பாய்ப் போய் விட்டது!

சபாபதியின் உடல் முழுக்க ஒரு உஷ்ணம் பரவியது. மனசு பலவித பயங்கர உணர்வுகளால் கடையப்பட்டுக் கொண்டிருக்க... முத்து முத்தாய் வியர்த்தார்.

துரைராஜ் விழுந்தபோது, அவன் கையில் இருந்து நழுவிய கண்ணாடிக் கோப்பை தன் விளிம்பு உடைந்த மூக்குடன் தரையில் லேசாக அசைந்து கொண்டிருந்தது.

என்ன இது இப்படி ஆகிவிட்டது என்று சபாபதிக்குள் விஸ்வரூபமெடுத்துப் புலம்பல் நடந்து கொண்டிருக்க... லேசாய் நெஞ்சு வலிப்பது போல் உணர்ந்தார்.

ஒரு கையால் மார்பை அழுத்திக்கொண்டு தடுமாறி நடந்து தொய்வாய்ச் சோபாவில் விழுந்தார். சற்றுத் தள்ளி மேஜையருகே பிணமாய்க் கிடக்கும் தன் நண்பனைச் சந்தித்துத் தன் பார்வையைச் சடாரென்று இழுத்துத் திசை திருப்பினார்.

தத்தித் தத்திச் சுவரில் வினாடி முள் நகர... சபாபதியின் உள்ளத்தில் பயங்கரம் அதிகரித்துக் கொண்டே இருந்தது.

அழைத்து அட்வைஸ் செய்து — அவனை ஜெயிலுக்குப் போக விடாமல் காப்பாற்றலாம் என்று நினைத்தால்...


இப்போது நானே ஜெயிலுக்குப் போகும் நிலையில்...

ச்சே! என்ன எண்ணம் இது! நானா? ஜெயிலுக்கா? அடப் பாவமே... என்ன தப்பு செய்தேன். ஒரு ஆத்திரத்தின் வெளிப்பாடாய் நடந்த செயல் இது. அவன் விதி அத்தனை பலவீனம். சந்தர்ப்பம் சற்று அசந்தர்ப்பம்தான். ஆனால்...

துரைராஜ் சாக வேண்டும் என்று நோன்பிருந்தேனா என்ன?

இல்லை! இல்லைதான். ஆனால் இப்போது இங்கே நடந்து முடிந்திருக்கும் இந்த விபரீதத்தை உலகத்துக்குச் சொன்னால்... என் நோக்கத்தைப் புரிந்து கொள்ளுமா அது?

பார்ட்னர் துரோகம் செய்ததற்காக... பழிவாங்கும்திட்டத்துடன், மனைவியையும்மகளையும் வெளியூர் அனுப்பிவிட்டு... தனிமை



''ஆபீஸ்ல மானேஜர் வரும்போது நான்சீட்லேந்துஎழுந்துநின்றேன். அதுக்குப் போய் என்னை வேலையை விட்டுத் தூக்கிட்டாங்க...!''

''இதுல என்ன தப்பு இருக்கு...?''

''நான் உட்கார்ந்து இருந்தது அவரோட சீட்டாச்சே...!''

—வி. சாரதி டேச்சு.

இரவில் வரவழைத்து... செயல்படுத்தி விட்டுப் புருடா விடுகிறார் என்றுதான் சொல்வார்களோ!

எத்தனை பெரிய மடையன் நான். இவ்வளவு பெரிய ஊழல் விசாரணையைத் தனியாய்ச் செய்திருக்கக் கூடாது. சக பார்ட்னர் யாரையாவது வைத்துக் கொண்டு...

அல்லது... அந்த ராமசுப்புவை மட்டுமாவது பக்கத்தில் வைத்துக் கொண்டு விசாரித்திருக்க வேண்டும். அப்படிச் செய்திருந்தால்... நடந்த சம்பவத்திற்கு ஒரு உறுதியான சாட்சி இருக்குமே...

ஆனால்... இப்போது?

யோசிக்க... யோசிக்க... போலீசுக்குத் தகவல் தெரியப்படுத்தினாலும் — வேறு யாருக்காவது நடந்ததைத் தெரியப்படுத்தினாலும்.. அநாவசியமாகத் தான்தான் சந்தேகப்படப் படுவோம் என்று தீர்க்கமாய் உணர்ந்தார்.

சரி, வேண்டாம். செய்யாத குற்றத்திற்குத் தண்டனை அனுபவிப்பது அவஸ்தை! அநியாயம். அதனால் யாருக்கும் தெரியப்படுத்த வேண்டாம்.

ஆனால்... இந்தச் சம்பவத்தை மறைப்பதெப்படி! இந்தத் துரைராஜை அப்புறப் படுத்துவது எப்படி? வாசலில் இவன் கார் நிற்கிறது.

இவன் இங்கே இப்போது வந்திருப்பது யாருக்குத் தெரியும்?

இவன் மகனுக்குத் தெரியும். நான் இங்கே இவனை வரவழைக்க போன் செய்த போது அவன்தான் பேசினான். தவிர... தன் மனைவியிடம்சொல்லிவிட்டு வந்திருக்கலாம் அவன்.

ஆகவே, துரைராஜ் இங்கே வரவே இல்லை என்று சாதிப்பது கஷ்டம்!

வந்தான். வந்த இடத்தில் நான் காரணமில்லாமல் இப்படி இறந்து போனான் என்று நம்ப வைக்க வேண்டும். எப்படி? எப்படி? எப்படி?

சிந்தனையைக் கலைத்தது டெலிபோன்.

அமைதியைக்கிழித்தஅதன்ஒலியேவிபரீதமாக இருந்தது. பலமுறை ஒலிக்க விட்டு எடுத்தார்.

''ஹலோ, நான் சரளா பேசறேன் டாடி.''

''என்னம்மா?''

''பத்திரமா வந்து சேர்ந்துட்டோம். லேட்மியுசிக் நடந்துகிட்டிருக்கு. காலையிலே நீங்க வந்துடுவீங்கள்லே?''

சபாபதி சரிந்து கிடந்த துரைராஜைப் பார்த்தார்.

''அவசியம் வர்றேன்.''

''கார் அனுப்பி வைக்கிறேனே...''

''வேணாம்'' என்றார் அவசரமாக.

''ஓக்கே, குட் நைட் டாடி'' என்று வைத்தாள்.

நல்ல இரவா இது? தானாக வந்திருக்கிற பிரும்மாண்டவில்லங்கம்என்னைப்பாடாய்ப் படுத்தப் போகிற இரவு.

வைத்துவிட்டு.... யோசனையைத்தொடர்ந்தார் சபாபதி.

ரொம்ப நேரம் கழித்து ஒரு யோசனை உருப்படியாய்ப் பட்டது.

மணி பார்த்தார்.-பத்தரை!

''வெரிகுட் ஐடியா'' என்று வாய்விட்டுச் சொல்லிக் கொண்டார்..

நேராய் மாடிக்கு வந்து தம் படுக்கை அறையிலிருந்து கீழே இருக்கிற பெட்டகம் இருக்கிற பாதுகாப்பு அறையின் சாவிக் கொத்தை எடுத்துக் கொண்டு இறங்கி வந்தார். முதலில்.... தரையில் கிடந்த ஃபைலை டிராயரில் வைத்தார். பிறகு...

ஹாலை ஒட்டி அருகில் பூஜை அறை. அதன் அருகில் பெட்டக அறை. அதன் கதவைத் திறந்தார். உள்ளே வந்து...

இரும்புப் பெட்டகத்தை மூன்று வித சாவிகள் போட்டுத் திறந்தார்.

உள்ளே கரன்சி கட்டுக்கள் — பெட்டி, பெட்டியாய் நகைகள் — கவர் கவராய்ப் பத்திரங்கள் இருந்தன. இரண்டு கைகளிலும் கர்சீப்களைக் கையுறை மாதிரி கட்டிக் கொண்டார்.

கரன்சி கட்டுகள் எல்லாவற்றையும் ஒரு சூட்கேசில் அடுக்கினார். நகைப் பெட்டிகள் ஒவ்வொன்றாய் எடுத்து நகைகளை மட்டும் எடுத்துக் கொண்டு, பெட்டிகளை அதே அறையில் தாறுமாறாக வீசினார். பத்திரங்களைக் கலைத்துப் போட்டார்.

சூட்கேசோடு அறையை விட்டு வெளியே வந்தார்.

செருப்பணிந்து கொண்டு, வீட்டை வெளிப்பக்கமாகப் பூட்டிக் கொண்டு வெளியேறிச் சாலைக்கு வந்தார்.

அமைதியாய், இருளாய் இருந்தது சாலை.

ரொம்ப தூரம் நடந்து வந்து... ஒரு ஆட்டோவை நிறுத்தி ஏறிக் கொண்டு கீழ்ப்பாக்கில் ஒரு லாட்ஜ் வாசலில் இறங்கிக் கொண்டார்.

அரைத் தூக்கத்தில் இருந்த மானேஜரை எழுப்பி, விழுப்புரம் என்று விலாசம் எழுதி ஒரு அறை எடுத்துக் கொண்டு, அறைக்குள் கட்டில் அடியில் சூட்கேஸ் வைத்துப் பூட்டிக் கொண்டு புறப்பட்டார்.

மறுபடி ஆட்டோ.

வீட்டிற்குத் தொலைதூரம் முன்னால் இறங்கிக் கொண்டு, வேகமாய் நடந்தார்.

பங்களாவின் வாசல் கதவைத் திறக்கும் போது, உள்ளே டெலிபோன் அடித்துக் கொண்டிருப்பதை உணர்ந்தார்.

உள்ளே வந்து லேசாய் நடுங்கும் விரல்களோடு எடுத்தார்.

''ஹலோ'' என்றார்.





"ஹலோ அங்கிள், நான் ஷ்யாம் பேசறேன். டாடி இன்னும் அங்கேதான் இருக்காரா?"

துரைராஜைப் பார்த்துவிட்டுத் தயக்கமாய், "வந்து... ஷ்யாம்... கொஞ்சம் ஓவரா விஸ்கி சாப்பிட்டுட்டான். படுத்துக் கிடக்கான். அம்மாகிட்டே சொல்லாதே. இங்கேயே தூங்கட்டும்... காலையில அனுப்பி வைக்கிறேன்" என்றார்.

"ஓக்கே, அங்கிள்."

வைத்துவிட்டுப் பெருமூச்சு விட்டார்.

ரூம் சாவியை ஸ்டோர் ரூமில் அரிசிக்குள் ஒளித்து வைத்துவிட்டு வந்தார்.

ஒரு மணி நேரம் நகர்வதற்காகக் காத்திருந்தார்.

மணி 12.10 ஆனபோது...

எழுந்து வந்து வாசல் கதவை அகலமாகத் திறந்து வைத்தார்.

விஸ்கி பாட்டிலில் இருந்த பாதி அளவு விஸ்கியை ராவாக மடமடவென்று தொண்டை எரிய எரியக் குடித்தார். பெட்டக அறைக்கு வந்து அதன் கதவையும் திறந்து வைத்துவிட்டு...

பெட்டக அறைக்குள் இருந்தமரத்தடியைக் கர்சீப் போட்டு எடுத்து...

கொஞ்சம் தயங்கி...

பிறகு...

மெதுவான வேகத்தோடு... தன் முன் மண்டையில் லொட் என்று தட்டிக்கொள்ள... ரத்தம் விசுக் என்று வெளியே எட்டிப் பார்த்து ரோடு போட்டது...

கையையும், காலையும் பரப்பிக் கொண்டு அப்படியே விழுந்தார் கீழே.

கொஞ்சம் போதை — கொஞ்சம் வலி — கொஞ்சம் உணர்வு என்று கலவையாக இருக்க...

காலையில் யாராவது வந்து பார்க்கும் வரை... அப்படியே பிடிவாதமாகக் கிடக்கத் தீர்மானித்தார். கிடந்தார்.

4

மறுநாள்... ஆறு மணி ஆரம்பக் காலையில்...

ஜீப்பிலிருந்து குதித்தார் ஏரியா இன்ஸ்பெக்டர் அரவிந்த். கொஞ்சம் தூக்கக் கலக்கம் முகத்தில் எஞ்சியிருந்தது. மீசையில் சில முடிகள் செம்பட்டை தட்டியிருந்தது.

சபாபதியின் வீட்டின் வாசலில் இருந்த சின்னக் கூட்டத்தை நெருங்கினார்.

"மொதல்ல... கூட்டம் மட்டும் போடாதீங்க. யார் இங்கே மணி?" என்றார்.

"நான்தான் சார்."

''நான்தான் சார்'' என்றபடி கைவைத்த பனியனும், கைலியில் டூத் பேஸ்ட் கறையுமாய் முன்னுக்கு வந்தார்.

''நான் பக்கத்து வீட்டுக்காரன் சார். காலையிலே பால்காரன் என்கிட்டே பதறி அடிச்சிக்கிட்டு ஓடி வந்தான். வீடு திறந்து கிடக்குது... உள்ளே ரூமெல்லாம் திறந்து கிடக்குது... சபாபதி ஐயாவும், இன்னொருத்தரும் கீழே பிரக்ஞை இல்லாம விழுந்து கிடக்காங்கன்னான். நான் உடனே உங்களுக்கு போன் செஞ்சிட்டு வந்து எதையும் கலைக்காமப் பார்த்தேன். இன்ஸ்பெக்டர், உள்ளே மிஸ்டர் துரைராஜ்னு சபாபதி சாரோட ஃபிரண்டும், சபாபதி சாரும் விநோதமா மயக்கத்தில கிடக்காங்க. ராத்திரி விபரீதமா என்னவோ நடந்திருக்கு.''

''நான் பார்த்துக்கறேன். வேற யாரும் உள்ளே வர வேணாம்.''

அரவிந்த் உள்ளே நுழைந்தார்.

அரசாங்க மருத்துவமனை.

வார்ட் ஒன்றில் மண்டையில் கட்டுடன் சபாபதி.

அருகே ஸ்டூலில் இன்ஸ்பெக்டர்.

''மிஸ்டர் சபாபதி, பார்த்த காட்சியிலேர்ந்து ஓரளவு எங்களால யூகம் செய்ய முடியுது. என்ன நடந்திச்சுன்னு உங்ககிட்டேர்ந்து தெரிஞ்சுக்கறதுக்காகக் காத்திருக்கேன். இப்போ சுத்தமா மயக்கம் இல்லையே?''

''இல்லை சார்.''

''சொல்லுங்க.''

''சார், நேத்து ராத்திரி என் மனைவியும், மகளும் செங்கல்பட்டுக்குப் போனாங்க. ஒரு நிச்சயதார்த்தத்துக்கு. நான் மட்டும் வீட்ல தனியா இருந்தேன். துரைராஜ் கூட கம்பெனி விஷயமா பேச வேண்டியிருந்திச்சி. அதனால அவன் வீட்டுக்கு போன் செஞ்சி வரவழைச்சேன்.''

''இருங்க. துரைராஜ் யாரு?''

''என் பிஸினஸ் பார்ட்னர். என் ஃபிரண்ட்.''

''என்ன விஷயமா வரச் சொன்னீங்க?''

தயங்கினார் சபாபதி.

''சும்மா சொல்லுங்க.''

''கம்பெனில சில தவறுகள் நடந்திருந்திச்சி. அது பத்தி பேசக் கூப்பிட்டேன்.''

''என்ன தவறுகள்?''

''வந்து... கம்பெனியோட அந்தரங்கமான விஷயம்!''

''ஸாரி மிஸ்டர் சபாபதி, போலீசுக்கு எந்த விஷயமுமே அந்தரங்கம் இல்லை. எல்லா விஷயங்களும் தெரியணும் எங்களுக்கு. சொல்லுங்க, என்ன தவறுகள்?''

''ஒரு ஊழல்.''

''யார் செஞ்சது?''

''துரைராஜ்.''

''எவ்வளவுக்கு?''

''கிட்டத்தட்ட மூன்றரை லட்சம்!''

''சரி! அது சம்பந்தமா நீங்க போலீசுக்கு ஏன் தகவல் தரலை?''

''அது நான் தனியா எடுக்கக் கூடிய முடிவு இல்லை. எட்டு டைரக்டர்ஸ் மீட்டிங்ல பேசித் தீர்மானிக்க வேண்டிய விஷயம்.''

''பின்னே நீங்க ஏன் தனியாக் கூப்பிட்டு விசாரிச்சீங்க?''

''துரைராஜ் என் நண்பன்ங்கிற முறையிலே அவனைக் கண்டிச்சு... சிக்கல்லேர்ந்து காப்பாத்த நினைச்சேன்...''

''சரி, வரவழைச்சீங்க், மேல சொல்லுங்க.''

''வந்தான். கேட்டேன். ஆடிப் போய்ட்டான். கொஞ்சம் பயந்தும் போய்ட்டான். ஏதோ அல்பத்தனமா செஞ்சுட்டேன், இப்போ பிரச்னையை எப்படித் தீர்க்கறதுன்னு தவிச்சான். ஊழல் பணத்தைத் திரும்ப கம்பெனிக்கே சேர்த்துட்டா... நான் மத்த டைரக்டர்ஸுக்கு விஷயம் போகாம சிக்கலைத் தீர்த்துத் தர்றேன்னு சொன்னேன். சரின்னான். அப்புறம்... வீட்ல யாரும் இல்லாததால... நாங்க ரெண்டு பேரும் விஸ்கி சாப்பிட்டோம். பல விஷயங்கள் பேசிக்கிட்டிருந்தோம். அப்போ திடீர்னு வாசல் அழைப்பு மணி அடிச்சது.''

''எத்தனை மணி இருக்கும் அப்போ?''

''பன்னெண்டுக்கு மேல இருக்கும்.''

''ம், சொல்லுங்க.''

''இந்த நேரத்திலே யாருன்னு குழப்பமா நான் போய்க் கதவைத் திறந்தேன். திமுதிமுன்னு மூணு பேரு உள்ளே நுழைஞ்சி உடனே கதவைச் சாத்தித் தாழ் போட்டாங்க. மூணு பேரும் கண்ணுக்குக் கீழே கறுப்புத் துணி கட்டி முகத்தை மறைச்சிருந்தாங்க. ஒருத்தன் கையில் துப்பாக்கி.''

''ஓ! முக்மூடிக் கொள்ளையா?''



ஒருத்தி: ''ஒரு பத்திரிகை ஆசிரியரைக் காதலிச்சது தப்பாப் போச்சு!''

தோழி: ''ஏன்?''

ஒருத்தி: ''காதல் கடிதங்களுக்குக்கூட தபால் தலை வைத்து அனுப்பினால்தான் பதில் எழுதுகிறார்!''

— பூவை கே. சந்திரன்.

ஒருவர்: அதோ போருரே அவர் எத்தனேடிக்கெட்கேட்டாலும் இல்லேன்னே சொல்ல மாட்டார்....!

மற்றவர்: அப்படியா....! அவர் எந்தத் தியேட்டரில் வேலே பாக்கிருர்?''

ஒருவர்: அவர் வேலே பார்க்கிறது தியேட்டர்ல இல்லே, பஸ் கண்டக்டரா!

— ஜி. டி. ராஜா.



''அதேதான் இன்ஸ்பெக்டர். நாங்க ரெண்டு பேரும் வெலவெலத்துப் போய்ட்டோம். ரெண்டு பேரையும் கையைத் தூக்கச் சொன்னுன். கட்டுப்பட்டோம். துப்பாக்கி வச்சிருந்தவன் என்கிட்டே இரும்புப் பெட்டி எங்கே இருக்குன்னு கேட்டான். நான் சொல்லலே. துப்பாக்கி காட்டி அழுத்தமா மிரட்டினதும் சொன்னேன். மாடிக்கு என்னே அழைச்சுப் போய்ச் சாவி எடுத்து வர வச்சி... என்னேயே திறக்க வச்சி... பெட்டகத்தையும் துப்பாக்கி முனேயிலே என்னேயே திறக்க வச்சாங்க. பணம், நகை, எல்லாம் எடுத்து அவங்க கொண்டாந்த லெதர் பாகில போட்டுக்கிட்டாங்க. நானும், துரைராஜூம் பதறி நின்னேம். திடீர்னு துப்பாக்கி வச்சிருந்தவன் மேல துரைராஜ் பாய்ஞ்சான். அவன் சாமர்த்தியமா விலக்கி... பதிலுக்கு துரைராஜைப் பிடிச்சித் தள்ளினுன். மேஜையோட விளிம்புல மோதி ஆன்னு கத்திக்கிட்டே கீழே சரிஞ்சான் துரை.. மூணு பேர்ல ஒருத்தன் அவன் மூக்குக்கிட்டே கைவச்சி பார்த்து 'மூச்சு நின்னுடுச்சிடா'ன்னுன். எனக்குத் திகில் அதிகமாகி, நரம்பெல்லாம் படபடன்னு ஆகி... கண்மூடித்தனமா ஒருத்தன் மேல பாய்ஞ்சப்போ... என் பெட்டக ரூமில பாது காப்புக்காக நாங்க வைச்சிருக்கிற கைத்தடியை எடுத்து என்னே அடிச்சான். நான் மயக்கம் போட்டு விழுந்துட்டேன்.''

அரவிந்த் அமைதியாகப் பார்த்துக்கொண்டிருந்தார்.

''அந்த மூணு பேரும் தமிழ்தான் பேசினுங்களா?''

''ஆமாம்.''

''அவங்களே அடையாளம் காட்ட முடியுமா மறுபடி பார்த்தா.''

''முகத்தைத் தான் மறைச்சிருந்தாங்களே...''

''மூணு பேரும் கையிலே உறைமாட்டியிருந்தாங்களா?''

''ஆமாம்.''

''அவங்க வந்தப்போ நீங்க போதையிலே இருந்தீங்க!''

''ஆமாம்.''

''தெளிவா நினேச்சுப் பார்த்துச் சொல்லுங்க... மூணு பேர்தானு?''

''மூணு பேர்தான்...''

அரவிந்த் யோசித்தார்.

''கணக்கு தப்பா இருக்கே...''

''என்ன சொல்றீங்க...?''

''துரைராஜ் நாலு பேர் வந்ததா சொல்ருரே...''

''யாரு?''

''துரைராஜ்தான். பக்கத்து ரூம்ல படுக்க வச்சிருக்கோம்.''

''அவன்...?''

''சாகலேயே... மயக்கம்தான். அவனுங்க அவசரத்திலே செத்துட்டதா நினேச்சுப் போய்ட்டாங்கபோலிருக்கு. இப்ப துரைராஜ் கிட்டே எல்லாம் கேட்டுட்டு அப்புறம்தான் உங்ககிட்டே வர்றேன். அவர் நாலு பேர்னு சொன்னுர். அந்த ஒரு இடம்தான் இடிக்குது.''

சபாபதிக்கு எல்லா இடமுமே இடித்தது.

துரைராஜ் சாகவில்லையா? வெறும் மயக்கத்தையா நான் மரணம் என்று நம்பிக் கொண்டு இத்தனே காரியம் செய்தேன்?

சரி, இவன் எப்படி அதேபோல் கற்பனேயாய்க் கதை அளக்க முடியும்? இது என் சொந்தக் கதைத் தயாரிப்பு அல்லவா?

என்ன இது குழப்பம்?

(இந்தக் கட்டத்தில்: ஒரு நிமிடம் வாசகரே!

பொதுவாய் எந்தக் கதைக்கும் கிளேமாக்ஸ் ஒரு அச்சாணி மாதிரி. சிலருக்கு அதில் நீதி, தர்மம் தேவை. சிலருக்கு அவை கவலே இல்லே — புதுமையாய் இருந்தால் சரி. இரண்டு தரப்பினரையும் திருப்திப் படுத்துதல் இயலாதது.

இங்கே...

நம் சபாபதி ஜெயிலுக்குப் போக வேண்டுமா, வேண்டாமா என்று பார்த்தால் இரண்டுக்கும் வாசகர்கள் உண்டு. ஆகவே...

இரண்டு விதமான கிளேமாக்ஸ்கள் இங்கே.

எது என்று உங்கள் தீர்ப்புக்கே விட்டு விடுகிறேன்.

—உங்கள் பிரபாகர்.)

கிளேமாக்ஸ் 1 —

அரவிந்த் சபாபதியைப் பார்த்துப் புன்னகை செய்தார்.

''என்ன சார், முழிக்கிறீங்க? துரைராஜ் எல்லாம் சொல்லிவிட்டார். உங்களுக்கும், அவருக்கும் வாக்கு வாதம் ஏற்பட்டு, நீங்க அவரைத் தள்ளினதிலேதான் காயம் ஏற்பட்டது. முகமூடியும் வரலே. கொள்ளேயும்

நடக்கலே. எல்லாம் நீங்க செஞ்ச செட்டப். துரைராஜ் இறந்துட்டதா நினைச்சு செஞ்ச செட்டப்! சரியா?''

சபாபதிக்கு மின்விசிறியை மீறி வியர்த்தது.

''சொல்லுங்க... இனிமே சொல்றதாலே பாதகமில்லே. துரைராஜ்தான் உயிரோட இருக்காரே...''

சபாபதி தெளிவு பெற்று...

''யெஸ், இன்ஸ்பெக்டர், எல்லாம் என் செட்டப்தான். துரைராஜ் இறந்துட்டதா நினைச்சு, என்னைப் பாதுகாத்துக்கிறதுக்காகச் செஞ்ச ஏற்பாடுதான் எல்லாம்.''

''அப்போதுரைராஜ்மேஜையிலேமோதிக்கிட்டது?''

''என்னாலதான். ஆத்திரத்துல நான் பிடிச்சித் தள்ளினப்போ ஏற்பட்டதுதான்.''

''நன்றி'' என்று கட்டிலுக்கு அடியில் இருந்து இயங்கிக் கொண்டிருந்த டேப் ரிக்கார்டரை வெளியில் எடுத்து அணைத்தார் அரவிந்த்.

புரியாமல் பார்த்தார் சபாபதி.

''புரியலே? உங்க வாய்லேர்ந்து ஸ்டேட்மெண்ட் வாங்கறதுக்காக நான் செஞ்ச ஐடியா இது. துரைராஜ் இப்போ போஸ்ட் மார்ட்டம் செய்யப்பட்டு மார்ச்சுவரில ஐஸ் கட்டிக்கு நடுவில நிரந்தரமா தூங்கறார். மானேஜர் ராமசுப்புதான் எனக்குத் தகவல் எல்லாம் தந்து உங்க மேல சந்தேகமா இருக்குன்னு சொன்னது. ஓக்கே மிஸ்டர் சபாபதி, நல்லா ரெஸ்ட் எடுத்துக்கங்க. நான் அரெஸ்ட் வாரண்ட்டோட வர்றேன்.''

அரவிந்த் வெளியேறினார்.

— முதல் முற்றும் —

எதிர்பார்ப்பு

இனியவளே!
உன்னிடம் நான்
அழகை எதிர்பார்க்கவில்லை.
காரணம்
நான் அழகில்லை என்பதால்!
உன்னிடம் நான்
அறிவையும் எதிர்பார்க்கவில்லை
காரணம்
நான் அறிவாளி அல்ல
என்பதால்!
நான் உன்னிடம் எதிர்பார்ப்பதெல்லாம்
நற்குணங்களே.
காரணம்,
என்னிடம் நற்குணங்கள் இருப்பதால் அல்ல!
உன்னிடம் பழகியாவது —
நான் நற்குணங்களைப் பெறலாமே
என்ற ஆர்வத்தில்!

— கோவி. ராஜேந்திரன்.

கிளைமாக்ஸ் 2 —

அரவிந்த் புன்னகை புரிந்தார்.

''நீங்க ரெண்டு பேரும் போதையிலே இருந்திருக்கீங்க. அதனால வந்தது மூணு பேரா, நாலு பேரான்னு உங்களுக்குள்ளேயே குழப்பம். நான் மறுபடி அப்புறம் வந்து விசாரிக்கிறேன். ரெஸ்ட் எடுத்துக்கங்க.''

அரவிந்த் வெளியேறின... கொஞ்ச நேரம் கழித்து... தலையில் ஒரு பெரிய பேண்டேஜோடு உள்ளே புன்சிரிப்புடன் வந்தான் துரைராஜ்.

''என்ன சபா, ஆச்சரியமா இருக்கா? அத்தனை சீக்கிரம் செத்துடுவேனா? எல்லாம் தெரியும் எனக்கு. மயக்கம் தெளிஞ்சு நீ செஞ்ச ஒவ்வொரு காரியத்தையும் நான் பார்த்துக்கிட்டுத்தான் இருந்தேன். பெட்டக அறையைத் திறந்தே. பெட்டியை விசிறி, விசிறி நகைகளை எடுத்து, பணம் எடுத்து... வெளில போனே... திரும்பினே... குடிச்சே. உன் மண்டையிலே நீயே அடிச்சிக்கிட்டுக் கீழே விழுந்தே. வாத்யார் ஒருதிருட்டுசெட்டப் பண்றார்னு நானும் பேசாம அப்படியே கிடந்தேன். பாவம் நான் செத்துட்டதா நினைச்சு எவ்வளவு சிரமப்பட்டிருக்கே.. இன்ஸ்பெக்டர்கிட்டே நானும் திருட்டுக் கூட்டம் வந்ததா ரீல் சுத்திட்டேன். நாலு பேர்னு சொன்னேன். நீ எத்தனை பேர்னு சொன்னே?''

''மூணு!''

''அது அட்ஜஸ்ட் பண்ணிக்கலாம், விடு. அவங்க தீவிர புலன் விசாரணை செஞ்சிக்கிட்டே இருக்கட்டும். நம்ம விஷயத்துக்கு வருவோம். ராமசுப்புவை நான் விலைக்கு வாங்கிடறேன். நீ கப்சிப்னு இரு. என்ன சொல்றே? நமக்குள்ளே விஷயம் அந்தரங்கமா இருக்கட்டும். என்ன?''

''நோ! அது மட்டும் முடியாதுடா ராஸ்கல்!''

சபாபதியின் ஆத்திரம் அதிகமாக... அருகே இருந்த டானிக் பாட்டிலைப் பார்த்தார்.

''சபா, என்னைப் பகைச்சுக்கிட்டே... அப்புறம் உன்னை நிம்மதியா வாழ விடமாட்டேன். உன் மகளைக் கடத்திக்கிட்டுப் போயி...''


அவன் பேசி முடிப்பதற்குள்...

டானிக் பாட்டில் பறந்து வந்து பாண்டேஜ் போடாத இடது நெற்றியில் ஆழமாய்ச் சிதற...

இந்த முறை நிஜமாய்ச் செத்துப் போனான் துரைராஜ்.

துரைராஜின் நெற்றியில் துவங்கின ரத்த வரி கோணலாகப் பாதை அமைத்துக் கொண்டு சரிந்து, மூக்கின் நுனியிலிருந்து சொட், சொட் என்று சட்டை முழுக்க நனைத்துக் கொண்டிருந்தது.

— இரண்டாவது முற்றும் —



''அது என் மம்மியும் நானும். மம்மி அழகா இல்லை...
ஓ...அந்த ஸிந்தால் வாசனை...ம்...''



''இது என் டாடி. நாங்க பிக்னிக்
போனப்போ எடுத்தது...ஆ...
அதே வாசனை.''



''என் கணவரும் நானும்.டென்னிஸ்ஸா இல்லை
ஸிந்தால் நறுமணமா எங்களை ஒன்று சேர்த்தது?''

ஸிந்தால் நறுமணம். உங்களை
இணைக்கும் இனிய வாசனை.
குடும்பத்தோடு அந்த வாசனையில்
திளைத்து மகிழுங்கள். உங்கள்
பொன்னான நினைவுகள் என்றும்
புத்தம்புது மலராய் மணம் வீசட்டும்.



Godrej
தயாரிப்பு

400 & 100 கிராம்
அளவுகளில் கிடைக்கிறது.

உணர்வுகள்

முன் கதை சுருக்கம்

எழுத்தாளரும் பிரபல வாரப் பத்திரிகையின் துணை ஆசிரியருமான சந்திரசூடன் ஒரு வளவில் குடியிருந்தார். வளவின் சொந்தக்காரி பார்வதி விதவை. ஒரு பெண் குழந்தைக்குத் தாய். சந்திரசூடனின் எழுத்துக்களின் அபிமானி; அவற்றை நகல் எடுத்தும் அவர் அறையைச் சுத்தம் செய்தும் உதவி வந்தாள்.

எதிர்ப்புறத்தில் குடியிருந்த ராதா அறிவும் அழகும் நிறைந்த பெண். குடிகாரக் கணவனுக்கு வாழ்க்கைப்பட்டு அவள் படும் பாட்டைச் சந்திரசூடன் வருத்தத்தோடு கவனித்து வந்தார்.

ராதா வீட்டில் தன் பாட்டியுடன் தங்கி பி. ஏ. படித்து வரும் பரணி விவேகானந்தர் பக்தன், காந்தியவாதி. சந்திரசூடன் தன் டைரிகளைப் படிக்கும் உரிமையை அவனுக்கு வழங்கியிருந்தார். அவன் கொள்கைகளைப் பற்றி அவனையே சிந்திக்கச் செய்தார்.

நடிகை இந்திராணியிடம் பத்திரிகையாளர் என்ற முறையில் அறிமுகமாகி, நெருங்கிப் பழகும் வாய்ப்பைப் பெற்றவர் சந்திரசூடன். அவளுடைய கவர்ச்சியில் மயங்காத ஒரே நபரும் கூட. இந்திராணியின் தற்கொலை செய்தி அவரை உலுக்கி விடுகிறது. அவள் வளர்ச்சிக்குக் காரணமாக இருந்த சம்பத் என்பவர், அவள் வாழ்க்கை வரலாறை எழுதும்படி சந்திரசூடனிடம் கேட்கிறார். முதலில் மறுக்கும் சந்திரசூடன் சிறிது யோசனைக்குப் பிறகு அப்பணியை மேற்கொள்கிறார்.

அம்மன் கோவிலுக்குப் போகும் சந்திரசூடன் மாலை பூஜை நடக்க வேண்டிய வேளையில் கோவில் இருளில் மூழ்கியிருக்கக் காண்கிறார். பூசாரி சக்திவேல் மூல விக்கிரகத்தின் காலை அணைத்தவாறு படுத்துக் கிடக்கக் கண்டு அவரை எழுப்புகிறார். தேவியின் பால் 'காதல்' கொண்ட அந்த உபாசகரை ஏனையவர்கள் பைத்தியக்காரன் என்று எண்ணினாலும் சந்திரசூடன் அவர் உணர்வுகளை மதித்துப் போற்றி வந்தார். சந்திரசூடனின் ரசிகனான முத்துராமன் என்ற இளைஞன், பெருங்குற்றம் செய்துவிட்டுக் கைதானவன். நன்னடத்தை ஜாமீனில் வெளியே வர சந்திரசூடனின் உதவியை நாடினான். அவனுக்கு மனமிரங்கினார் சந்திரசூடன்.

சந்திரசூடன் எழுதி வைத்துவிட்டுப் போன இந்திராணியின் வரலாற்றுக்கு முன்னுரையை நகல் எடுக்கும் பார்வதி இந்திராணியின் கவர்ச்சியைப் பற்றிச் சந்திரசூடன் எழுதியதைக் கண்டு தன்னிடம் இல்லாத எந்தக் கவர்ச்சி அவளிடம் உள்ளது என்ற வினா மனத்தில் எழ உள்ளறை கண்ணாடி எதிரில் தன்னை அழகு பார்த்துக் கொள்கிறாள். ஜன்னல் அருகே நிழலாடக் கண்டு சட்டென்று ஆடையைத் திருத்திக் கொண்டு ஜன்னலை மூடுகிறாள்.

சம்பத்தின் ஏற்பாட்டில் நடந்துவரும் இந்திராணியின் புகைப்படக் கண்காட்சியைக் காணப் பரணியை அழைக்கிறார் சந்திரசூடன். பரணி அவருடன் செல்ல மறுக்கையிலேயே முதல் நாள் இரவு பார்வதி கண்ணாடிக்கு முன்னால் நின்று அழகு பார்த்துக் கொண்டிருந்த காட்சியைப் பார்த்துவிட்ட நினைவு தோன்றி அவனைக் குற்ற உணர்வில் ஆழ்த்துகிறது.

இப்படி பலரக கதாபாத்திரங்களுடன் தொடர்கிறது கதை.

ர.சு.நல்லபெருமாள்



உறங்குவதில்லை

15. இனப் பகை

மறுநாள் காலையில் இந்திராணியின் படக்கண் காட்சியைப் பற்றிய விமர்சனத்தை எழுதி முடித்தார் சந்திரசூடன். வெற்றிலையை மென்றவாறு சோபாவில் சாய்ந்து கிடந்தார். இந்திராணியைப் பற்றிய நினைவுகள் குமைந்து கொண்டிருந்தன.

இந்திராணியிடம் டைரி எழுதும் பழக்கம் இருந்தது என்பது அவருக்குத் தெரியும். அவளுடைய டைரி கிடைத்தால் அவளுடைய வர லாற்றை எழுத உதவியாக இருக்கும் கடைசிக் காலத்தின் டைரிதான் முக்கியமாக வேண்டும். அவளுடைய மரணத்திற்கு மூல



காரணம் அதில் தெரிய வரலாம். இந்திராணியின் தாயாரிடம் கேட்டுப் பார்க்க வேண்டும்.

மாடிப் படியில் காலடி ஓசை கேட்டது. பரணியாக இருக்கும் என்று எண்ணியவராய் கண்களை மூடிக் கிடந்தார். படியேறி வந்த நபர் அறையினுள் வராமல் வாசலில் நின்றதை உணர்ந்ததும் திரும்பிப் பார்த்தார்.

கைதி முத்துராமன் நின்று கொண்டிருந்தான். சந்திரசூடன் திகைப்படைந்து எழுந்தார். "ஓ! நீயா? எப்படி வந்தாய்? விடுதலை கிடைத்து விட்டதா?" என்று கேட்டவாறே அவனை நெருங்கினார்.

"உங்கள் சிபார்சுதான் சார். உங்களுக்காகத்தான் நன்னடத்தை அதிகாரி என்னை வெளியில்விட சிபார்சு செய்தார்," என்றான் முத்துராமன்.

"வா, உள்ளே வா," என்று அழைத்து ஒரு நாற்காலியைக் காட்டினார்.

முத்துராமன் பவ்யத்துடன் வந்து நாற்காலியில் அமர்ந்தான்.

"நீ திருந்திவிடுவாய் என்னும் நம்பிக்கையில்தான் சிபார்சு செய்தேன். நன்னடத்தை அதிகாரிக்கு உன் மீது நம்பிக்கை இல்லை," என்றார் சந்திரசூடன்.

"அவருக்கு யார் மீதும் நம்பிக்கை கிடையாது. எப்போதும் குற்றவாளிகளுடனேயே பழகும் அரசாங்க அதிகாரி."

"அதனால்தான் அவருக்கு உன் மீது நம்பிக்கை ஏற்படவில்லை. நீ கடைசியாகச் செய்த குற்றத்திற்கு என்ன காரணம்?"

கேள்வியைப் புரிந்து கொள்ளாமல் அவரை உற்றுப் பார்த்தான் முத்துராமன்.

"ஒரு பெண்ணைப் பலாத்காரப்படுத்த வேண்டிய அவசியம் என்ன?"

"காமவெறியிலா இந்தக் குற்றத்தைச் செய்தேன்?"

"பின்னே?" வியப்புடன் கேட்டார் சந்திரசூடன்.

"கோபம். அவளைப் பழி வாங்க வேண்டும் என்று நினைத்தேன்."

"என்ன கோபம்?"

"ஒரு வேலைக்காக மனுப் போட்டிருந்தேன். அந்தவேலையை அவளுக்குக்கொடுத்து விட்டார்கள்."

"கொடுத்தால் என்ன? வேலை பார்க்க அவளுக்கு உரிமை இல்லையா? நீ அப்படி நடந்து கொண்டது நியாயமில்லை."

"சட்டப்படி நியாயமில்லைதான். ஆனால் பெண் இனத்தின் மீது ஏற்பட்ட கோபத்தில் அப்படிச் செய்துவிட்டேன்," என்றான் முத்துராமன்.

"இன்றைய நிலையில் பெண் ஆணுக்குச் சமமாயிருக்கிறாளே."

"எங்கே சார் இருக்கிறாள்? இருப்பதாகப் பிரமை. வெறும் போலித்தனந்தான். என்னதான் பெண் போட்டிக்கு வந்தாலும், இயல்பாகவே அவளுக்குள்ள பலவீனங்களும், குறைபாடுகளும் போகப் போவதில்லை." என்றான் முத்துராமன் திடமாக.

பிறகு சொன்னான்: "பெண்கள் தங்கள் இயல்புக்கு மாறாக இன்று திரியத் தொடங்கி விட்டார்கள் அல்லவா? அதன் பலனை அனுபவிக்க வேண்டியதுதானே?" அவனுடைய குரலில் வெறுப்புச் சிதறியது.

சந்திரசூடன் அவனைத் திகைப்புடன் பார்த்துக் கொண்டிருந்தார்.

ஓ! பெண் இனத்தின் மீது இவனுக்கு எவ்வளவு பகை! ஆண் என்னும் திமிர், இவனுடைய உடல் முழுதும் மண்டிக் கிடக்கிறதே! அவனிடம் மண்டிக் கிடந்த ஆண் எனும் ஆணவம் அவரைத் திகைக்க வைத்தது.

அவனை உற்றுப் பார்த்தார். அவனுடைய கண்களுக்குள்ளே ஆதிகாலக் குகை மனிதனின் கொச்சையான மிருகவெறி தாண்டவமாடியது. அவனுடைய முப்பாட்டன், பாட்டன், தந்தை எல்லோருமே உள்ளிருந்து உற்றுப் பார்ப்பது போலிருந்தது.

சந்திரசூடனுக்குத் திடீரென்று ஆயாசம் தோன்றியது—இவனுடைய முன்னோர்களின் ஜீன்கள் இவனுடைய இரத்தத்தில் ஆட்சி புரிவதைத் தடுத்து நிறுத்த முடியாதோ என்னும் பயம் தோன்றியது. ஒரு கொடிய மிருகத்தைக் கூண்டிலிருந்து திறந்து விட்டு விட்டோமோ என்ற பயம் உள்ளூற எழுந்தது.

"இப்படி ஏன் நடந்து கொண்டாய்? பெண்கள் முன்னேறக் கூடாது என்கிறாயா? அவர்களுக்கும் உரிமை இருக்கிறது. அவர்கள் எங்கேயும் வேலை பார்க்கலாம்," என்றார்.

"பத்துப் பெண்களுக்கு வேலை கொடுப்பதை விட ஒரு ஆணுக்கு வேலை கொடுப்பது தான் சார் முக்கியம். ஒவ்வொரு ஆணை நம்பித்தான் ஒவ்வொரு குடும்பமும் இருக்கிறது."

"இது உன்னுடைய கருத்து. உன்னுடைய கருத்துக்கு ஒரு விஷயம் ஒத்து வரவில்லையென்றால் அதற்காகப் பழிவாங்கும் குற்றத்தைச் செய்வதா? சட்டம் என்று ஒன்று இருக்கிறதே."

"அதனால்தான் நான் சிறையில் இருக்க நேரிட்டது," என்று கூறிச் சிரித்தான், முத்துராமன். பிறகு, "இனிமேல் நான் யார் வழிக்கும் போக மாட்டேன். யாரும் எப்படியும் போகட்டும். எனக்கென்ன? எனக்கு ஒரு வேலை வாங்கிக் கொடுக்க முடியுமா, சார்?" என்று கேட்டான்.

"முயற்சி செய்கிறேன். எனக்கு உன் மீது நம்பிக்கை இருக்கிறது," என்றார் சந்திரசூடன்.

"ரொம்ப நன்றி சார்."

"இரண்டு நாள் கழித்து வா. வேலை விஷயமாகத் தகவல் சொல்கிறேன். என்னை அடிக்கடி வந்து பார்த்துக் கொண்டிரு."

இதைக் கேட்டு முத்துராமன் சிரித்தான். அவனுடைய சிரிப்பின் அர்த்தம் புரியாமல் சந்திரசூடன் அவனை வெறிக்கப் பார்த்தார்.

"ஜாமீனில் விடுபட்டிருக்கும் குற்றவாளி, தினமும் போலீஸ் நிலையத்தில் போய்க் கையெழுத்துப் போடுவது போல் நான் உங்களிடம் ஆஜர் ஆக வேண்டும் என்கிறீர்கள்?" என்று கூறிச் சிரித்தான்.

சந்திரசூடன் திடுக்கிட்டார். அவனுடைய கூர்மையான அறிவை எண்ணி வியந்தார். சிரித்துக் கொண்டே, "சேச்சே, அந்த மாதிரி எண்ணத்தில் இல்லையப்பா. உன் தொடர்பு எனக்கு விட்டுப் போகாமலிருக்க வேண்டும் என்பதற்காகச் சொன்னேன்," என்றார்.

அப்போது பரணி உள்ளே வந்தான்.

பரணியை முத்துராமனுக்கு அறிமுகப்படுத்தினார். பிறகு, முத்துராமனைப் பரணிக்கு அறிமுகப்படுத்த முனைந்த போது ஒரு விநாடி தயங்கினார். முத்துராமனின் கண்களில் மிரட்சி தோன்றியது. என்ன சொல்லப் போகிறாரோ என்பது பற்றிய பயம் அவன் முகத்தில் நிழலாடியது.

"இவன் என்னுடைய ரசிகன். பெயர் முத்துராமன்," என்று அறிமுகப்படுத்தினார். முத்துராமனின் இதழ்களில் புன்னகை தோன்றியது.

"முத்துராமனுக்கு இலக்கியத்தில் ஆழ்ந்த ஈடுபாடு. புதுக் கவிதை எழுதுவான்," என்று கூறி மெல்ல நகைத்தார் சந்திரசூடன்.

"புதுக் கவிதையா? நீங்கள் புதுக் கவிதை என்று சொல்வதில்லையே. விசிறி மடிப்பு வசனம் என்றல்லவா கூறுவீர்கள்," என்று சிரித்தான் பரணி.

"புதுக் கவிதையும் கவிதைதான். உள்ளத்தின் பிரதிபலிப்பு. சும்மா மடித்து எழுதினால் போதுமா?" என்றான் முத்துராமன், சற்றுக் கோபத்துடன்.



வாய்ப்பு

ஆளுங்கட்சிப்
பேரணிக்கு
மாவட்ட
வேலை வாய்ப்பு
அலுவலகத்தின் முன்
ஆளெடுக்கிறார்களாம்!
பட்டதாரிகளே!
முந்துங்கள்!
விண்ணப்பமும் தேவையில்லை!
வாழ்க, ஒழிக
குரல் கொடுக்கும்
தகுதியே போதும்!
கூலி உண்டு!

—ஓ. ஜெயராம்.

''ஏண்டா அவளுடைய லெட்டரைப் படிச்சதும் கண்கலங்கறே? உன்னைக்காத லிக்க மாட்டேன்னு எழுதிட்டாளா?''

''இல்லேடா, காதலிப்பது வீண் வேலை. உடனே நம் கல்யாணத்திற்கு ஏற்பாடு செய்யவும் என்று எழுதியிருக் காடா!''



நான் கூடக் கல்லூரி மலரில் புதுக் கவிதை எழுதியிருக்கிறேன். பரிசு கூடக் கிடைத்தது." என்றான் பரணி கவிதைத் தாளை நீட்டியபடியே.

பரணியின் கவிதையை முத்துராமன் வாங்கிப் படித்தான்:

''சாராயக்காரனும்
ஆராய்ச்சியாளனும்
தேர்தலில் நின்றால்
வெற்றி
சாராயக்காரனுக்கு!
சிந்தையில் சூன்னியம்
சுற்றியே சாக்கடை
கிருமிகளின் கூட்டம்
வெட்கமில்லை
புண்ணிய பூமியில்
யாருக்கும்
வெட்கமில்லை.''

முத்துராமன் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டான். ஆனால் பரணியிடம் விடை பெறாமல் முகத்தைத் திருப்பிக் கொண்டு படியிறங்கிச் சென்றுவிட்டான்.

சந்திரசூடன் பரணியிடம் திரும்பி, ''அவனிடமே புதுக் கவிதையைப் பற்றி விமர்சிக்கலாமா?'' என்று கடிந்தார்.

''நீங்கள்தானே இதை அடிக்கடி விசிறி மடிப்பு வசனம் என்று கூறுவீர்கள்?''

''அதை இவனிடமே நான் கூறவில்லையே. மேலும் அது என் சொந்தக் கருத்து. அதுவும் தவிர, எல்லாப் புதுக் கவிதைகளையும் ஒட்டு மொத்தமாக நான் விசிறி மடிப்பு வசனங்கள் என்று குறிப்பிடவில்லை. அப்படி சிலர் எழுதுகிறார்கள். எழுதி புதுக் கவிதைக்கு மாசு கற்பிக்கிறார்கள் என்று சொல்லியிருப்பேன். ஏதோ தன்னைக் கவிஞனாக எண்ணிக் கொண்டிருக்கிறான். அவன் மகிழ்ச்சியைக் கெடுப்பானேன்?''

''இவர் யார் சார்? என்ன செய்கிறார்?''

''சொன்னேனே என் ரசிகன் என்று. வேலைக்குச் சிபார்சு வேண்டி வந்தான்.''

''என்ன படித்திருக்கிறார்?''

''பி. ஏ. பட்டதாரி.''

''ஓ...!''

''நல்ல பையன்,'' என்றார், சந்திரசூடன். பிறகு, ''காலேஜ் ஸ்டிரைக் எப்படி இருக்கிறது? நிறுத்திவிடப் போவதாகச் சொன்னாயே?'' என்றபடி, வெற்றிலை போடத் தொடங்கினார்.

''எங்கள் சங்கத்திலிருந்து நான் விலகி விட்டேன்,'' என்றான் பரணி.

''ஏன்?''

''நான் சொன்னதை அவர்கள் கேட்கவில்லை. நான் விலகிவிட்டேன்.''

சந்திரசூடன் சிரித்தபடியே வெற்றிலையை மடித்துவாயில்போட்டார். ''ஏதோ தீவிரமாக எதிர்க்கப் போவதாகச் சொன்னாயே?'' என்று கேட்டார்.

''எதிர்த்துப் பார்த்தேன். மெஜாரிட்டி அவர்கள்தாம். ஆகவே நான் குழுவிலிருந்து விலகிவிட்டேன்.''

''உன் இடத்தில் மகாத்மா இருந்திருந்தால் தனியாகவே போராடி வென்றிருப்பார்,'' என்றார் சந்திரசூடன்.

''எப்படி?''

''அந்த மெஜாரிட்டி மூடர்களை எதிர்த்துச் சாகும் வரை போராடுவார். சாகும் வரை உண்ணாவிரதம் கூட இருப்பார். எதிராளி பணியும் வரை ஓய மாட்டார். ஒரு கேட்டை எதிர்த்து உயிரை விடத் தயாராயிருப்பார். உன்னைப் போல் இயலவில்லை என்று விலகி வந்து விட மாட்டார்.''

''நான் காந்தி இல்லையே,'' என்று கூறிச் சிரித்தான் பரணி.

''பிரும்மச்சரியத்தில் மட்டும் காந்தியைப் போல் நடந்து கொள்ள முடியும் என்று நம்புகிறாயோ?''

''எது முடியுமோ அதையாவது பின்பற்றலாமே.''

''பின்பற்று. ஆனால் அவர் செய்தவற்றையெல்லாம் நாமும் செய்து பார்க்க வேண்டிய அவசியம் என்ன? இயற்கையோடு இசைந்து வாழ்வதுதான் தர்மம். இயல்பிற்கு மாறாக நம்மை நாமே துன்பப்படுத்திக்கொள்வது கொடுமை. மேலும் பிரும்மச்சரியத்தினால் விசேஷமாக ஒருவன் எதையும் சாதித்துவிடப் போவதுமில்லை,'' என்றார் சந்திரசூடன். பிறகு வெளியே போகப் புறப்பட்டார்.

இருவரும் மாடியிலிருந்து இறங்கியபோது, ''நான் சொல்கிறேன் என்று உன் பிரும்மச்சரியத்தை விட்டுவிடாதே. அதற்கு இன்னும் வயது இருக்கிறது,'' என்று அவன் தோளில் தட்டிச் சிரித்தார்.

(தொடரும்)

உத்திரவாதமான பாதுகாப்புக்கு

"பியர்லெஸ்"



அண்மைக் காலத்தில் "பியர்லெஸ்" சில பிரச்னைகளை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. இந்தப் பிரச்னைகள் மிகவும் குறுகிய காலத்துக்குத்தான் இருந்தன. கம்பெனியின் பெருமைமிக்கநிர்வாக இயக்குனர் திரு. B.K ராய் அவர்கள் திடீரென மரணமடைந்தார். இதைத் தொடர்ந்து கம்பெனிக்கும் அதன் பணிகளை நிறைவேற்றும் ஊழியர்களுக்கும் ஒருவரையொருவர் சரியாகப் புரிந்து கொண்டு செயல்படும் விதத்தில் பிரச்னை உருவாகிறது. இந்த சோதனைமிக்க கால கட்டத்தில் போட்டியாளர்கள் என்றும், எதிர் பிரசாரக்காரர்கள் என்றும் சொல்லப்படும் சிலரால் தூண்டப்பட்ட பிரசாரம் ஒன்று ஆரம்பமாகியது. "பியர்லெஸ்" கம்பெனிக்கு ஏற்பட்ட இந்த நெருக்கடியான கால கட்டத்தைப் பயன்படுத்திக் கொண்டு குழப்பத்தை விளைவிப்பதும் வதந்திகளைப் பரப்புவதும் இவர்களது முக்கிய நோக்கமாக இருந்தது. இவர்களுக்கெல்லாம் சவுக்கடி கொடுப்பதுபோல்கம்பெனியின் முழு நேர இயக்குனர் திரு S.K. ராய் அவர்கள் "எந்தவிதமான வெகுமதிச்சீட்டுத் திட்டத்திலோ, வியாபார நோக்கில் பணப் புழக்கத்திலோ "பியர்லெஸ்" ஈடுபட்டுத் தொழில் நடத்தி வரவில்லை என்பதைத் தெளிவாகவும் அழுத்தந் திருத்தமாகவும் கூறினார். மேலும் கம்பெனியின் முக்கிய குறிக்கோள் சிறு சேமிப்பை ஊக்குவிப்பதுதான் என்றும், அதுவும் விசேஷமாக கிராமப் புறங்களில் உள்ள விவசாயிகளிடமும், கூலி வேலை செய்து ஜீவனம் நடத்துபவர்களிடையேயும், ஓரளவு சொல்பவருமானம் உள்ளவர்களிடையேயும், சமுதாயத்தில் அடிமட்டத்தில் உள்ளவர்களிடையேயும் சேமிக்கும் பழக்கத்தை வளர்ப்பதுதான் என்பதையும் விளக்கினார்.

1931—32ம் ஆண்டு நாட்டில் குழப்பமும் கலவரமும் மிகுதியாகயிருந்த நேரம். இந்தச் சமயத்தில்தான் "பியர்லெஸ்" ஆரம்பிக்கப்பட்டது. அப்போது சுதேசி இயக்கம் மீண்டும் தலை தூக்கியிருந்தது. தேசம் முழுவதும் விடுதலைக்காகக் கொதித்தெழுந்து போராடிக்கொண்டிருந்த காலம். மக்கள் மனதில் வெள்ளையர் ஆட்சி மீது வெறுப்பும் அதிருப்தியும் கோபமும் வளர்ந்து கொண்டிருந்தது.

இந்தநேரத்தில்தான் பிரிட்டிஷ் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியின் பிரதிநிதியும் பள்ளி ஆசிரியருமான காலஞ்சென்ற திரு. ராதேஷ்யாம் ரே அவர்கள் வெள்ளையர்களின் பிடியிலிருந்து மக்களை பொருளாதார ரீதியில் விடுவிக்க முனைந்தார். திரு. ரே ஒரு தீவிர தேசியவாதி. சிறந்த தேச பக்தர். சுதேசி இயக்கத்தின் கொள்கைகளினால் மிகவும் கவரப்பட்டு உந்தப்பட்ட இவர் தன்னுடைய சில நெருங்கிய சகாக்களுடன் சேர்ந்து 1932ம் வருடம் "பியர்லெஸ்" கம்பெனியைத் துவக்கினார். இன்று பங்களாதேஷில் உள்ள நாராயணகஞ்ச் என்னுமிடத்தில் தான் "பியர்லெஸ்" கம்பெனி துவங்கப்பட்டது. வெளிநாட்டினரின் கட்டுப்பாட்டுப் பிடியிலிருந்து பூரணமாக விடுபட்டு ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் தொழில் செய்வது இவர்கள் குறிக்கோளாக இருந்தது. மிகவும் அதிசயிக்கத்தக்க முறையில் கம்பெனி வெற்றிமேல் வெற்றிபெற்றுவளர்ந்துவந்தது. விரைவிலேயே இந்தியாவில் முன்னணியில் இருந்த பிராவிடெண்ட் இன்ஷ்யூரன்ஸ் நிறுவனங்களில் ஒன்றாக இது வெளிப்பட்டது. காலப் போக்கில் நிர்வாக சௌகரியங்களை முன்னிட்டு இந்தக் கம்பெனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் கல்கத்தாவுக்கு மாற்றப்பட்டது. "தி பியர்லெஸ் ஜெனரல் ஃபைனான்ஸ் & இன்வெஸ்ட்மெண்ட் கம்பெனி லிமிடெட்" என்று பெயர் சூட்டப்பட்டு மேலும் மேலும் வளர்ச்சியடைய ஆரம்பித்தது.



Late Radhashyam Roy
Founder

அதற்குப் பிறகு "பியர்லெஸ்" சரித்திரத்தில் ஒரு பெரிய திருப்புமுனை 1956ம் ஆண்டு ஏற்பட்டது. ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் தொழில் தேசியமயமாக்கப்பட்டது. இந்திய அரசு பொருளாதார மேம்பாட்டுக்குப் பலப் பல திட்டங்களை வகுத்துக் கொண்டிருந்தது. சாதாரண மக்களின் பொருளாதார நிலையை உயர்த்துவதற்கு தனக்கே உரிய பாணியில் "பியர்லெஸ்" கம்பெனியும் சில புதுமையான திட்டங்களை ஆரம்பித்தது. சாதாரண மக்களின் வாழ்க்கையில் அவர்களின் ஆசைகளும், நோக்கங்களும், இலட்சியங்களும் அவர்களது வாழ்நாளிலேயே ஈடேற அவர்கள் சேமிக்கும் பழக்கத்தை வழக்கமாகக் கொள்ள வேண்டிய அவசியத்தை ஊக்குவிப்பதுதான் நல்லது என்று இந்தக் கம்பெனி கருதியது. சாதாரண மக்களின் சக்திக்கும் தேவைக்கும் ஏற்ப சில திட்டங்களை ஆரம்பிப்பதற்கு கம்பெனியின் இந்தக் கருத்து அவசியமாக இருந்தது. இப்படியாக "சமூக நல திட்டங்கள்" என்ற பெயரில் மிகச் சிறிய சாதாரண மனிதர்களின் தேவைக்கு ஏற்ப புதுமையான சேமிக்கும் திட்டங்களை ஆரம்பித்து "பியர்லெஸ்" தன்னுடைய பணிகளில் முன்னோடியாக இருந்தது.

"பியர்லெஸ்"ஸின் இந்த சமூக நல திட்டங்கள் குறிப்பிடத்தக்க இரண்டு பகுதிகளினால் விவரிக்கப்படுகின்

றன. முதலாவதாகவும் முக்கியமானதாகவும் இந்த திட்டங்கள் விஞ்ஞான ரீதியாகவும், இன்ஷ்யூரன்ஸ்பிரீமியம், கால கெடு, அது முடியும் தருவாயில் கொடுக்கப்பட வேண்டிய தொகை ஆகிய கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டவை. இந்த இடத்தில் ஒரு விஷயத்தைச் சொல்லுவது மிகவும் பொருத்தமாக இருக்கும். இந்தக் கம்பெனியின் சேர்மன் திரு. H.K. சென் அவர்கள் இன்ஷ்யூரன்ஸ் பிரீமியம், எவ்வளவு காலத்துக்கு பாலிஸி எடுத்துக் கொள்ள வேண்டும், அதன் ஆதாயங்கள், பாதகங்கள், பாலிஸிதாரர் இறந்தால் கிடைக்கக் கூடிய தொகை முதலிய பல விஷயங்களைத் துல்லியமாகக் கணக்கிட்டுச் சொல்லக் கூடிய ஒரு பிரமிக்கத் தக்கவர். இந்தக் கம்பெனியின் திட்டங்களில் ஊகத்திற்கு எந்த விதமான இடமும் இல்லை என்று இவர் அழுத்தமாகவும் உறுதியாகவும் சொல்லியிருக்கிறார். இந்தத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு அங்கத்தினரும் "பியர்லெஸ்" கம்பெனியுடன் ஒரு கான்ட்ராக்ட் செய்துகொள்கிறார்கள். குறிப்பிட்ட என்டோமெண்ட் காலத்துக்கு வருஷத்துக்கு ஒரு முறையோ ஆறு மாதங்களுக்கு ஒரு முறையோ மூன்று மாதங்களுக்கு ஒரு முறையோ ஒரு குறிப்பிட்ட சந்தா தொகையைச் செலுத்தி வருவதாக ஒப்புக் கொண்டு அதன்படி செலுத்தி வருகிறார்கள். கம்பெனி, தன் பங்குக்கு சர்டிபிகேட் வைத்திருக்கும் அங்கத்தினர்களுக்குக் குறிப்பிட்ட என்டோமெண்ட் காலம் முடிவடைந்தவுடன் ஒரு குறிப்பிடப்பட்ட மொத்தத் தொகையை அளிக்கிறது. இதற்கு என்டோமெண்ட் தொகை என்று பெயர். அத்துடன் உத்திரவாதமாக ஒரு போனஸ் தொகையையும் அளிக்கிறது. சர்டிபிகேட் வைத்திருக்கும் ஒவ்வொரு அங்கத்தினருக்கும் அளிக்கப்படும் என்டோமெண்ட் தொகையும் உத்திரவாதமாக அளிக்கப்படும் போனஸ் தொகையும் சேர்ந்து அங்கத்தினர் செலுத்தும் தொகையை விட மிகவும் கூடுதலாக இருக்கும். இந்தக் கூடுதல் தொகை அங்கத்தினருக்கு லாபம்.

இந்தத் திட்டங்கள் பல விதங்களில் வளைந்து கொடுக்கும் விதமாக உள்ளன. இந்த சர்டிபிகேட்டுகளை வைத்து கடன் வாங்குவதற்கும், சர்டிபிகேட்டுகளை சரண்டர் செய்து விடுவதற்கும், சந்தா பாக்கியை செலுத்தாத காரணத்தினால் நடுவில் விட்டுவிடப்பட்ட சர்டிபிகேட்டுகள் தாமாகவே மறுபடியும் புதுப்பிக்கப்படுவதற்கும் பல ஏற்பாடுகள் உள்ளன. இரண்டு வருடங்களுக்கான சந்தா தொகையை செலுத்தியவுடனேயே ஒரு சர்டிபிகேட் தானாகவே "பெய்ட்—அப்" ஆகிவிடுகிறது. ஏழுவருடங்களுக்குசந்தாதொகையை செலுத்தியவுடன் முழு டிபாஸிட் தொகையையும் எந்தவித பிடித்தமும் இல்லாமல் திரும்ப எடுத்துக் கொள்ளலாம். மிகச் சாதாரண எளிய மக்க



Sri H. K. Sen
Chairman

ளின் சௌகரியங்களுக்கு ஏற்ப பல விதமான வசதிகளை செய்து கொடுப்பதற்காக இந்த ஏற்பாடுகள் உதவுகின்றன. "பியர்லெஸ்" கம்பெனியின் முக்கிய அக்கறை சர்டிபிகேட் வைத்திருக்கும் அங்கத்தினர்களின் நலனைக் காப்பதுதான்" என்று கம்பெனியின் முழு நேர இயக்குனர் திரு. S.K. ராய் அவர்கள் தமக்கே உரிய பந்தத்துடனும் மிகுந்த நம்பிக்கையுடனும் கூறுகிறார். "பியர்லெஸ்"ஸில் சர்டிபிகேட்

வைத்திருப்பவர்கள்தான் நடைமுறையில் உண்மையான நன்மையடைபவர்கள் என்ற உண்மைக்கு ''பியர்லெஸ்'' கம்பெனியின் இந்த குறிப்பிடத்தக்க நல்லநல்லதிட்டங்களின் அம்சங்களே காரணம்.

சமூக நல திட்டத்தின் உள்ளடங்கியுள்ள இந்த பிரத்யேக வசதிகள் ஒரு புறமிருக்க கம்பெனியின் முதலீடு செய்யும் கொள்கை மிகவும் குறிப்பிடத்தக்கதாக உள்ளது. கம்பெனியின் முதலீடு செய்யும் கொள்கையைப் பற்றி சந்தேகப்படுவதற்கோ பயப்படுவதற்கோ துளிக்கூட இடமில்லை. வாழ்க்கையில் பொருளாதார நிலையில் சரியாக இல்லாத பல லட்சக்கணக்கான மக்களுக்குச் சொந்தமான பணமாயிற்றே. டிபாஸிட்தாரர்களின் இந்த பணத்துக்கு முழு பாதுகாப்பும் காபந்தும் அளிக்க வேண்டுமே என்ற கவலை



Late Shri B. K. Roy
Former Managing Director.

யில் சர்டிபிகேட் வைத்திருப்போர்களின் முழு தொகையும் அரசாங்கத்தின் பாதுகாப்பில் அதாவது தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் ஃபிக்ஸட் டிபாஸிட்டாக வைக்கப்பட்டுள்ளது. சமூக நலதிட்டங்களின் மகோன்னதமான பிரசித்திக்குப் பின்னால் மற்றொரு குறிப்பிடத்தக்க காரணமும் இருக்கிறது. இதுதான் ''பியர்லெஸ்'' ஸ்தாபனத்தின் வளர்ச்சியின் இரகசியம். உண்மையிலேயே புனிதமானதை உருவாக்க வேண்டுமென்று உள்ளார உந்தப்பட்ட எண்ணத்திற்கு மிகவும் அசாதாரண முறையில் இந்தக் கம்பெனி பக்தியும் விசுவாசமும் செலுத்தி வருகிறது. இன்று ''பியர்லெஸ்'' இருக்கும் நிலைக்கு அதை உயர்த்தியிருப்பது இந்தச் சீரிய நோக்கமும், பக்தியும், விசுவாசமும்தான். அத்துடன் எல்லோராலும் பின்பற்றப்பட்டு போற்றப்பட வேண்டியதாக ''பியர்லெஸ்''ஸில் உள்ளவர்கள் ''ஒரு அணியின் வேலையாக'' கடமையாற்றி வருகிறார்கள். கம்பெனியின் துணைச்சல்கார டைரக்டர் திரு. M. R. முகர்ஜி அவர்கள் ஸ்தாபனத்தின் வளர்ச்சிக்கும் புகழுக்கும் முக்கிய காரணம் இந்த ''டீம் ஒர்க்''தான் என்று பெருமைப்பட சொல்கிறார். கம்பெனியின் முக்கியமான அம்சங்கள், குறிக்கோள்கள் பற்றிக்கேட்ட போது, இந்தியா முழுவதும் வங்கியின் தொழில் இல்லாத பல சேமிப்பு ஸ்தாபனங்கள் இயங்கி வருகின்றன. அவைகளிலிருந்து எல்லா விதங்களிலும் ''பியர்லெஸ்'' முற்றிலும் மாறுபட்டு இருக்கிறது'' என்று திரு. S. K ராய் அவர்கள் கருத்து தெரிவித்தார்கள். கணக்கிலடங்காத போலி கம்பெனிகள் காளான் முளைப்பது போல் முளைத்து தங்களுடைய விஞ்ஞான ரீதியில் இல்லாத ஏமாற்றுத்தனமான திட்டங்களினாலும், பேச்சுக்களினாலும் மிகப் பெரிய தவறைப் பரப்பிக் கொண்டுவருகின்றன. பொருளாதார ஸ்திரத் தன்மையும் மக்களிடையே மதிப்பும், செய்யும் காரியத்தில் நல்லெண்ணமும் இல்லாத இந்தக் கம்பெனிகள் மிகச் சிறிய வருவாய் உள்ள சாதாரண மக்களிடமிருந்து பணத்தை சேகரித்துக் குவித்து அந்தப் பணத்தை முறையான ஆரோக்கியமான விதத்தில் முதலீடு செய்யாமல் அபாயகரமான விதத்தில் இந்தப் பணத்தை விரயம் செய்கிறார்கள். இந்த எல்லா பணத்தையும் விழுங்கி விட வேண்டும் என்ற உள்நோக்கமோ அல்லது நல்ல லாபம் சம்பாதிக்க வேண்டும் என்ற எண்ணத்தினால் உந்தப்பட்டோதான் அவர்கள் நிச்சயமாக இந்தக் காரியத்தைச்

செய்கிறார்கள்.

பரவலாக எல்லா இடங்களிலும் உள்ள இந்தக் கவலைப்படத்தக்க விஷயம் பொருளாதாரத்துக்குப் பெரிய கெடுதலை உண்டு செய்யும். மக்களிடையே சேமிப்பு பழக்கத்தையே இது தடுத்துவிடக் கூடும். இது போன்ற போலி ஸ்தாபனங்களிலிருந்து எல்லா விதத்திலும் முற்றிலும் மாறுபட்டு "பியர்லெஸ்" நிறுவனம் ஸ்திரத் தன்மைக்கும் பாதுகாப்புக்கும் பெயர் பெற்று விளங்குகிறது. எந்த வித காரணம்கொண்டும் "பியர்லெஸ்" தூஷிக்கப்பட்டுவிட முடியாது. மற்றஎந்தவிதமான காளான் போன்ற ஸ்தாபனத்துடன் வேண்டுமென்றோ அல்லது வேறு ஏதாவது காரணங்களுடனேயோ சரிசமப்படுத்தி விட முடியாது.

தேசத்தின் சிறுசேமிப்புஸ்தாபனங்களில் "பியர்லெஸ்" இன்று முன்னணியில் விளங்குகிறது. இன்னும் மேன்மேலும் வளர்ச்சியடைந்து விருத்தியாகவும் பீடுநடை போடுகிறது. 1984 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ந் தேதியுடன் முடிவடையும் கால கட்டத்தில் கம்பெனியின் வியாபாரம், வர்த்தகம் ஒரு புதிய உச்ச கட்டத்தை எட்டிப் பிடித்துள்ளது. இந்தக் கால கட்டத்துக்கு ரூ. 3000 கோடிக்கு புதிய அங்கத்தினர்கள் சேர்த்து தொழில் செய்ய வேண்டும் என்று கம்பெனி இலக்காகக் கொண்டது. ஆனால் இந்த இலக்கையும் தாண்டி இந்த கால கட்டத்தில் ரூ. 3040 கோடிக்கு கம்பெனி புதிய அங்கத்தினர்கள் சேர்த்துள்ளது. இதற்கு முந்தைய ஆண்டில் கம்பெனி ரூ. 2795.75 கோடிக்குப் புதிய அங்கத்தினர்களைச் சேர்த்தது. அத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது 1984 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ந் தேதியுடன் முடிவடைந்த கால கட்டத்துக்கு கம்பெனி அடைந்துள்ள புதிய அங்கத்தினர்களின் கூடுதல் தொகையானது மிகவும் போற்றத்தக்க விதத்தில் உள்ளது.

1985 ம் வருடம் ஏப்ரல் 30 ந் தேதியன்று கம்பெனி செய்துள்ள மொத்த முதலீடு ரூ. 600 கோடிக்கும் மேல் உள்ளது. இது மிகவும் பிரமிக்கத் தக்கது. நடப்பு ஆண்டுக்கு ரூ. 3200 கோடிக்கு புதிய அங்கத்தினர்களைச் சேர்க்க வேண்டும் என்பதை கம்பெனி இலக்காகக் கொண்டுள்ளது. ஆரம்ப காலம் தொட்டே கம்பெனி மளமள வென்று புகழேணியில் முன்னேறி வந்திருப்பதையும் கம்பெனியின் செல்



Sri S. K. Roy
Wholetime Director

வாக்கையும் பார்க்கும் போது "பியர்லெஸ்" இந்த இலக்கை நிச்சயமாக எட்டிப் பிடித்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 1985 மே மாதம் முடிய கம்பெனி தனது காரியங்களை எப்படிச் செய்திருக்கிறது என்று பார்க்கும் போது தன்னுடைய மரபையும் பாரம்பரியத்தையும் ஒட்டி இந்த வருஷமும் "பியர்லெஸ்" மிகவும் சுலபமாகத் தன்னுடைய இலக்கை எட்டிப் பிடிப்பதுடன் தாண்டியும் சென்று விடும் என்று இப்போதே ஒரு முன்னோடியாகத் தெரிகிறது.

உலகம் முழுவதும் உற்பத்திக்கு ஆகும் செலவினங்களும், நிர்வாகச் செலவினங்களும் அதிகரித்துக் கொண்டே வந்த போதிலும் "பியர்லெஸ்" கம்பெனி தன்னுடைய நிர்வாகச் செலவினங்களை மிகவும் குறைந்த அளவிலேயே வைத்துக் கொண்டிருக்கிறது. கம்பெனி மிகவும் திறமையுள்ள தொழில்வல்லுநர்களைக்

கொண்டு இயங்கப்படுகிறது என்பதற்கு இதுவேஓர் எடுத்துக்காட்டாகும். மேலும் 1984ம் வருடத்தில் இந்தக் கம்பெனிக்கு ஓர் திருப்பு முனை ஏற்பட்டது. விஞ்ஞான ரீதியில் நிர்வாக அமைப்பு திறம்பட இயங்குவதற்கும் பொறுப்புக்களை அதிக அளவில் பகிர்ந்து கொண்டு செயல்படுவதற்கும் வசதியாக தேசம் முழுவதிலும் உள்ள "பியர்லெஸ்" காரியாலயங்கள் முதல் கட்டமாக கம்ப்யூட்டர் முறையில் கொண்டு வரப்பட்டன. வருங்காலத்தில் மிகப்பெரிய அளவில் செயல்படுவதற்குத் தேவையான புள்ளி விவரங்களைச் சேகரித்து தேவைப் பட்டபோது கொடுப்பதற்கும், சிக்கனமான முறையில் நிர்



Sri M. R. Mukherjee
Director

வாகம் தொடர்ந்து நடைபெறுவதற்கும் இந்த ஏற்பாடு மிகவும் உதவும். அது மட்டுமல்ல. கம்பெனியின் நிர்வாகத் திறனை மேலும் செம்மைப் படுத்தும் நோக்கத்துடன் நிதி நிலைமை மற்றும் அதன் தொடர்புள்ள செயல்களை ஆராய்ந்து அறிந்து ஓர் அறிக்கை சமர்ப்பிக்கப்படுவதற்காக Ms. PRICE WATERHOUSE & COMPANY நியமிக்கப் பட்டுள்ளார்கள்.

சர்டிபிகேட் வைத்திருப்போர்களின் தொகைக்கு பாதுகாப்பும், காபந்தும் கொடுப்பதில் "பியர்லெஸ்" கம்பெனிக்கு உள்ள அக்கறையும், கவலையும், ஈடு இணையற்றது. 1984ம் ஆண்டு டிசம்பர் 31ந் தேதியன்று எல்லா "பியர்லெஸ்" சர்டிபிகேட் வைத்திருப்போர்களின் கூடுதல் தொகை ரூ. 460.35 கோடியாக இருந்தது. இந்தத் தொகைமுழுவதும் அரசாங்கபத்திரங்களாகவும், தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் ஃபிக்செட் டிபாஸிட்களாகவும் முதலீடு செய்யப்பட்டுள்ளது. சர்டிபிகேட் வைத்திருப்போர்களின் நலனைக் காப்பதற்காக எல்லா அரசாங்கப் பத்திரங்களையும், ஃபிக்செட் டிபாஸிட் ரசீதுகளையும் யுனைடெட் பாங்க் ஆப் இந்தியாவில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. கம்பெனி இவர்களுடன் செய்து கொண்டுள்ள ஒப்பந்தப்படி யுனைடெட் பாங்க் ஆப் இந்தியாவுக்கு இந்த அரசாங்க பத்திரங்கள் மீதும் ஃபிக்சட் டிபாஸிட்டுகள் மீதும் ஒரு "LIEN" இருக்கிறது. எனவே அரசாங்கப் பத்திரங்களும் ஃபிக்செட் டிபாஸிட்டுகளும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் அனுமதியின்றி "பியர்லெஸ்" கம்பெனியால் திரும்பப் பெற்றுக் கொள்ள முடியாது.

"பியர்லெஸ்" கம்பெனியின் கொள்கைகளுக்கும் சமூகப் பொறுப்புகளுக்கும் சித்தாந்தங்களுக்கும் ஏற்ப 1984ம் ஆண்டில் மருத்துவ ஆராய்ச்சி அபிவிருத்திக்கும், பல்வேறு கல்வி நிறுவனங்களுக்கும், சமூக காரியங்களுக்கும், தர்ம காரியங்களுக்கும், பரோபகார காரணங்களுக்கும் ரூ. 20.90 லட்சம் நன்கொடையாகவும் சன்மானமாகவும் அளிக்கப்பட்டன. இந்தியாவிலுள்ள பல இடங்களில் நிறுவப்பட்டுள்ள "பியர்லெஸ்" அலுவலகங்களில் நாலாயிரத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. தன்னுடைய புதுமையான சிறு சேமிப்புத் திட்டங்களில் "பியர்லெஸ்" கம்பெனி இரண்டு கோடிக்கும் மேற்பட்ட ஜனங்களை சேர்த்து அதன் மூலம் லக்ஷக்கணக்கான ஜனங்களுக்கு கௌரவமான சுய வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. சர்க்கார் கஜானாவில் ரூ. 600 கோடிக்கும் மேல் நிதி போட்டுள்ளது.

இந்தக் காரியங்கள் எல்லாவற்றுக்கும் ''பியர்லெஸ்'' கம்பெனியைப் பாராட்டிப் புகழலாம். தன்னுடைய வளர்ச்சிப் பாதையில் எவ்வளவு அதிகப்படியான மக்களை ஈடுபடுத்த முடியுமோ அவ்வளவு பேர்களை ஈடுபடுத்தி 53 ஆண்டுகளுக்கு முன் ஆரம்பிக்கப்பட்ட போது ஏற்றுக் கொண்ட உயர்ந்த கொள்கைகளையும் சீரிய நோக்கங்களையும் ''பியர்லெஸ்'' கம்பெனி இன்னமும் கடைப்பிடித்து வருகிறது. சுய வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பது இன்று அரசாங்கத்தின் திட்டமிட்ட கொள்கையாக இருக்கிறது. புதிய 20 அம்சத் திட்டத்தில் இது ஓர் அங்கமாகி விட்டது. ஆனால் ''பியர்லெஸ்'' கம்பெனி இந்தச் சீரிய நோக்கத்தைத் தன்னுடைய லட்சியமாகக் கொண்டு இவ்வளவு காலமாகச் செயல்பட்டு வருகிறது.

மேலும் ஏழாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் தன்னையும் ஈடுபடுத்திப் பங்கேற்றுக் கொள்ள ''பியர்லெஸ்'' கம்பெனி மிகவும் தீவிரமாக இருக்கிறது. இதன் தொடர்பாக மத்திய மாநில அரசுகளின் முக்கியத்துவம் வாய்ந்த (Priority Sector) தொழில் நிறுவனங்களுக்குத் தேவையான நிதி உதவிகளுக்கு உத்திரவாதம் அளிக்கவும் நியாயமான வருமானம் கிடைக்கவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் பேச்சு வார்த்தை நடத்துவதென்று ''பியர்லெஸ்'' கம்பெனி பிரேரேபித்துள்ளது.

சர்டிபிகேட் வைத்திருப்பவர்களின் நலனைக் கட்டிக் காக்க ''பியர்லெஸ்'' கம்பெனியின் முயற்சிகள் கொஞ்சம் கூடத் தளர்ச்சியடையவில்லை. இதற்காக 1977ம் ஆண்டிலேயே இரண்டு டைரக்டர்களை போர்டில் சேர்த்துக் கொள்வதென்றும் இவர்கள் சம்பந்தப்பட்ட அரசாங்க அதிகாரிகளால் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என்றும் ஒரு விசேஷ தீர்மானம் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்டது.


''பியர்லெஸ்'' கம்பெனியின் முக்கிய நோக்கம் வீடு வீடாகச் சென்று மக்களுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு தன் பணிகளை அவர்கள் பாராட்டும்படி செய்ய வேண்டும் என்பதுதான். சர்டிபிகேட் வைத்திருப்போர்களின் நலனுக்கு ''பியர்லெஸ்'' முக்கியத்துவமும் முதலிடமும் கொடுக்கிறது. இதனால்தான்



On 21st June MD donates Rs. 50,000/- to Chief Minister's Flood Relief Fund, West Bengal.

மக்களின் நம்பிக்கையையும் நல்லெண்ணத்தையும் ''பியர்லெஸ்'' அனுபவித்து வருகிறது. வங்கிகள் வியாபாரம், தொழில், விவசாயம், வாணிபம் முதலியவற்றுக்கு நிதி உதவி அளிக்கின்றன. ''பியர்லெஸ்'' கம்பெனியின் வியாபார நோக்கம் வங்கிகள் செயல்படும் விதத்திலிருந்து பூரணமாக மாறுபட்டது. ''பியர்லெஸ்'' கம்பெனி செய்வதுபோல் வங்கிகள் வீடு வீடாகச் சென்று சேவை செய்வதில்லை. சுய வேலை வாய்ப்புக்களுக்கான சூழ்நிலைகளை ஏற்படுத்திக் கொடுப்பதில்லை. இருந்த போதிலும் ''பியர்லெஸ்'' கம்பெனியின் நடவடிக்கைகளினால் ஏற்படும் பயன் வங்கிகளுக்கு ஓர் நல்ல ஆரோக்கியமான பயனைத் தருகிறது. சர்டிபிகேட் வைத்திருப்போர்கள் எல்லோரிடமிருந்தும் ''பியர்லெஸ்'' கம்பெனியினால் திரட்டப்பட்ட பணமானது அரசாங்கத்தின் பாதுகாப்பில் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் ஃபிக்செட் டிபாஸிட்டுகளாகவும் அரசாங்க பிராமிஸரி நோட்டுகளாகவும் வைக்கப்பட்டுள்ளன. இப்படியாக தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளுக்கு டிபாஸிட்டுகள் சேர்த்துக் கொடுக்கும் ஏஜென்ஸியாக ''பியர்லெஸ்'' கம்பெனி நடந்து வருகிறது. மொத்தத்தில் ''பியர்லெஸ்'' கம்பெனியில் முதலீடு செய்வது எல்லாவிதமான முதலீடுகளையும் விட மிகவும் பாதுகாப்பானது. இதனால்தான் ''பியர்லெஸ்'' கம்பெனி மிகவும் குறைந்த வருமானம் உள்ள மக்கள் மனத்தில் ஒரு விதமான தெம்பை ஏற்படுத்த முடிந்தது. இவர்களுக்கெல்லாம் தாங்கள் மிகவும் கஷ்டப்பட்டு சேர்த்த பணம் மிகவும் பாதுகாப்புடனும் பத்திரமாகவும் காப்பாற்றப்பட வேண்டுமே என்ற ஆவல்.

1984 ம் வருடத்தில் சர்டிபிகேட்டுகள் காலகெடு முடிந்ததாலும் வேறு காரணங்களுக்காகவும் ரூ. 34 கோடிக்கும் மேல் ''பியர்லெஸ்'' பட்டுவாடா செய்துள்ளது. இது தவிர சர்டிபிகேட் வைத்திருப்பவர்கள் விபத்தினால் மரணமடைய நேரிட்டால் அவர்களுக்கு இலவசமாக நிதி உதவி அளிக்க Free Accidental Death Benefit என்று நேஷனல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியுடன் சேர்ந்து ''பியர்லெஸ்'' கம்பெனி உதவுகிறது. 1984 ம் ஆண்டில் ரூ. 1.73 கோடி இதுபோல் அளிக்கப்பட்டிருக்கிறது. இப்படியாக இந்தப் பிரத்யேக வசதி சர்டிபிகேட் வைத்திருப்பவர்களுக்கு இலவசமாக ''பியர்லெஸ்'' கம்பெனியால் அளிக்கப்படுகிறது. அது தவிர நேஷனல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியும் தன் பங்குக்கு எந்த விதமான அதிகப்படியான வேலையில்லாமல் ஒவ்வொரு ஆண்டும் ஒரு கணிசமான தொகையை பிரீமியமாகப் பெறுகிறது.



Peerless Golden Jubilee Brachy Therapy Unit at Cancer Centre and Welfare Home Thukurpukur, West Bengal.

Peerless General Finance and Investment Co Ltd.,
Peerless Bhawan, 3, Esplanade East, Calcutta-700 069.

உள்ளத்தை



ஹெல்மெட்டில் வந்த எமன்!

பத்து நாட்களுக்கு முன்பு நடந்த என் உள்ளத்தை உலுக்கிய நிகழ்ச்சி இது. பல்லடம் சாலையில் ஓர் ஆணும் பெண்ணும் (தம்பதியர் போலும்!) மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தார்கள். திடீரென்று எதிரில் ஒரு போலீஸ்காரர் வரவே, அவருக்குப் பயந்து, பின்னால் உட்கார்ந்திருந்த பெண் தான கையில் வைத்திருந்த ஹெல்மெட்டை ஆணின் தலையில் மாட்டினார். மாட்டும்போது, பதற்றத்தில் முன்பின்னாக



மாற்றிவிட்டதால், ஹெல்மெட் கண்ணை மறைக்கவே எதிரில் வந்து கொண்டிருந்த லாரியில் மோட்டார் சைக்கிள் மோத — இருவரும் அதே இடத்தில் அடிபட்டு மாண்டார்கள். அந்தக் கோரக் காட்சி இன்னமும் என் உள்ளத்திலிருந்து மறையவே இல்லை.

— வசுமதி சுந்தரராஜன், பொள்ளாச்சி.

அதுவல்லவோ காதல்!

பெங்களூர் பிரிகேட் ரோடை ஒட்டியுள்ள எனது அலுவலகம் செல்லும்போது ஒரு நாள் அந்தக் காட்சியைக் கண்டேன். பஸ்ஸில் அடிபட்டு ஓர் ஆண் கழுதை இறந்து கிடந்தது. பக்கத்தில் கண்ணீர் வழிய ஒரு பெண் கழுதை! மாலை ஐந்து மணிக்கு நான் அலுவலகம் முடிந்து வரும்போதும் அந்தப் பெண் கழுதை அதே இடத்தில் கண்ணீரோடு நின்று கொண்டிருந்தது. இறந்த கழுதையையும் யாரும் அப்புறப்படுத்தவில்லை. கழுதைகளுக்குள் இத்தனை காதலா! என் உள்ளத்தையே உலுக்கிவிட்டது.

— ஆர். ஹேமலதா, சென்னை — 41.

குருட்டு இதயங்கள்

சமீபத்தில் நான் பல்லவனில் சென்று கொண்டிருந்தபோது ஓரிடத்தில் கண் தெரியாத இளைஞர் ஒருவர் ஏறினார். வடபழனியில் தன்னை இறக்கிவிட்டுவிடுமாறு அவர் கண்டக்டரிடம் சொல்ல அவரோ, 'குருட்டுப் பய, ஓசியில் ஏறிட்டுத் தொந்தரவு தர்றான்' என முணுமுணுத்துக் கொண்டிருக்க, இதையறியாத அந்தக் குருட்டு இளைஞர் கண்டக்டர் இருக்கையில் உட்கார, "பொட்டைப் பையா! எழுந்து முன்னாடி போய் உட்காரு!" என்று கண்டக்டர் விரட்ட..... அப்பப்பா! இன்று நினைத்தாலும் மனம் கலங்குகிறது!

— எஸ். சம்பத்குமார், சென்னை — 93.

விவரம் புரியாத குழந்தைகள்

இரண்டே நாட்கள் ஜுரத்தில் இரண்டு குழந்தைகளையும் தவிக்க விட்டுவிட்டு, இளம் வயதிலேயே மறைந்துவிட்ட என் தோழியைக் கடைசி முறையாகக் காணச் சென்றிருந்தேன். அவளின் இரண்டு குழந்தைகளும் தங்களுக்கு என்ன நேர்ந்திருக்கிறது என்று தெரியாமல், அன்னை தூங்குகிறாள் என்று நினைத்து, அவள் மீது போடப்பட்டிருந்த மலர் மாலைகளைப் பிடித்துச் சிரித்து விளையாடிக் கொண்டிருந்தன. அதைக் கண்டதும் என் துக்கம் பல மடங்கு அதிகமாகிவிட்டது.

— எஸ். மங்கையர்க்கரசி, மதுரை — 1.

மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி!

நான் வேலை முடிந்து வீடு திரும்பும் வழியில், அளவுக்கு மீறிக் குடித்துவிட்டு, நடு ரோட்டில் விழுந்து கிடக்கும் தன் தந்தையின்


உலுக்கிய நிகழ்ச்சி!

தலைமாட்டில் சுமார் பத்து வயது மதிக்கத் தக்க சிறுவன் ஒரு கரும்பைக் கடித்துத் தின்று கொண்டே உட்கார்ந்திருந்தான். தன் தகப்பனின் போதை தெளிந்த பிறகு வீட்டிற்கு அழைத்துச் செல்வதற்காக அச்சிறுவன் அமைதியாய் அமர்ந்திருந்த அந்தக் காட்சி என் உள்ளத்தையே உலுக்கிவிட்டது.

— ஆ. மூர்த்தி, சென்னை—30.

அவளல்லவோ உண்மைத் தாய்!

என் வீட்டிற்கு அருகிலுள்ள பாழடைந்த



மண்டபத்தில் கூடை முடையும் குறவர்கள் வசித்து வந்தனர். ஒருநாள் குறப் பெண் ஒருத்தி, பிறந்து நான்கு நாட்கள்கூட ஆகியிருக்காத பச்சிளம்குழந்தைஒன்றைக்கையில் வைத்துக் கொஞ்சிக் கொண்டிருந்தாள். 'ஏது குழந்தை?' என்று நான் அவளிடம் கேட்ட போது, குப்பைத் தொட்டியிலிருந்து கண்டெடுத்ததாகவும், தானே அதை வளர்க்கப் போவதாகவும் கூறினாள். ஏற்கெனவே அவளுக்குப் பத்து குழந்தைகள். இந்த நிலையிலும் எவளோ பெற்று இரக்கமற்றுக் குப்



பைத் தொட்டியில் போட்டுவிட்ட குழந்தையைத் தான் எடுத்து வளர்க்கும் அந்தத் தாயுள்ளத்தைக் கண்டு மெய் சிலிர்த்துப் போனேன். அவளல்லவோ உண்மைத் தாய்!

— எஸ். சாந்தினி தேவி, மயிலாடுதுறை.

உலுக்கிய அல்ல; உடைத்த நிகழ்ச்சி!

அலுவலகத்தில் பணிபுரிந்த என் சக ஊழியர் ஒருவர் திடீரெனக் காலமாகிவிட்டார். அவர் உடலைப் பத்து மைல் தொலைவிலுள்ள அவர் வீட்டிற்கு எடுத்துச் செல்லும் போது, வீட்டின் முன் துக்கத்தோடு கூடியிருந்த கூட்டத்தை விலக்கிக் கொண்டு அவர் மனைவியைத் தேற்றப் பாய்ந்தோடிச் சென்றால்..... ஏறக்குறைய அரை மணி நேரத்திற்கு முன்தான் மின்சாரத் தாக்குதலினால் அந்தச் சகோதரியும் உயிர் இழந்திருந்தார். அது என் உள்ளத்தை உலுக்கிய நிகழ்ச்சி என்பதை விட உடைத்த நிகழ்ச்சி என்றுதான் சொல்ல வேண்டும்.

— வி. துளசிதாஸ், சேலம்—7.

நான் ஆடிப்போன நிகழ்ச்சி

கோவை மத்திய பஸ் நிலையத்தில் சுமார் ஐந்து வயதுச் சிறுவன் ஒருவன், விடாமல் அழுது கொண்டிருந்த கைக்குழந்தை ஒன்றை இடுப்பில் வைத்துக் கொண்டு பிச்சை கேட்கவே நானும் ஐம்பது பைசா போட்டேன். பின் நான் காப்பி குடிக்க ஒரு ஹோட்டலுக்குச் சென்றபோது, அங்கு அதே சிறுவன் அக் குழந்தையின் அழுகையைச் சிறிதும் பொருட்படுத்தாமல் டீயும், பன்னும் வாங்கிச் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். நான் கோபத்தோடு, 'குழந்தைக்கு ஏன் எதுவும் கொடுக்கவில்லை?' என்று கேட்க, அதற்கு அவன், 'போங்க சார்! இது சாப்பிட்டா அப்புறம் அழாது. நான் எப்படிச் சம்பாதிப்பதாம்!' என்றான் அலட்சியமாக. நான் ஆடிப் போய் விட்டேன்.

— எம். என். சிவகுமார், கோயம்புத்தூர்.

இன்று நினைத்தாலும் வேதனைதான்

என் பக்கத்து வீட்டிலிருந்த ஜோதி என்னும் இரண்டு வயதுக் குழந்தையை நாய்

கடித்துவிட்டது. அக்குழந்தையின் தாயார், அரசு மருத்துவமனைக்குச் சென்று குழந்தைக்கு இரண்டு முறை ஊசி போட்டு வந்தார். பிறகு சென்றபோது, 'இன்னும் மருந்து வரவில்லை, வந்த பிறகு ஊசி போட்டுக் கொள்ளலாம்!' என்று மருத்துவமனையிலுள்ளவர்கள் அலட்சியமாகக் கூறவே, தாயும் அசட்டையாக இருந்துவிட்டார். ஒரு மாதம் கழிந்தவுடன், அந்தக் குழந்தை நாயைப் போலவே இரண்டு நாட்கள் கத்திக் கொண்டிருந்துவிட்டு இறந்து போய்விட்டது. அதை இன்று நினைத்தாலும் வேதனை தாங்க முடியவில்லை.

— ஏ. பி. மாரியப்பன், சேலம் — 16.

விளையாட்டே வினையானது!

கடந்த கல்வியாண்டில் மாணவர்களாகிய நாங்கள் பொழுது போக்காக ஒருநாள் அரட்டை அடித்துக் கொண்டிருந்தபோது, தற்கொலை பற்றிய பேச்சு வந்தது. பலரும் பல அபிப்ராயங்களைச் சொன்னார்கள். நானும் என் பங்கிற்கு, 'உள்ளங்கை மணிக்கட்டு நரம்பை அறுத்துவிட்டுக் கட்டிலில் படுத்துக் கொண்டு, பக்கவாட்டில் நீர் நிரம்பிய பக்கெட் ஒன்றில் அறுபட்ட கையை வைத்துக் கொண்டால், ரத்தம் முழுவதும் பக்கெட்டில் இறங்கிவிடும். எளிதாக இறந்துவிடலாம்' என்று சொல்லி' வைத்தேன். அதன்படியே செமஸ்டரில் தோல்வியுற்ற நண்பன் ஒருவன் இறந்த விஷயத்தைக் கேள்விப்பட்டுக் குலுங்கிப் போய்விட்டேன்.

— ஆனந்த், மேட்டுப்பாளையம்.

உயிரைக் குடித்த தூளி

அண்மையில், தூளியில் கிடத்தப்பட்ட என் நண்பனின் குழந்தை இறந்து போன செய்திதான் என் உள்ளத்தை உலுக்கிவிட்டது. யாரும் இல்லாதபோது உறக்கத்திலிருந்து விழித்துக் கொண்ட அக்குழந்தை கையைக் காலை உதைத்திருக்கிறது. தூளி கட்டியிருந்த துணி மக்கிப் போன பழைய துணி போலும்! அது கிழிந்துவிடவே, அக் கிழிசலில் குழந்தை தலையை விட்டுக் கால்களைத் தரையில் ஊன்றிச் சுற்றிச் சுற்றி வர, அப்போது அதே தூளித் துணியால் கழுத்து இறுக்கப்பட்டுக் குழந்தை இறந்து போன துயரத்தை என்ன சொல்ல?

— வி. எஸ். கிருஷ்ணசாமி, கடலூர் — 1.

கலங்க வைத்தது டீ. வி.

ஒரு ஞாயிறன்று டீ. வி. யில் World of Sports நிகழ்ச்சியில் ஐரோப்பா கால் பந்து சாம்பியன் கோப்பைக்கான பந்தயத்தைக் கண்டு ரசித்துக் கொண்டிருந்தேன். திடீரென்று ஏற்பட்ட ரகளையில் விளையாட்டு வீரர்களை ரசிகர்கள் தாக்க ஆரம்பித்துவிட்டார்கள். ஒரு விளையாட்டு வீரர் காவலர் ஒருவரிடம் ஏதோ கூறிக் கொண்டிருந்தபோது, பின்புறமிருந்த ஒரு ரசிகர் தேங்காய் அளவுள்ள ஒரு கல்லால் தாக்க அவர் ரத்த வெள்ளத்தில் மிதந்தார். அதன்பின் காவலர் தடியடி — கண்ணீர்ப் புகை..... என்று கண்ட காட்சிகளை இப்போது நினைத்தாலும் கலங்கிப் போகிறேன்.

— பத்மஜா ஜெகதீஷ், பெங்களூர் — 16.

வெட்கம்! வெட்கம்!

இடம்: பம்பாய் சாஹார் விமான நிலையம். அதிகாலை நாலரை மணி. முப்பது வயது மதிக்கத்தக்க தென்னிந்தியப் பெண்மணியின் இடது தோளில் இரண்டு வயதுள்ள தூங்கும் குழந்தை, வலது தோளில் கனமான பை. கூடவே இன்னும் ஒரு பெரிய பை. பக்கத்தில் வந்து கொண்டிருந்த ஐந்து வயதுச் சிறுவன் வாந்தி எடுக்க ஆரம்பித்துவிட்டான். அந்த பெண்மணியோ ஐந்தேகாலுக்கு நியூயார்க் புறப்படும் விமானத்தில் ஏற வேண்டும். 'எனக்கு உதவ யாரும் இல்லையா?' என்று அவர் ஆங்கிலத்தில் சத்தம் போட்டும் நம்மவர்கள் யாரும் முன் செல்லவில்லை. டிக்கெட் வாங்குவதற்காக வரிசையில் நின்றிருந்த வயதான ஐரோப்பியர் ஒருவர்தான், குழந்தைக்குச் சோடா வாங்கிக் கொடுத்து, அவர்கள் விமானத்தில் ஏற உதவிவிட்டு வந்தார். இதுதான் என்னை உலுக்கிவிட்ட நிகழ்ச்சி.

— வசந்தா சீனிவாசன், சென்னை — 17.


ஆண்டவனாலும் முடியாது!

என் இரு சிறுநீரகங்களும் பழுதடைந்துவிட்ட நிலையில் என் மகனோ, மனைவியோ, அண்ணனோ, தம்பியோ..... யாரும் தங்கள் சிறுநீரகம் ஒன்றை எனக்குத் தர முன்வரவில்லை. மருமகன்தான் மனமுவந்து தன் சிறுநீரகம் ஒன்றை எனக்குக் கொடுத்து என்னை வாழ வைத்தார். ஆபரேஷன் வெற்றிகரமாக முடிந்து டிஸ்சார்ஜ் ஆகி நான் என் மருமகனைக் காணச் சென்றபோது, என் மகள் வெள்ளை உடை அணிந்து, பூவிழந்து, பொட்டிழந்து காட்சியளித்தாள். எனக்கு வாழ்வு கொடுத்த அந்தத் தெய்வம் போய்விட்டதை நினைத்து இன்னமும் கதறிக் கொண்டுதான் இருக்கிறேன். எனக்கு ஆறுதல் கூற அந்த ஆண்டவனாலும் முடியாது.


— க. நாராயணன், செஞ்சி.

ப்ளோப்ளாஸ்ட் வழங்கும் வி. ஐ. பி. சூட்கேஸைக் குலுக்கல் முறையில் பரிசாகப் பெறும் அதிர்ஷ்டசாலி:

ஆ. மூர்த்தி,
526 — 18 வது குறுக்குத் தெரு,
தா. பி. சத்திரம்,
சென்னை — 600 030.



லடாக்கில் கடுமையான பனிப்புயல் வீசிய பிறகு குவியும் பனியின் கனத்தைத் தாங்கி நின்று பாதுகாப்பு தரக்கூடிய கூரைத் தகடு எது?




லடாக்கில் இத்தகடுகள் தேவைப்படாது என்றாலும் ராம்கோ அஸ்பெஸ்டாஸ் கூரைத் தகடுகள் மிக அதிக பளுவையும் தாங்கி நிற்கும் வகையில் உறுதியாகத் தயாரிக்கப்படுகின்றன.

ராம்கோ அஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் தகடுகள் ஆயுளுக்கும் உழைக்கும் வண்ணம் வலுவாக உரு வாக்கப்படுகின்றன. சிறந்த மூலப் பொருட் களைத் தேர்ந்தெடுப்பதில் கண்காணிப்பு, உற்பத்தியில் நவீனத் தொழில்நுட்பம், திட்ட மிட்ட தரக்கட்டுப்பாடு – இவற்றின் இணைப்பே ராம்கோ அஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் தகடுகளின் சிறப்பு.

எனவேதான் ராம்கோ அஸ் பெஸ்டாஸ் சிமெண்ட் தகடுகள் எப்படிப்பட்ட பருவநிலைகளையும் எதிர்கொண்டு, காலத்தை வென்று நிலைத்து நிற்கின்றன.

எனவே கூரைத் தகடுகளில் ராம்கோவின் புகழ் கொடி கட்டிப் பறப்பதிலும் தலைசிறந்த கட்டிடக்கலை நிபுணர்களும் பொறியாளர்களும் அதையே தேர்ந்தெடுப்பதிலும் வியப்ப தற்கு எதுவுமில்லை.



Ramco

ராம்கோ. ஏனெனில் அதுவே அதிகபட்ச வெப்பத்தையும் அநாயாசமாக ஏற்று, ஆயுட்காலம் முழுவதும் உழைக்கும் வண்ணம் உறுதியாகத் தயாரிக்கப்பட்டு, சோதிக்கப்பட்டு வழங்கப்படுகிறது.

ராம்கோ அஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் தகடுகளும் மற்ற உபகரணங்களும் தரமான கூரைகளுக்கு மட்டுமல்ல நிரந்தரமான பாதுகாப்புக்கும் கூட.

சதர்ன் அஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் லிமிடெட்
739, அண்ணா சாலை,
சென்னை 600 002.
போன்: 82006

பரிபூரண விற்பனையாளர்கள்:
ராஜா சாரிடி டிரஸ்ட்

அலுவலகங்கள்: பெங்களூர்
• எர்ணாகுளம் • ஹைதராபாத்
• பூனா • விஜயவாடா
• விசாகப்பட்டினம்

தொழிற்சாலைகள்:
அரக்கோணம் (தமிழ்நாடு)
கரூர் (கர்நாடகம்)

பிரஷர் பைப் பிரிவு:
மக்ஸி (மத்தியப் பிரதேசம்)

CAS/SACL/27-A/85-TAM

தீராத விளையாட்டு ஸாயி

15. ''உனக்கு ஸ்வாமியைப் பிடித்திருக்கிறதா?''

> நல்லன்னையிடம் சிறு குழந்தைகள் போல், விளையாடும் தெய்வங்கள்.
>
> — ரிக்வேதம் 10—78—6.

''பாபா ஏன் தம்முடைய அற்புத சக்தியை இப்படி அப்பட்டமாக வெளிக் காட்டுகிறார்?'' என்று கேட்பவர்களுண்டு. அவருடனேயே இருக்கும் தொண்ணூறு வயதுக்கு மேற்பட்ட ஸ்வாமி காருண்யா நந்தாவோ இதற்கு நேர் மாறாக, அவர் தமது அற்புத சக்தியில் லவலேசத்தைக்கூட வெளிக்காட்டவில்லை என்கிறார். காட்டினால் அதைத் தாங்க ஈரேழுலகுக்கும் திராணி இராது என்று சபதம் செய்கிறார். உடன் வசிக்கும் தம் போன்றோரிடம் எப்போதேனும் அச் சக்தியின் ஆழ்மைக்கு ஸங்கேதம் காட்டுவதையே தங்களால் தாங்க முடிவதில்லை என்கிறார்.



உணவியலில் டாக்டர் பட்டம் பெற்ற ஒரு தாய் இருக்கிறாள். ஆனாலும் அவள் குழந்தையிடம் தனது இனிய தாய்மையைத்தான் காட்டுவாளேயன்றி, அரிய ''டாக்டர்மை'' யைக் காட்டமாட்டாளே! அந்த ''டாக்டர்மை'' யைக் கொண்டே குழந்தைக்கு ஊட்ட மளிக்கும் புதுப் புது உணவு வகைகள் செய்து ஊட்டுவாள். அது சுவைத்து உண்ணும் பக்ஷணமாக அவளுடைய டாக்டர்மை உரு வெடுக்கும். பார்க்கும் போதே, குழந்தையைக் கவரும்படியாக பக்ஷணத்துக்குக் கலர் போட்டு, வித வித உருவில் செய்து கொடுப்பாள். ஸாயித் தாயின் அரிய சக்தி நமக்கு இனிய பக்ஷண லீலைகளாக ஆகின்றன. அவற்றை உண்டே அச் சக்தியின் ஸாரமான தூய அன்பில் ஊட்டம் பெறுகிறோம்.

கொஞ்சம் கொஞ்சம் நம்மிடம் வெளிப் படுத்தும் திவ்ய சக்தியையும்கூட உடனே ஸ்வாமி ஒளித்து மறைத்துவிடுவாரென்று காருண்யா நந்தர் கூறுகிறார். எடுத்துக்காட்டாக ஒன்று சொல்கிறார்:

இருபதாண்டுகளுக்கு முன் காருண்யா நந்தர் ஸ்வாமியோடு பம்பாய்க்குச் சென்று, அவரோடு அங்குள்ள ஸாயி கேந்திரமான ''தர்மக்ஷேத்ரா''வில் தங்கியிருந்தார். ஸ்வாமி மாடியிலும், இவர் கீழ் தளத்திலும் தங்கியிருந்தனர். ஒரு நாள் நண்பகலில் மாடிக்குச் சென்று வரும் பக்தர்களை இவர் தமதறை ஜன்னல் வழியாகப் பார்த்தபடி அமர்ந்திருந்தார்.

திடீமென விலாப்புறத்தில் ஒரு ''கிச்சுக் கிச்சு'' உணர்ச்சி ஏற்பட்டது. ஸாதாரண ''கிச்சு கிச்சு'' இல்லை. அந்தராத்மாவின் அடிவேர் வரையிலும் இனிக்க இனிக்க நிமிண்டும் இன்ஸாரமான மின்ஸாரக் கிளுகிளுப்பு! திரும்பிப் பார்த்தார்.

பேரற்புதர்தாம் சிறு குழந்தையாகி இவரைப்பின்புறத்திலிருந்துகிச்சுக்கிச்சுமூட்டிக் கொண்டிருக்கிறார்!

அவர் அங்கு வந்ததே அற்புதம்தான். ஏனெனில் காருண்யா நந்தர் அறையை உட்புறம் தாழ் போட்டுக் கொண்டாக்கும் அமர்ந்திருந்தார்! அன்புக்கு ஏது அடைக்கும் தாழ்?

''ஸ்வாமீ! க்ருஷ்ண லீலா மறுபடி செய்து பார்க்கிறீர்களா? தாழிட்ட அறைக்குள் எப்படி வந்தீர்கள்?'' என்று கேட்டார் காருண்யா

ரா. கணபதி

நந்தர்.

அதற்கு ஸ்வாமி அநாயாஸமாக உதிர்த்த மறுமொழி காருண்யா நந்தரின் அந்தராத்ம அடி வேரை வெறுமே கிச்சு கிச்சு மூட்டாமல், உலுக்கியே எடுத்துவிட்டது. ஸ்வாமி சொன்னார்: ''நான் உள்ளே வரணும்னு நெனச்சுட்டா அதை எது தடுக்க முடியும்?''

இப்படிச் சொல்லிக் காருண்யா நந்தரின் இதயக் கதவத்தைப் பட்டெனத் திறக்கச் செய்து அதனுள் வெள்ளமாகப் புகுந்த ஸ்வாமி உடனேயே, ''குழந்தையை வெள்ளத்தில் திணற வைப்பானேன்? லேசாக 'ஸ்பிரே' மட்டும் செய்வோம்'' என எண்ணினார்.

தலையோடு கால் நடுங்கிக் கொண்டிருந்த காருண்யா நந்தரைச் செல்லமாக ஒரு தட்டுத் தட்டினார். அவ்வளவுதான். காருண்யா நந்தருக்குக் 'கிச்சுக்-கிச்சு'வில் ஏற்பட்ட ரம்யமான கிளர்ச்சி, உட்புகும் ஸாயி ஸங்கல்ப வலிமையால் உண்டான கனமான உள்ளெழுச்சி இரண்டையுமே அடியோடு தட்டிவிட்டது அந்தச் செல்லத் தட்டு.

க்ருஷ்ண லீலாவிலும் இதுவே முக்யமான அம்சமல்லவா? அசோதைக்கும், ஆய் மகளிருக்கும் பாலருக்கும் கண்ணன் எத்தனையோ அற்புதம் காட்டினான். ஆனால் அதல்ல அவன் செய்த மாய மந்த்ரம். அவர்கள் பெற்ற அதிசய உணர்ச்சியை உடனேயே அலாக்காக அகற்றி, அவர்கள் தன்னை மானுடமாகக் காண வைத்தானே அதுதான் மாய மந்த்ரம். அந்த 'மாய'த்துக்குப் பேர்தான் அன்பு!

மானுடரோடு மானுடமாக நெருங்கி, ஒருங்கி அன்பில் ஒடுங்கவே கண்ணன் அன்று செய்த அந்த மாய விளையாட்டில் நம் ஸ்வாமி மஹா நிபுணர். பல துறைகளில் புகழெடுத்த எழுத்தாளராகிய பெக்கி மேஸன் அம்மையார் இதைத்தான் அழகுபடச் சொன்னார்: ''ஒருவரை எப்படி உச்சத்துக்கு ஒரே தூக்காகத் தூக்குவது என்று ஸ்வாமி நன்கறிவார். அதே போதில், ஒருவரை எப்படி இந்த பூமி மட்டத்துக்குக் கொண்டு வருவது என்பதையும் நன்றாக அறிந்தவரவர்.''

இந்த பூமி மட்டத்திலேயே தூய அன்பில் வாழத் தொடங்கிவிட்டால் இது 'மட்ட'மாயிராது; உச்சத்தில் உச்சமாய் விடும்! மண்ணே விண்ணாகிவிடும்.

* மேரிலின் ரோஸ்னெர் புட்டபர்த்தியில் பேட்டி பெற்றபோது, இந்த அன்பு 'ஸ்பிரே' ஒன்றையே தம் இதயக் குருத்திலே ஸ்வாமி ''குலு குலு'' வெனத் தெளித்து அதைக் கிளு கிளு என வளம் படுத்துவதை உணர்ந்தார். அதுவே ஆத்மாநுபவக் கொடுமுடிக்கு ஏற்றுவிப்பதையும் கண்டு கொண்டார்.

அதீந்த்ரிய ஆற்றல் பெற்ற 'ஸைகிக்'குகள் என்று சொல்லப்படுவோரில் மேல் நாடுகளில் பெயர் பெற்றவர் ஸ்ரீமதி மேரிலின். ஸ்வாமிக்கு ஸ்வாமித்வமே கிடையாது என்றும், அவரது முக மூடியைத் தாம் பிய்த்தெறியப் போவதாகவும் கங்கணம் கட்டிக் கொண்ட ஒரு ப்ரஸித்தமான யோகி குறிப்பாக, மேரிலினின் ஆதரவைப் பெற்றே இதை ஸாதிக்க எண்ணி அவரது உதவியை 1977-ல் நாடினார். ஆனால் மேரிலினும் அவரது கணவரான ரோஸ்னெர் பாதிரியாரும் ஸத்யத்தையும் ப்ரேமையையும் போற்றுபவர்களாதலால் இந்த முகமூடிப் பிய்ப்புக்கு உடன்படவில்லை. அப்போது அவர்கள் ஸாயி-அநுபவம் எதுவும் பெறாதவர்களேயாயினும் அவர்களது உள்ளுணர்ச்சியும், அதீந்த்ரிய அதிர்வுகளும் ஸ்வாமியை அவர்களுக்குப் போலியாகத் தெரிவிக்கவில்லை.

இரண்டாண்டுகளுக்குப் பின் மேரிலின் கனடா ட. வி. யில் ''பகுத்தறிவுக்கு அப்பால்'' (Beyond Reason) என்று ஒரு தொடர் நிகழ்ச்சி நடத்த ஒப்புக் கொண்டார். ஒப்பந்தப்படி ஓராண்டு முழுதும் தினந்தோறும் இத் தொடர் ஒலி-ஒளி பரப்பப்படவிருந்தது. ஆண்டு முழுவதற்குமான 360 நிகழ்ச்சிகளையும் மூன்றே வாரத்தில் டொரண்டோ ட. வி. நிலையத்தில் நடத்தி, வீடியோ-டேப் செய்து, பிற்பாடு வருஷம் பூராவும் டெலிகாஸ்ட் செய்ய ஏற்பாடாயிற்று.

நிகழ்ச்சி என்ன தெரியுமா? மேரிலினைக் கேள்வி கேட்க வருபவர்கள் நேரே அவர் முன் வரமாட்டார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் ''பியான்ட் ரீஸன்'' என்ற அதே வாசகத்தை ஒரு காகிதத்தில் எழுதி வைத்துவிட்டு மறைவிடத்துக்குச் சென்று விடுவார்கள். அந்தக் காகிதத்தைப் பார்த்தே மேரிலின் பகுத்தறிவுக்கு அப்பாற்பட்ட தன்னுடைய அதீந்த்ரிய சக்தியால், அதில் எழுதியுள்ள ஒவ்வொருவரும் இன்னார், இன்ன தொழிலே செய்கிறார், அவரது வாழ்க்கையில் இன்னின்ன முக்யமான ஸம்பவங்கள் நடந்தன என்று சுருக்கமாகச் சொல்ல வேண்டும். பிறகு அவர்கள் மறைவிடத்திலிருந்து வந்து அது ஸரியா, தப்பா என்று உறுதிப்படுத்துவார்கள்.

புண்படுத்திய அமைச்சர்கள்



சுடந்த சுதந்திர தினவிழா விருதுநகரில் காமராசர் பிறந்த தினவிழா வாகக் கொண்டாடப்பட்டது. அதை

யொட்டிப் போட்டிகள் நடத்தி, அவற்றில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசு வழங்குவதற்காக ஒரு அமைச்சர் வந்திருந்தார். எல்லாச் சுவரொட்டிகளிலும், பெரிய எழுத்துக்களில் போட்டிருந்தனர். நாங்கள், தெரிந்தோர் அனைவரிடமும் இதைக் கூறி, விழாவிற்கு வந்து நாங்கள் பரிசு வாங்குவதைப் பார்க்குமாறு கூறியிருந்தோம். விழாவிற்குச் சென்று சுமார் மூன்று மணி நேரம் காத்திருந்தோம். வேறோர் அமைச்சர் 75 நிமிடத்திற்குப் பேசினார். ஆனால் விழா இறுதியில் நான்கு பேருக்கு மட்டும் பரிசைக் கொடுத்து, மற்ற 8 பேருக்குப் பின்னர் தரப்படும் என அறிவித்தார்கள். எங்கள் எட்டுப்பேருக்குக் கொடுக்க ஐந்து நிமிடம் ஆகியிருக்குமா? மாணவர்கள் மனம் எவ்வளவு புண்பட்டிருக்கும் என்பது அமைச்சர்களுக்கு எங்கே தெரியப் போகிறது?

— ஆர். தியாகராஜன்.

இதற்கு முன் மேரிலின் பன்முறை இச்சாதனையை முற்றிலும் ஸரியாகச் செய்திருந்தவராவார். ஆனால் டீ. வி. நிகழ்ச்சிப் பதிவுக்காகப் புறப்பட்டபோது, 'ஸரியாகச் செய்வோமா? உலகம் சிரிக்குமாறு ஆகிவிடப் போகிறதே?' என்று அவர் பெருங் கவலையில் ஆழ்ந்திருந்தார். அச்சமயம் வேலை நெரிசலாலும் வேறு பல காரணங்களாலும் அவர் மிகவும் களைப்புற்று, 'ஸைகிக்' சக்திகளைத் திரட்டி ஒருமுகப்படுத்த இயலாதவராக இருந்ததே கவலைக்குக் காரணம். விசேஷமான தெய்வ பலமின்றி மானத்தோடு நிகழ்ச்சியை முடித்து வர முடியாதெனக் கண்டார். எனவே பாதிரியாரான கணவரிடம், அவர் மான்ட்ரீலில் இல்லத்து வழிபாட்டறையிலேயே இருந்து கொண்டு, தமக்காக ஆழ்ந்து வேண்டுமாறு கோரி, தாம் மட்டும் டொரன்டோவுக்குப் புறப்பட்டார்.

மேரிலின் அங்கே டீ. வி. படப் பிடிப்பிலுள்ள அதே ஸமயங்களில் இங்கே பாதிரியார் ப்ரார்த்தனையில் அமிழ்ந்தார். ஆண்டவனுக்கும், க்றிஸ்துவுக்கும், முனிவர் பாலுக்கும், மற்ற கிறிஸ்தவ தேவதையர்க்கும் மஹான்களுக்கும் வேண்டுதல் விடுத்தார். முடிவாய் மண்டியிடுகையில் வழிபாட்டுப் பீடத்தில் நம் ஸ்வாமியின் படத்தையும் வைத்து வணங்கினார்.

டொரன்டோவிலிருந்து ஃபோன் வந்தது. அபார உத்ஸாஹத்துடன் பேசினார், வெற்றிகரமாக நிகழ்ச்சி முடித்த மேரிலின்! வெற்றிகரமாக நடத்தித் தந்தவர் ஸ்வாமிதான்! பேரதிசயம் புரிந்துவிட்டிருக்கிறார்!

டீ. வி. நிலையத்தில் மேரிலின் இருந்த கூண்டின் கண்ணாடிக் கதவு சாத்தப்பட்டது. இதோ, படப்பிடிப்பு தொடங்குகிறது. அவர் காகிதத்திலுள்ள கையெழுத்துக்களிலிருந்து ஆள் அடையாளம் சொல்ல ஆரம்பிக்க வேண்டும்! முடியுமா? முடியுமா?

கலவரமுற்று அவர் எழுந்தபோது ஸ்டூடியோ முழுதும் திடீரென ஒரு மெல்லொளி பரவியது. காமிராமான் உள்பட ஸ்டூடியோவில் இருந்த அனைவரும் அதைக் கண்டதாகப் பிற்பாடு தெரிந்தது. ஆனால் அவர்கள் காணாத ஒன்றை ஸைகிக் மேரிலின் கண்டார்! ஒளி இறுகி ஸ்ரீ ஸத்ய ஸாயி மூர்த்தியாகித் தம்முடைய பக்கலிலே நிற்கக் கண்டார்!

மற்ற எவரும் கேட்காத அபய வாக்கையும் மூர்த்தியின் முத்து மொழியில் கேட்டார் மேரிலின். "டோண்ட் ஓர்ரி! ஐ வில் ஹெல்ப் யூ வித் தி ப்ரோக்ராம்" (கவலைப்படாதே! நிகழ்ச்சி நிறைவேற நான் உனக்கு உதவுவேன்).

அடடா! எப்பேர்ப்பட்ட உதவி? மேரிலின் செய்ததெல்லாம் ஒவ்வொருவரது கையெழுத்தையும் பார்த்தது மட்டுமே! உடனுக்குடன் ஸ்வாமிதான் அவரது செவியுள், அந்தக் கையெழுத்தாளர் இன்னார், இன்ன தொழில் செய்பவர், இன்னின்ன முக்ய ஸம்பவம் அவரது வாழ்க்கையில் நடந்திருக்கிறது என்ற விவரங்களைத் தங்கு தடையின்றிச் சொல்லிக் கொண்டு போனார்.

ஸ்வாமி ரஹஸ்யமாகச் சொன்னதையே மேரிலின் டீ. வி. யில் உலகம் கேட்க ஒப்பித்தார். நல்ல பெயரும் தட்டிக் கொண்டார்.

அன்றொரு நாள்தான் இப்படி நடந்ததா? அல்ல. அதன் பின் மீதமிருந்த அந்த அத்தனை நிகழ்ச்சிகளிலும், இப்படியே "ஐ வில் ஹெல்ப் யூ வித் தி ப்ரோக்ராம்" என்ற வாக்குறுதியை ஸத்யமாக்கினார் ஸத்ய ஸாயி!

தொலைக் காட்சியில் தெரியாமலே புட்டபர்த்தியிலிருந்து டொரன்டோ டீ. வி. ஸ்டேஷனுக்குச் "சென்று" மேரிலினுக்கு அண்மைக் காட்சி மட்டுமின்றி, பேச்சும் அளித்து வந்த அற்புதரை அவர் அவ்வாண்டு நவம்பர் பதின்மூன்றும் தேதி புட்டபர்த்தியிலேயே தமது கணவரோடு ஸ்தூலத்தில் [illegible] பேட்டி பெற்றார்.

ஆனால் இப்போது அவர் எள்ளளவேனும் அற்புதராயிருந்தாரா? மேரிலினையாவது அந்த மஹா அற்புதக் காப்பை நினைக்க விட்டாரா? இல்லவே இல்லை.

அன்பராக, அன்புக் குழந்தையாகவே நின்று, அவரை அன்பு "ஸ்ப்ரே"யின் குளுகுளுப்பில் குளிர்வித்து, மிளிர்வித்துக் கரைந்தார்.

பரம எளிமையாக, ரோஸ்மெர் பாதிரியாரிடம், "யு லைக் ஸ்வாமி?" — "உனக்கு ஸ்வாமியைப் பிடித்திருக்கிறதா?" என்று கேட்டார், ஸாக்ஷாத் அந்த ஸ்வாமியே!

கைப் பிடித்துத் தூக்கிக் காக்கும் அற்புதர், தாம் மலைப்பூட்டுபவராயிருக்க விரும்பவில்லை. 'பிடித்தவரா'யிருக்கவே விரும்புகிறார். அதை வெள்ளையாக வெளியிட்டுக் கேட்கும் எளிமையற்புதத்தை அவர் ஒருவர்தான் செய்ய முடியும்!

(தொடரும்)

''மாலிக் பாய், மாலிக் பாய்!''

மூச்சிரைப்புடன் ஓடிவரும் கண்ணனை ஏறிட்டுப் பார்த்தான் மாலிக்.

''என்னடா?'' காற்றடைத்த சைக்கிள் டியூபைத் தண்ணீரில் மூக்கி மூக்கி, பங்க்சரைத் தேடிக் கொண்டிருந்த மாலிக் எரிச்சலுடன் கேட்டான்.

''மாலிக் பாய் உங்க மாமா வூட்லே... ஹாஜி யார் வந்திருக்கார்...!'' அவனுக்கு இன்னமும் மூச்சிரைத்தது.

''ஹாஜியாரா? யார்ரா அது?''

''அதாங்க... உங்க மாமா பொண்ணு ஆயிஷாவைக் கல்யாணம் கட்டிக்கிட்டு, அப்புறமா 'வேண்டாம்'னு வீட்டுக்கு அனுப்பிச்சாரே... அந்த வேப்பம்பட்டிப் பணக்காரர்தான்...''

''என்னது?'' திடுக்கிட்டு எழுந்தான் மாலிக்.

வளர்ச்சியின் ஒவ்வொரு கட்டத்திலும் அழகை உருக்கி உருக்கித் தன் அங்கங்களில் பூசிக் கொண்டு வளர்ந்த மாமன் மகள் ஆயிஷாவை, நரை விழுந்த இந்த நாற்பத்திரண்டு வயதுக் கடுவன் பூனை இரண்டாம்தாரமாக இரண்டு வருடங்களுக்கு முன் கவ்விக் கொண்டு போனதும், ஒரே வருடத்தில் உப்புக்குப் பெறாத காரணம் காட்டித் 'தலாக்' சொல்லிப் பிறந்த வீட்டுக்கு அனுப்பி வைத்ததும் மாலிக்கின் நினைவில் ஊர்ந்தது.

'ஒரு வருடத்திற்குப் பின் எந்த முகமூடி அணிந்து கொண்டு வந்து ஆயிஷாவின் முகத்தை ஏறிட்டுப் பார்க்கும் துணிவு இந்த மனிதனுக்கு வந்தது? ஒருவேளை...'

—நினைத்த போதே நெஞ்சு 'பக்'கென்றது.

''கண்ணு! சித்த நாழி கடையைப் பார்த்துக்க. இதோ வீடு வரைக்கும் போயிட்டு வந்துடறேன்...'' தெருவில் இறங்கி 'விடுவிடு' வென்று மாமன் வீட்டை நோக்கி நடையை எட்டிப் போட்டான் மாலிக்.

ஆயிஷா! •

'விறகுக் கடைக்கார பாஷா பாய்க்கு இப்படியொரு அழகான பொண்ணு!' — என்று அந்தக் கல்தான் பேட்டை கிராமமே மூக்கில் விரல் வைத்தது.

அழகு என்றால் அப்படியொரு அழகு...!' இறைவன் தனக்கு உற்சாகம் வந்த வேளையில் அவளை சிருஷ்டித்திருப்பான் போலும்!

'காஷ்மீரத்து ஆப்பிள்', 'காபூல்திராட்சை' — என்பதெல்லாம் அவள் அழகைக் குறைத்து மதிப்பிடுவதாகவே அமையும். அழகின் அத்தியாயங்கள் அவளிடமிருந்து தொடங்கி அவளிடமே முடிந்திருந்தன.

பாஷா பாய்க்கு ஊரில் சின்னதாக ஒரு விறகுக் கடை. அதிலிருந்து கிடைக்கும் சொற்ப வருமானத்தில்தான் அவர், அவர் மனைவி, மூன்று பெண் குழந்தைகள், மாலிக் என்று இந்த ஆறு பேரும் சாப்பிட வேண்டியிருந்தது.

மாலிக் — சிறுவயதிலேயே தாய் தந்தையரை இழந்து தாய் மாமனான பாஷா பாயின் கரங்களுக்குள் மற்றொரு சுமையாகத் தன்னை இணைத்துக் கொண்டவன்.

ஆண் குழந்தை இல்லாத பாஷா பாய் அந்தச் சுமையைச் சந்தோஷமாகவே ஏற்றுக் கொண்டார்.


பாஷா பாயின் மூன்று பெண் குழந்தைகளில் இரண்டாமவள் ஆயிஷா. தும்பியைப் பிடித்து விளையாடும் பருவத்திலிருந்து ஆயிஷாவே மாலிக்கின் நெருங்கிய தோழியாக இருந்தாள். இருவருக்கும் இரண்டோ மூன்றோ வயது வித்தியாசம். அவ்வளவு தான்.

படிப்பில் படுசுட்டியாக விளங்கிய ஆயிஷா படிப்படியாக வகுப்புக்களைத் தாண்டியபோது அவன் மட்டும் ஐந்தாவது வகுப்பிலேயே முடங்கிப் போனான்.

'இவனுக்குப் படிப்பே ஏறாது' என்று தீர்மானித்த பாஷா பாய், அவனைத் தம் விறகுக் கடையில் கூட மாட ஒத்தாசைக்கு வைத்துக்

விடியும் வரை...

பெமினா



கொண்டார்.

ஆயிஷா எட்டாவது வகுப்பில் அடியெடுத்து வைத்த போது பருவத்தின் கதவுகள் திறந்து கொண்டன.

ஆயிஷாவின் படிப்புக்கு அதோடு முற்றுப் புள்ளி விழுந்தது. அவள் வீட்டுக்குள்ளேயே முடங்கிப் போனாள்.

பருவம் அவள் உடலில் அழகின் புதிய புதியபரிமாணங்களைச்சிரத்தையுடன்செதுக்கிய போது மாலிக் மட்டுமல்ல — அந்தக் கிராமமே அந்த அழகின் ஈர்ப்பு சக்தியில் வியந்து போனது.

மாலிக்அடிக்கடி கண்ணாடியைப்பார்த்துக் கொண்டான். சின்னதாக அரும்பு விடத் தொடங்கியிருந்த மீசையை ஆசையுடன் தடவி விடும்போதெல்லாம் மனம் கனவுகளை நெய்தது.

வருடங்கள் நாலுகால்பாய்ச்சலில்பாய்ந்த போது பாஷா பாய் அங்கே இங்கே என்று கடன் வாங்கி, மூத்த பெண் கதீஜாவை, ரயில்வேயில் 'பாயிண்ட்ஸ்மேனாக' வேலை பார்க்கும் கலீமானுக்குக் கட்டிக் கொடுத்து அனுப்பினார்.

அதோடு கடையும் நொண்டியடித்தது. கடன் சுமை வயிற்றைக் கட்டிப் போட்டது.

'என்ன செய்வது? ஏது செய்வது?' என்று புரியாமல் விழித்துக் கொண்டிருந்தார்.

அந்த நிலையில்தான் பேரிடியாக அந்தச் செய்தி அவரைத் தாக்கியது.

'வேப்பம்பட்டிப் பணக்காரர் அப்துல் ரகுமான் ஹாஜி ஆயிஷாவை இரண்டாம் தாரமாக நிக்காஹ் பண்ணிக் கொள்ள ஆசைப் படறாராம்.'

கொதித்துப் போனான் அவன்.

கண்டிப்புக்குப் பேர் போன மாமனிடம், தலையாட்டிப் பொம்மையாகவே வளர்ந்து விட்ட தன்னால் ஏதும் எதிர்த்துப் பேச முடியும் என்று தோன்றவில்லை. எனினும் 'மாமியிடமாவது தன் எதிர்ப்பைத் தெரிவிக்கலாமே' என்ற எண்ணத்தில் வீட்டுக்குள் நுழைந்தான்.

கூடத்தில் மாமனும், மாமியும் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டுப் பதுங்கிக் கொண்டான்.

''என்னங்க, நல்லா யோசிச்சுப் பார்த்தீங்களா?. ஆயிஷாவுக்கு இருக்குற அழகுக்கு இந்த நாற்பத்திரண்டு வயசு கிழம்தானா கிடைச்சது? வேறே ஏதாவது...''



''என்ன நீ? ஒண்ணும் புரியாம பேசறே? கதீஜாவைக் கட்டிக்கொடுத்ததிலேயே பத்தாயிரத்துக்கு மேல் கடன் இருக்கு. இந்த நிலைமையிலே ஆயிஷா கல்யாணத்துக்கு நான் பணத்துக்கு எங்கே போவேன்? ஏதோ கடவுள் புண்ணியத்துலே சீர் செனத்தி இல்லாமே 'எல்லாச் செலவையும் தானே ஏத்துக்கறதா' அந்தப் பெரிய மனுஷன் சொல்லியிருக்கார். இதைவிட வேறேஎன்ன வேணும்? நாற்பத்திரண்டு வயசு அப்படியொண்ணும் பெரிய வயசில்லையே...?''

''இருந்தாலும் 'முறைப் பையன் மாலிக் இருக்கறச்சே ஒரு வயசானவருக்கு இரண்டாம் தாரமா கட்டிக் கொடுப்பானே'ன்னு ஊர் பேசாதா? அவனுக்கும் நாமதானே செய்யணும்?''

''அதுக்கென்னமே இப்ப? வேணுமின்னு கடைசிப்பொண்ணை அவனுக்கேகட்டிவெச்சுட்டாப் போகுது... இப்ப அவன் சின்னப் பையன்தானே...''

அதற்கு மேலும் அந்த உரையாடலைக் கேட்கப் பிடிக்காமல் அங்கிருந்து விரக்தியுடன் வெளியேறினான் மாலிக்.

ஒரு வேளைச் சோறு சாப்பிடுவதற்குக் கூடத் தாய்மாமன் தயவை வேண்டி நிற்கும் தன்னால் இந்தக் கல்யாணத்தை நிறுத்தவே முடியாது' என்பது புரிந்த மாலிக் செய்வதறியாது திகைத்துப் போனான்.

காரியங்கள் 'மளமள'வென்று நடந்தன.

கல்யாணம் முடிந்து புருஷன் வீட்டிற்குப் புறப்படும் போது, யாருக்கும் தெரியாமல் அவனுக்கு மட்டும் தெரியும்படி இரண்டு சொட்டுக் கண்ணீரைச் சிந்தியவாறு புறப்பட்டாள் ஆயிஷா.

அந்த இரண்டு சொட்டுக் கண்ணீர் அவன் நெஞ்சில் நெருப்பாக எரிந்தது.

அன்றைக்கு மனத்தில் ஏந்திய நெருப்புடன் ஊரை விட்டே போனவன்தான். இரண்டாண்டுகள் எங்கெல்லாமோ அலைந்து, எப்படியெல்லாமோ வாழ்ந்து, இரவு பகல் என்று பாராது காசு சேர்த்து,

''பூஜாரி வரம் கொடுத்தும் தெய்வம் வரம் கொடுக்கலே!''

''நீ என்ன சொல்றே?''

''மந்திரி கடன் கொடுக்கச் சொல்லியும் எங்க பாங்க் மானேஜர் கடன் கொடுக்கலே!''

— கடுவை கோபால்சாமி.



கையில் கொஞ்சம் பணம் சேர்ந்ததும் 'ஊருக்கே போய் ஒரு கடையை வைத்து, 'நான் ஒன்றுக்கும் உதவாதவனல்ல' என்று மாமனுக்கு நிரூபித்துக் காட்டும் வைராக்யத்துடன் கல்தான்பட்டிக்கே வந்து சேர்ந்தான்.

வந்து சேர்ந்தவனுக்கு அதிர்ச்சி காத்திருந்தது...!

கணவனால் 'தலாக்' சொல்லப்பட்டு ஊமை மனமும், உற்சாகமிழந்த உடலுமாய் ஆயிஷாவை அவன் மாமன் வீட்டில் சந்தித்தான்.

''ஆயிஷா...என்னம்மா இதுகொடுமை...?'' அவன் பதறிப் போய்க் கேட்டான்.

''கொடுமையா? இப்பத்தான் நான் சந்தோஷமா இருக்கேன் மாலிக்.''

''அப்படீன்னா அந்த ஆள் உன்னைக் கொடுமைப்படுத்தினானா...? எதுக்காம்...?''

'நாப்பத்திரண்டு வயசு ஆளுக்கு, பதினெட்டு வயசுப் பொண்டாட்டி நின்னாலும், நிமிர்ந்தாலும் சந்தேகம்தான். எதுக்கெடுத்தாலும் சண்டை... சச்சரவு... அடி... உதை...! அம்புட்டையும் பொறுத்துக்கிட்டுத்தான் இருந்தேன். அவர்கிட்டே வேலைசெஞ்சுக்கிட்டிருந்த ஒரு பையன்; என்னை விட இரண்டு வயசு கம்மியிருக்கும்; பாவம் ஊமை; மழையிலே நனைஞ்சு வேலை செஞ்சதாலே கடுமையான காய்ச்சல்; ஒரு தம்பி மாதிரி நெனைச்சிக் கஷாயம் போட்டுக் கொடுத்தேன். ஏறிக்கிச்சு சைத்தான் மண்டை ஓட்டுக்குள்ளே...

'எத்தினி நாளா நடக்குது இந்தக் கள்ளத்தனம்'னு வாய்க்கு வந்தபடி ஏசினார். பேசாம இருந்தேன். 'உனக்கு அவ்வளவு கொழுப்பா ஆ'ன்னு 'தலாக்' சொல்லி ஊட்டுக்கு அனுப்பிச்சிட்டார்...'' எந்த வித வருத்தத்தையும் வெளிக்காட்டாமலசாதுர்யமாகப் பேசினாள் ஆயிஷா.

மாலிக் பற்களை 'நறநற'த்தான்.

எந்தத் தைரியத்தில் இந்த ஆள் மீண்டும் இந்த வீட்டுப் படியேறி வந்தான்...?

—சிந்தனையுடன் வீட்டுக்குள் நுழைந்த போது, கூடத்தில் ஹாஜியாரும், கூட வந்த இரண்டு பேரும் நாற்காலியில் உட்கார்ந்திருக்க, மாமன் சாய்வு நாற்காலியில் யோசனையுடன் உட்கார்ந்திருப்பதைப் பார்க்க முடிந்தது.

இவன் அவர்கள் பார்வையில், படாதவாறு ஒதுங்கி நின்று கொண்டான்.


''இன்னும் என்ன யோசனை பாஷா பாய்... அதான் ஹாஜியாரே உங்களைத் தேடி வீட்டுப் படியேறி வந்திருக்காரே... 'சட்டுபுட்டு'ன்னு முடிவு பண்ண வேண்டியதுதானே...'' கூட வந்திருந்தவர்களில் ஒருவர் சொன்னார்.

''உம்... அது வந்து...'' பாஷா பாய் தம் குறுந்தாடியைத் தடவிக் கொண்டார்.

''ஏதோ நடந்தது நடந்து போச்சு. தப்பு எல்லாம்எம்பேர்லேதான் அதுக்காகஎன்னை மன்னிச்சுக்கிடுங்க... இப்பவும் நான் உங்க மகளை என் பொஞ்சாதியா ஏத்துக்கிடறேன்...'' ஹாஜியார் பவ்யமாகப் பேசினார்.

''அப்புறம் என்ன? 'சரி'ன்னு சொல்லுங்க பாய்'' அடுத்தவர் அவசரப்படுத்தினார்.

நெய்ஸரின் பல்வேறு படைப்புகள்...
இப்போது நீங்கள் வண்ணத்தைத்
தேர்ந்தெடுத்தாலே போதும்



நெய்ஸர் சானிடரிவேர்.
வெள்ளை முதல் கறுப்பு
வரை - எழில் கொஞ்சும்
21 வண்ணங்கள்.

CBM 8778 TM

Neycer

நெய்வேலி ஸெராமிக்ஸ்
அண்ட் ரிஃப்ராக்டரீஸ் லிமிடெட்.
கடலூர் அஞ்சலகம்-607 303,
தென்னாற்காடு மாவட்டம், தமிழ்நாடு.

நெய்ஸர். பாத்ரூமிற்கு நிரந்தர அழகூட்டுவது

'சம்பளம்' என்ற சொல் எப்படி வந்தது தெரியுமா?
பண்டை நாளில் கூலியாக சம்பா நெல்லோடு அளம் (உப்பு) கொடுத்தார்கள்; அதுவே நாளடைவில் சம்பளமாயிற்று.

—ஸ்ரீராஜ்.

''அதுக்கில்லே... அது வந்து...''

''என்ன வந்து போயின்னு.... உங்களுக்கு என் பேர்லே நம்பிக்கையில்லையா...?''

''நம்பறேன்... உங்களுக்குத் திருப்தியும் என் பொண்ணைத் தர எனக்குச் சம்மதம்தான்.. ஆனா...'' பாஷா பாய் இழுத்தார்.

''என்ன ஆனா? சீக்கிரம் சொல்லுங்க..''

''உங்களுக்குத் தெரியாததில்லே. இதிலே சிக்கல் இருக்கு... 'தலாக்' சொன்ன பொண்ணை அதே ஆள் மீண்டும் உடனே கல்யாணம் பண்ணிக்க நம்ம 'ஷரீஅத்'திலே இடமில்லே. அதுக்கு முன்னாடி அவளை இன்னொருத்தன் கல்யாணம் பண்ணிக்கிட்டு ஒரு நாளாவது அவகூட வாழுனும். அதுக்கப்புறம் அவன் 'தலாக்' சொல்லனும். அதுக்கப்புறமாத்தான் பழைய புருஷன் திரும்பியும் அவளைக் கல்யாணம் பண்ணிக்க முடியும்....'' பாஷா பாய் நிதானமாகச் சொல்லிக் கொண்டிருந்தார்.

''அது வாஸ்தவமான பேச்சு... அதுக்கென்ன; ஏதாவது ஓர் ஆளை 'செட்டப்' பண்ணி அவளை அவனுக்கு நிக்காஹ் பண்ணி வெச்சுடுவோம். மறுநாளே அவனைத் 'தலாக்' சொல்ல வைப்போம். அப்புறம் ஹாஜியாரே அவளைக் கட்டிக்கிடறார். இது ஒரு பெரிய காரியமா? உங்ககிட்டே ஆள் இல்லேன்னா சொல்லுங்க; நாங்களே ஒரு ஆளை ஏற்பாடு பண்ணிக்கிறோம்...''

''அதெல்லாம் வேண்டாம். என் தங்கச்சி பையன் ஒருத்தன் என் கூடவே இருக்கான். அவனை வெச்சே காரியத்தைச் சரி பண்ணிடலாம்...''

''அப்ப சரி; அப்படியே செஞ்சுடுங்க... நாங்க வரட்டுங்களா... அஸ்ஸலாமு அலைக்கும்...''

''அலைக்கு முஸ்ஸலாம்...''

அவர்கள் புறப்பட்டுப் போனதும் மாலிக் புயல் போல் உள்ளே நுழைந்தான்.

''நீங்க என்ன நெனைச்சிக்கிட்டிருக்கீங்க மனசுலே... என்னை என்ன இளிச்சவாயன்னு நெனைச்சீங்களா...?'' முதல் முறையாக அவன் தன் மாமனுக்கு நேர் எதிரில் சீறினான்.

அவர் அவனை வியப்புடன் பார்த்தவாறு சொன்னார்: ''ஏதோ பெரிய மனுஷன்... செஞ்ச தப்பைத் தாராளமா ஒத்துக்கிட்டு மாப்பு கேட்டுட்டார். இனியும் அதையெல்லாம் மனசிலே வெச்சுக்க முடியுமா? ஆயிஷாவோட வாழ்க்கையிலே உனக்கு அக்கறை இருந்தா இதைச் செய். இல்லேன்னா நான் வேறே ஆளைப் பார்த்துக்கறேன்....

துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு மாமன் நடையைக் கட்டினார்.

அவன் எரிச்சலுடன் திரும்ப எத்தனிக்கையில் சமையல் அறையிலிருந்து ஆயிஷா அவனை அழைத்தாள்.

''ஆயிஷா... என்னம்மா இதெல்லாம்..?''

''பேசாம ஒத்துக்குங்க...'' முதல் தடவையாக அவனை அவள் 'ங்க' போட்டு அழைத்தாள்.

ஒப்புக்கு ஒரு நிக்காஹ் நடந்து முடிந்த இரவு—

மாலிக் தன் மாமன் வீட்டு முன்னறையில் ஆழ்ந்த சிந்தனையுடன் எங்கோ சூன்யத்தை வெறிக்கப்பார்த்தவனாகக்கட்டிலில்படுத்துக் கிடந்தான்.

அப்போது—

மென்மையான ஒரு கரம் அவன் தோளை இதமாகப் பற்றியதை உணர்ந்து திரும்பிப் பார்த்தான்.

ஆயிஷா!

அந்த முகத்தில் என்றுமில்லாத அமைதி...

அவன் திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தான்...

ஆயிஷா அவன் பக்கத்தில் அமர்ந்தாள்.

''ஆயிஷா... நீ எதுக்கு இங்கே வந்தே...? உன் 'வாப்பா' பார்த்தால்...?'' அவன் சங்கடத்துடன் நெளிந்தான்.

''பார்த்தால்...? என்னைப் 'போகக் கூடாது'ன்னு தடுத்திடுவாரா? என்னை 'கபூல்து' சொல்லி நிக்காஹ் பண்ணிக்கிட்ட ஒரு புருஷன்கிட்டே போகக் கூடாதுன்னு யாரால சொல்ல முடியும்?''

அவனின் பதிலுக்குக் காத்திராமல் ஆயிஷா மௌனமாக அறையை விட்டுச் சென்றாள்.

அவனுக்கு ஏதுவோ புரிந்தது போலிருந்தது.

மறுநாள்:—

கூடத்தில் நான்கைந்து பேர்.... கூடவே ஹாஜியார்!

''பாஷா பாய்... நாழியாவுதே.... சீக்கிரமா பொண்ணையும் பையனையும் வரச் சொல்லுங்க...'' கூட்டத்தில் ஒருவர் அவசரப்படுத்தினார்.

மாலிக் வந்தான்.

உள்ளே சென்ற பாஷா பாய் வெறுப்புடன் திரும்பி வந்தார். ''பொண்ணு வரப் பிரியப்படலே...''

''அதனாலே என்ன? பொண்ணுக்குக் கேக்கற மாதிரி பையன் 'தலாக்'... 'தலாக்'... 'தலாக்'குன்னு மூனு தடவை சொன்னால் போதும். விவகாரம் பைசலாயிடும்...''

''சரி... சரி... சொல்லுப்பா...''

மாலிக் சீறினான்: ''ச்சீ... உங்களுக்கெல்லாம் வெக்கமா இல்லே... கல்யாணங்கறது புனிதமான உறவுன்னுதான் குர்-ஆன்லே சொல்லப்பட்டிருக்கு. அதைக் கொச்சைப்படுத்தி என் பெஞ்சாதியைத் 'தலாக்' சொல்லச் சொல்றதுக்கு நீங்க யாரு? வாழ்நாள் வரைக்கும் அவதான் இனிமே எனக்குப் பெஞ்சாதி. அவளை 'குர்பான்' கொடுக்க இனிமேயும் நான் தயாரில்லே... போங்க இங்கிருந்து...'' மாலிக் வெறிபிடித்தவன் போல் கத்தினான்.

அறை ஜன்னலுக்கு உள்ளே இரண்டு விழிகள் ஆனந்தத்துடன் நீரைச் சிந்தின!



விவரமறிந்தோர் நாடுவது
ஆஸ்ப்ரோ ஆறுதல்
இப்போது 2 வித வீரிய வகைகளில் வருகிறது.
ஆஸ்ப்ரோ , ஆஸ்ப்ரோ 600
சாதாரண தலைவலிக்கு
மண்டை பிளக்கும் கடுமையான தலைவலிக்கு
ASPRO
ASPRO 600
ஆஸ்ப்ரோ
எக்ஸ்ட்ரா ஸ்ட்ரெங்த்
ஆஸ்ப்ரோ 600

நீங்கள் கேட்டவை

— தராசு

ஜெயலலிதா முதல்வரானது போல் கனவு கண்டேன் பலிக்குமா?



* அடுத்த முதல்வர்?!

* லீலா இராம், தக்கலை.

? அண்மைக்கால அரசியலில் 'திடீர்த் திருப்பம்' என எதைக் கோடிட்டுக் காட்டு வீர்கள்?

! கோஷ்டிப் பூசல்களைக் கட்டுப்படுத்த முடியாமல் போன எம். ஜி. ஆர். தானாகவே முதல்வர் பதவியிலிருந்து விலகிக் கொள்வ தாகவும், வேறு ஒருவரை முதல்வராகத் தேர்ந்தெடுத்துக் கொண்டால் அவருக்குத் தான் வெளியிலிருந்தே ஆதரவு தருவதாக வும் அமைச்சரவைக் கூட்டத்தில் அறிவித் தது உண்மையிலேயே ஒரு திடீர்த் திருப்பம் தான். மேலும் சில திருப்பங்கள் ஏற்படவும் வாய்ப்புண்டு.

* த. சத்தியநாராயணன், அயன்புரம்.


? ஜெயலலிதா முதலமைச்சர் ஆகிவிட்ட தாகக் கனவு கண்டேன்; பலிக்குமா?

! எம். ஜி. ஆரின் சமீபத்திய நடவடிக்கை களைப் பார்க்கும்போது பலித்துவிடும் போல் தான் இருக்கிறது!

* க. தாணுமாலயப் பெருமாள், இடலாக்குடி

? 'எம். ஜி. ஆர். எங்களுக்கெல்லாம் தாய்' என்ற ஆர். எம். வீரப்பனின் பேச் சைப் பற்றி...?

* குற்றச்சாட்டு?



* பதவி விலகல்?!



! வீரப்பன் பேசியது உண்மை என்றால், அந்தத் தாய் சொல்லைத் தட்டக் கூடாதே!

* தே. சீனிவாசன், கருங்கல்பாளையம்.

? ஈரேழு உலகத்தையும் மயக்கும் சக்தி யைப் பெண்களுக்கு மட்டும் இறைவன் கொடுத்ததன் மர்மம் என்ன?

! இது உண்மையே அல்ல; உண்மையாக இருந்தால் ஜெயலலிதாவுக்கு எதிர்ப்பே இருக்க முடியாதே! மேலும் ஆண்களுக்கும் மயக்கும் சக்தி உண்டு என்பதைப் பல சந்தர்ப் பங்களில் சரித்திரம் காட்டுகிறதே?

* எம். ராஜேந்திரன், லால்குடி.

? தீபாவளி என்றால் அவசியம் பட்டாசு கொளுத்தித்தான் ஆக வேண்டுமா?

! பட்டாசு கொளுத்துவது குஷியான விஷ யம்தான் என்றாலும் சிவகாசிச் சிறுவர் களின் சோகத்தை நினைக்கும்போது எனக்கு அந்த ஆசையே வருவதில்லை.

* எம். சம்பத், வேலாயுதம்பாளையம்.

? என்னதான் நியாயமான கோரிக்கைகள் என்றாலும் தங்கள் எதிர்ப்பை — உணர்ச்சி களை வெளிப்படுத்தக் கோவண ஊர்வலம் போன்ற அருவருப்பான நடவடிக்கைகளைத் தொழிலாளர்கள் மேற்கொள்வது சரிதானா?

! கோவணம் மட்டும் கட்டிக் கொண்டு ஊர்வலம் போவதில் எந்தவிதமான அருவ ருப்பும் இல்லை தோழரே! ஆனால் தொழிற் சங்கத் தலைவர்களின் சுயலாபத்திற்காகவும், ஆளுங்கட்சிக்குத் தொல்லை தருவதைத் தவிர வேறு எந்த நோக்கமும் இல்லாமலும் நடத்தப் படுகின்ற ஊர்வலங்கள் ஆடைக் குறைப்பு இல்லாவிட்டாலும் அருவருப்பானவை.

* கவி கண்ணன், போடிநாயக்கனூர்.

? 'திருநாவுக்கரசு புடவை துவைத்துக் கொடுத்தார்' என்று காளிமுத்து குற்றம் சாட்டுகிறாரே?

! நான் அப்படிப் பேசவேயில்லை என்று மறுப்பு வந்தாலும் வரும். எதற்கு வம்பு? பொதுவாகச் சொன்னால் அரசியல்வாதிகள் மனம் அழுக்காகியுள்ளது. முதலில் அதைத் துவைத்து வெளுக்க வேண்டும்!

*** என். செந்தில்குமார், மயிலாடுதுறை.**

? பாலகுமாரனுக்கு சினிமா தேவையா?

! சினிமா தேவை என்றுதான் அவர் சென்றிருக்கிறார். ஆனால் சினிமாவுக்கு பாலகுமாரன் தேவைதானா என்பதை அவருடைய ஒரு படமாவது வெளிவந்த பிறகுதான் சொல்ல முடியும்.

*** டி. சீனிவாசன், சென்னை—79.**

? இன்றைய சந்தர்ப்பவாத, சுயநல நோக்கான அரசியலுக்குக் காரணங்களாகத் திகழ்பவை எவை?

! நமக்கேன் வம்பு என்று படித்தவர்களெல்லாம் ஒதுங்கிப் போகும் பொறுப்பின்மை.

*** கே. வி. எஸ். மணியன், குடியாத்தம்.**

? உள்ளாட்சித் தேர்தல்களை மீண்டும் மீண்டும் தள்ளி வைத்துக் கொண்டே போவது தமிழகத்தின் சாதனை என்கிறேன். இதுவும் ஒரு வகையில் புரட்சிதானே?

! ஆமாம்; அண்ணாவின் இதயக் கனியான புரட்சித் தலைவர், பொன்மனச் செம்மலின் ஆசியுடன் கின்னஸில் இடம் பெற முயற்சி செய்யும் புரட்சியேதான்!

*** ஆர். எம். வடுகநாதன், வேதாரண்யம்.**

? ராமகிருஷ்ண ஹெக்டேயின் மகன், மற்றும் உறவினர்களுக்கு எதிராகக் கூறப்படும் ஊழல் புகார்கள் குறித்து என்ன நினைக்கிறீர்கள்?

! குற்றம் சாட்டப்பட்ட உடனேயே தன் மகன் பரத் ஹெக்டேயின் மேல் ஒரு விசாரணைக் கமிஷனை நியமித்து, ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் விசாரித்து அறிக்கை தரும்படி உத்தரவிட்டு விட்டாரே! மற்ற மாநில முதல்வர்களும், ஆட்சியாளர்களும் உதாரணமாகப் பின்பற்ற வேண்டிய நேர்மை அது.

*** எஸ். ஆரோன் பிரபு, திருச்சி—17.**

? கோபத்தை அடக்குவது எப்படி?

! பாரதி கூட 'ரௌத்ரம் பழகு' என்றுதான் பாடியிருக்கிறான். கோபப்பட வேண்டிய விஷயங்களுக்குத் தார்மீகக் கோபம் கொள்வதுதான் நல்லது.


*** வி. பாலகிருஷ்ணன், மோகனூர்.**

? தமிழக அரசு செய்தவற்றில் தங்களுக்குப் பிடித்தமானது எது?

! ஏழை — எளியவர்களின் வாகனமான சைக்கிளில் இரண்டு பேர் பிரயாணம் செய்ய அனுமதித்தது. ஆனாலும் சைக்கிள்காரர்களைப் பாராட்ட முடியவில்லை. மற்ற



* முயற்சி திருவினையாக்கும்.



* சினிமா தேவையா?

நகரங்களில் எப்படியோ, சென்னையைப் பொறுத்தவரை மிகப் பெரும்பாலான சைக்கிள்களில் லைட் கிடையாது; பிரேக்கும் கிடையாது. யாரும் சாலை விதிகளைப் பின்பற்றி மெதுவாகவும் — ஒன்றன்பின் ஒன்றாகவும் ஓட்டிச் செல்வதும் கிடையாது. அதனால் பாதசாரிகள் படும்பாடு கொஞ்சநஞ்சமல்ல... நடந்து செல்லும் யாரும் சைக்கிளில் செல்வோருக்கு மனிதர்களாகக் கூடப் படுவதில்லை. ஆம்; எந்த சைக்கிள் ஓட்டியாவது பெல் அடித்து வழி கேட்கும் வழக்கத்தைக் கொண்டிருக்கிறாரா? ஊகூம். 'உஸ்... உஸ்...' என்று கால் நடைகளை விரட்டுவது போல்தான் குரல் கொடுத்துச் செல்கிறார்கள். சென்னை நகரத்தைச் சீர்திருத்தப் போவதாகத் தடபுடல் அறிக்கை விட்டிருக்கும் போலீஸ் கமிஷனர் தேவாரம் முதலில் இந்த சைக்கிள்காரர்களையாவது திருத்த வேண்டும் என்பதே பாதசாரிகளின் பணிவான விண்ணப்பம்.

*** ஆர். சிவராஜ், லால்குடி.**

? மனம் வேதனையில் இருக்கும்போது எப்படித் தேற்றிக் கொள்வது?

! வேதனையின் வேரே தன்னம்பிக்கைக் குறைவுதான். விவேகானந்தரைப் படித்ததில்லையா நீங்கள்? ஆயிரம் முறை தோல்வியடைந்தாலும் சோர்ந்து போகாமல் 'ஆயிரத்தோராவது முறை முயற்சி செய்யுங்கள்; வெற்றி நிச்சயம். இப்படிப்பட்ட தன்னம்பிக்கையுள்ள மனிதனால்தான் சரித்திரத்திலும் இடம் பெற முடியும்.

*** ரூ. 10 பரிசு பெறுபவர்:**
ஆர். எம். வடுகநாதன்,
டி. டி. பி. ரோடு,
வேதாரண்யம்—614 810.

---

* முன் உதாரணம்.



* ரௌத்திரம் பழகு.



“என்னை யாரும் தேடாதீங்க நான் ரொம்ப பிஸி”



நினைவுகள் நிறைந்திடும் அழியாத
கோலமே வாழ்க்கையெனும் அற்புதம்.
பாசம், நேசம், உல்லாசம், பெருமிதம் போன்ற
நவரசம் ததும்பும் தருணங்கள் எங்கும்,
எப்போதும் நேரலாம்.

அத்தருணமே அவற்றைப்
புகைப்படமாக எடுத்திடுவீர்! குறிப்பாக,
பிளாக் & ஒயிட் பிலிமில் எடுத்தால்
அவை காலமெல்லாம் மங்காது.

புகைப்படங்கள்,
என்றென்றும் வாழும் பசுமையான
நினைவுச் சோலைகள்.



**மனம் அள்ளும்
நினைவுகளை
சிறை கொள்ளும்!**

INDU

**இந்து ரோல் பிலிம்
மற்றும் ப்ரோமைடுகள்**

Sista's – HPF.370.85 TM

பெரியார் உயிருடன் இருந்திருந்தால்...

அமைச்சர் சொன்னது உண்மை அல்ல!

* 'வீரப்பனுக்கு வீழ்ச்சியா?' இரண்டு வார பேட்டியும் கத்தியின் கூர்மையைப் போல் இருந்தது. ஆர். எம். வீ. இந்த அளவுக்கு மனம் திறந்து எந்த பத்திரிகைக்கும் பேட்டி வழங்கியதாகத் தெரியவில்லை. கல்கி என்ன மாய மந்திரம் செய்ததோ, எங்களுக்கு ஒரு பரபரப்பான பேட்டி கிடைத்தது!

திருநெல்வேலி. எஸ். கணேசன்

* திரு ஆர். எம். வீரப்பன் தங்கள் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில், 'ஜெயலலிதாவுக்குத்தான் கூட்டம் கூடுகிறது. ஆகவே அவரைத்தான் தலைவராக ஏற்றுக் கொள்ள வேண்டும்' என்று 'மக்கள் குரலில்' டி. ஆர். ஆர். எழுதினார். அதற்குப் பதில் சொல்வதற்காகத்தான் 'கூட்டம் சேருகிறது என்பதற்காக ஒருவரைத் தலைவராக்கிவிட முடியாது என்பதை உணர்த்த 'பூலான் தேவிக்குக் கூடத்தான் கூட்டம் கூடுகிறது. அதற்காக பூலான் தேவியைத் தலைவராக்க முடியுமா?' என்று பேசினேன்'' என்று குறிப்பிட்டிருக்கிறார்..

அமைச்சர் வெளியிட்ட தகவல் உண்மைக்கு அடியோடு முரண்பட்ட ஒன்றாகும். மக்கள் குரலில் நான் எழுதிய எந்தக் கட்டுரையிலும் அமைச்சர் குறிப்பிடுவதைப் போல எதையும் நான் எழுதவில்லை. நான் நேரிடையாகப் பொறுப்பேற்று நடத்தும் 'நியூஸ் டுடே' ஆங்கில ஏட்டிலும் அமைச்சர் குறிப்பிடுவதைப் போல ஒரு விமர்சனமோ, செய்தியோ வெளியானதில்லை.

சென்னை—24. டி. ஆர். ஆர்.

கைராசிக்காரர் நீர்!

* 'உலக அரங்கில் உஷா' என்ற உங்களின் ஸ்பெஷல் ரிப்போர்ட் கல்கியில் வெளி வந்த தினத்தன்று, அவருக்கு அர்ஜுனா விருது கிடைக்கப் போவதாக செய்தி வருகிறது. பாராட்டுகள், உங்களுக்குத்தான்!

தர்மபுரி—2. வித்யா.

அதை ஏன் விட்டுவிட்டார்?

* திருமதி சுலோசனா சம்பத் அவர்கள் சாராயப் புரட்சியைப் பற்றியும் எழுதியிருந்தால் இன்னும் சிறப்பாக இருந்திருக்கும்!

நாச்சியார் கோவில். எம். கல்யாண சுந்தரம்.

பெரியார் இருந்திருந்தால்....

* எட்டுக் கோடி ரூபாய் செலவில் திருப்பதி வேங்கடாசலபதிக்கு வைரக்கிரீடம் செய்வது பற்றி....? என்ற வினாவுக்குத் தாராக அளித்த பதில் எனக்கு மிக்க உணர்ச்சியைத் தந்தது. தந்தை பெரியார் இப்போது உயிருடன் இருந்தால் தங்கள் அலுவலகத்திற்கு நேரில் வந்து தனது மகிழ்ச்சியைத் தெரிவித்திருப்பார்.

முத்துப்பேட்டை. ந. கருமலிங்கம்,
முன்னாள் எம். எல். ஏ.

தார்மீக உரிமை இல்லை!

* செங்கேணி குப்பம் தட்டம்மை பற்றிய கட்டுரையை வெளியிட்டு அத்தொகுதி சட்டமன்ற உறுப்பினரது கருத்தையும் வெளியிட்டீர்கள். நன்றி. ஆனால் அந்த எம். எல். ஏ. தேர்தலில் வென்றதும் ஒருமுறை கூட இந்த ஊருக்குச் சென்றதே இல்லை. அப்படிப் பட்ட அவர் டாக்டர்களையும், ஊர் கிராம அதிகாரியையும் குறை சொல்வது நியாயமானதல்ல.

திண்டிவனம் தன். நடராஜன், தலைவர்,
நகர மாணவர் காங்கிரஸ்.

இதுபோல் எதுவும் இல்லை!

* சுபாவின் சிறுகதையான 'ஜாதிகள் இருக்குதடி பாப்பா' படித்து முடிக்கும் முன்பே கண்களில் நீர் திரையிட வைத்தது. அண்மை ஆண்டுகளில் படிக்க நேர்ந்த கதைகளுள் இதைவிட வேறு எதுவும் நெகிழ்த்தியதில்லை. இது இந்த நூற்றாண்டின் சிறந்த சிறுகதை என்று மதிப்பிடப்பட்டாலும் நான் வியப்படைய மாட்டேன்.

சென்னை—78. சுப்ர. பாலன்.

அலிபி அல்ல 'அலிபை'தான்!

* ஜெயமன்மதனின் 'சாவி' இரைப்பட விமர்சனம் படித்தேன். 'அலிபி' என்று எழுதிவிட்டு, பக்கத்திலேயே சந்தேகத்துடன் (அலிபை?) என்று எழுதி இருக்கிறார்.

சென்னை உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி வீராசாமி முன், அப்பொழுது அட்வொகேட் ஜெனரலாக இருந்த கே. ராஜா ஐயர் வாதம் செய்து கொண்டிருக்கும்போது 'அலிபி' என்று உச்சரித்தார். உடனே வீராசாமி குறுக்கிட்டு, 'அந்தப் பதத்தின் உச்சரிப்பு 'அலிபி' இல்லை; 'அலிபை' என்பதுதான். இது அட்வொகேட் ஜெனரலுக்குத் தெரியாதது ஆச்சரியமாயிருக்கின்றது' என்று தீர்ப்புக் கொடுத்தார். இந்த விவரம் மறுநாளே தினசரிப் பத்திரிகைகளில் வந்து படித்தது நன்றாக நினைவில் இருக்கிறது.

சென்னை—83. கே. ஆர். கல்யாணராமன்.

* 27.10.85 கல்கியில் வட்ட மேஜை பகுதியில், 'எவ்வளவு லஞ்சம் வாங்கினார் தாசில்தார்' என்ற தலைப்பில் எனது பெயரில் ஒரு கடிதம் இடம் பெற்றுள்ளது. இக்கடிதத்தை நான் எழுதவில்லை என்பதை உறுதிப்படுத்துகிறேன். என் பெயருக்குக் களங்கம் ஏற்படுத்த நினைக்கும் நண்பரே, தயவு செய்து உமது பணி இத்துடன் நின்றால் எல்லோருக்கும் நல்லது.

ஆங்கரை. 'ஆங்கரை ஆனந்'

காவல்துறைக்கு மனச்சாட்சி இல்லையா?

* வங்கியில் 'தினசரி நிதி வசூலிப்போர்' இருவர் கும்பகோணம் தெரு ஒன்றில் சைக்கிளில் பேசிக் கொண்டு சென்று கொண்டிருக்கும்போது தடுமாறி முன்னால் சென்று கொண்டிருந்த சப்–இன்ஸ்பெக்டரின் சைக்கிள் மீது விழுந்துவிட்டனர். அதனால் சப்–இன்ஸ்பெக்டர் தடுமாறிக் கீழே விழ இருந்தார். அதற்காக இருவரையும் காவல் நிலையத்துக்கு அழைத்துச் சென்று அவர்களுக்கே உரிய 'பாணியில்' நையப் புடைத்து சட்டை கிழியும்படி அடித்ததோடு, வெற்றுடம்பிலும் அடித்தும், அவர்களின் மீது வழக்கு ஒன்றும் போட ஏற்பாடு செய்திருந்தனர்.

ஒரு பிரதம மந்திரியைக் கொலை செய்த கொடியவர்களைக்கூட விசாரணையில் வைத்துள்ளபோது, பொது இடத்தில் நடந்த அஜாக்கிரதைக்கு இவ்வளவு கடுமையான தண்டனையா?

காவல் துறையினருக்கு மனசாட்சி என்று ஒன்று கிடையாதா? அவர்களிடத்தில் மனிதாபிமானத்தையே எதிர்பார்க்கக்கூடாதா?

கும்பகோணம். வெ. கோவிந்தன்,
பொதுச் செயலாளர், நகர வங்கி ஊழியர் சங்கம்.

(இக்கடிதம் பரிசு பெறுகிறது!)



கீதாஞ்சலி



சத்யராஜை முதலில் சொல்லியே ஆக வேண்டும். மனிதர் ஸீனுக்கு ஸீன் அப்ளாஸ் ரன்களாய் அடித்துத் தள்ளுகிறார். 'வயசானவங்க எல்லாம் தாத்தாதான். ஆனா எல்லோரும் காந்தித் தாத்தா ஆயிட முடியுமா? அட, நல்லா இருக்கே இந்த உதாரணம்' என்று உவமையையும் சொல்லிவிட்டு, ஷொட்டையும் கொடுத்துக் கொண்டு விளையாடுகிறார். 'குதிரை மேல போற பொண்ணுங்களுக்கெல்லாம் இவர்தான் காட்ஃபாதரா?' இன்னொரு நறுக்கு வசனம். இவருக்காகவே வசனங்கள் எழுதப்படுகின்றனவா அல்லது இவர் மாடுலேஷன் மூலம் உயிர்ப்பிக்கிறாரா? சத்யராஜ் — சபாஷ் ராஜ்!

கவுண்டமணி, அடுத்தபடி அப்ளாஸ் குவிக்கும் சிரிப்பு மன்னர்.

'குரங்கு பொம்மை தத்துவம், குரங்குகளுக்குத்தான், மனுஷனுக்கு இல்லேன்னு நெனைச்சிட்டாங்க' என்று போகிற போக்கில் ஒரு சிரி—சிந்தி வசனம். பெரிய மனிதர் பெண்ணைக் காதலிப்பதும், அதற்காகச் சாமியார் வேஷத்தில் கமிஷன் வியாபாரியாக மாறுவதும், கதையோடு ஒட்டாத தனி ட்ராக்தான் என்றாலும் சிரிக்காமல் இருக்க முடியவில்லை. ஆனாலும் அந்தப் 'பொம்பிளை' வேஷ டான்ஸ் பெரிய திருஷ்டிப் பொட்டு.

மற்றபடி —

ஒரு சாதாரண முக்கோணக் காதல் கதை. ஜாதி வர்ணம், ஹிந்து, கிறித்துவ மோதல் என்று சும்மா சொல்கிறார்கள். ஆழம், அழுத்தம், எல்லாம் மைனஸ். நளினி குதிரை வீராங்கனை. ஆரம்பத்தில் தேள் மாதிரி. அப்புறம் பிள்ளைப் பூச்சி.

அதேபோல் முரளி. ஆரம்பத்திலேயே இந்தப் பூவும், புடவையும் என் காதலிக்காக என்று முதலாளியம்மா நளினியிடம் வெட்டு ஒன்று துண்டு இரண்டாகச் சொல்லியிருந்தால் என்னவாம்? (கதை ஏது அப்புறம் என்று கேட்கிறீர்களா டைரக்டர் ஸார்!) முரளி இயல்பாக நடித்திருக்கிறார்.

பவ்யா. (ஜெமினி பவ்யா அல்ல) இதில் அறிமுகம். கொஞ்சம் இயல்பு தெரிகிறது. டான்ஸ் காட்சிகளில் கொஞ்சம் செயற்கை தெரிகிறது. மற்றபடி பத்து ப்ளஸ் ஒன்று தான்.

ஜி. சீனிவாசன் முதலில் ஊமை என்று ஊகிக்க வைத்து அப்புறம் பேசுகிறார். கண்ணில் ஜீவன் இருக்கிறது. ஓ.கே! கோபாலகிருஷ்ணன் 'கல்லா மண்ணா' ஆட்டத்தில் சேர்க்கப்பட்ட 'ஒப்புக்குச் சப்பாணி' மாதிரி.

அந்த நைட் எஃபக்ட் கிடார் பாட்டு பற்றிக் கொஞ்சம் சொல்ல வேண்டும். பின்னணி பாடுகிற ஆசாமிக்கு மெயின் குரல் கூடவே பிசிறாய் ஒரு குரல் ஒட்டிக் கொண்டு வருகிறது. அந்த மாதிரி குரல்கள்தான் பாத்ரூமுக்கு பாத்ரூம் அல்லாடுகின்றனவே, சினிமாவிலுமா அப்படி ஒரு குரல்! ஸாரி, வேறு பாடகர் பாடியிருந்தால் எடுபட்டிருக்கும். 'ஒரு ஜீவன்' பரவாயில்லை. இசையமைத்தவர் இளையராஜாவாம். நிஜம்மாகவா?


செல்வராஜிடம் கதை என்று கேட்டாலே இந்த மாதிரி காதலைத்தான் தேடி ஓடுவார் போல. அடுத்த தடவை அவர் வித்தியாசமாய் ஒரு கதை எழுத வேண்டும். அதைக் கீதாஞ்சலிக்காரர்கள் பண்ண வேண்டும். அதை நாம் பார்க்க வேண்டும்!

—ஜெயமன்மதன்.

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd. at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600032 (Phone: 431543)

Assistant Editor: P. S. Mani

Editor: K. Rajendran


வளரும் குழந்தைகளுக்கு சுவையான
துணையாக விளங்கும் பால் பிஸ்கட்
BRITANNIA
Milk Bikis
சத்துமிகுந்த, சுவையான பிஸ்கட்.
பிரிட்டானியா

REGISTERED No. M 4392
Registered as a Newspaper in Srilanka

உங்கள் பார்வை-
எமது புதிய சர்வதேச சூட்டிங்குகள் மீது!



பாலிபெஸ்டர் வுல், ஒர்ஸ்டெட் மற்றும் பாலிபெஸ்டர் ப்ளெண்டெட் சூட்டிங்குகள்

சேஸாரி
கலெக்ஷனின் சூட்டிங்ஸ்

பாம்பே டையிங்